விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
dishtv
SATS-TECH
சாட்ஸ் வுக் இன்சினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-3326)

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி 04 திங்கட்கிழமை (20.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 244

# கொழும்பில் எம்மவர் விட்டுக்கொடுக்கும் சூட்சுமம் அறிவீர்!

## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்) எம் கையே எமக்குதவி என்ற வகையில் நாம் முன்னேற வேண்டும். நாங்கள் உதவிகள் பெறும்போது எமக்கு உதவுபவர்கள் எம்மிடம் எதனை எதிர்பார்க்கிறார்கள் என்று ஆராய வேண்டும். நாங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களில் எதைக்கூறி இருப்பினும் அவற்றை நாம் விட்டுக்கொடுக்க வேண்டும் என்றே இவ்வாறு உதவி புரிபவர்கள் எதிர்பார்க்கிறார்கள். கொழும்பில் எம்மவர்கள் விட்டுக்கொடுக்கும் பெருந்தன்மையின் சூட்சுமம் பற்றி இப்பொழுது நீங்கள் அறிந்திருப்பீர்கள் என வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

## ஆசிரிய மாணவி காய்ச்சலால் பலி



(யாழ்ப்பாணம்)
மூன்று நாட்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவி ஒரு 23☛

## புலிகளுக்கு எதிராக போரிட உதவினார்!



(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் கடற்புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபட முன்னாள் இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் இலங்கைக்கு ஒத்துழைப்பு 23☛

## குற்றச் செயல்கள் குறைவடைந்துள்ளன

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)
கடந்த அரசாங்க காலத்தில் அதிகரித்திருந்த குற்றச் செயல்களை தற்போதைய அரசாங்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து பிரதமர் இதனைக் குறிப்பிட்டார். 02☛

## அரசாங்கத்தின் இயலாமை நாட்டின் ஜனநாயகம் அல்ல

### லக்ஸ்மன் யாப்பா சுட்டிக்காட்டு

(கொழும்பு)
அரசாங்கத்தின் இயலாமை நாட்டின் ஜனநாயகம் அல்ல என லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் என்ன கூறினாலும் கைச்சாத்திடப்பட்டுள்ள இலங்கை - சிங்கப்பூர் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை திருத்த முடியாது எனவும் முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அரசாங்கத்தை கவிழ்ப்பதன் 23☛

## காரைநகரில் மோதலை தடுக்க சென்றவர் பலியான சோகம்!

(காரைநகர்)
யாழ்ப்பாணம், காரைநகர் பிரதேசத்தில் சிறிய ரக பாரவூர்தி ஒன்றில் வந்த சிலர் மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் பலியானதுடன், மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார். இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

காரைநகர் வீதியில் உந்துருளியில் பயணம் செய்த ஒருவருக்கு, சிறிய ரக பாரவூர்தியில் வந்த சிலர், உந்துருளியின் வெளிச்சத்தை குறைத்து பயணிக்குமாறு கடுமையாக சாடியுள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த உந்துருளியில் பயணித்தவரும் பதிலுக்கு திட்டியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சிறிய ரக பாரவூர்தியில் இருந்த மூன்று பேர் கொண்ட குழுவினர், உந்து 23☛

## இந்திய வீட்டுத்திட்டமே தற்போது கூட்டமைப்பின் தெரிவு

(கொழும்பு)
வடக்கில் வீடுகள் அமைக்கும் திட்டத்தை எந்த நாடு முன்னெடுக்கின்றது என்பது முக்கியமல்ல, ஆனால் அவ்வாறு அமைக்கப்படும் வீடுகளானது எமது மக்களின் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதானதாக இருக்க வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

வடக்கில் வீடுகளற்ற மக்களுக்கு வீடுகளை அமைத்து கொடுப்பது தொடர்பில் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளை சேர்ந்த நிறுவனங்கள் தமது திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளன.

இந்நிலையில் குறித்த இரண்டு நாடுகளிலும் எந்த நாடு வீட்டுத் திட்டங்களை அமைப்பது என்ற சர்ச்சையான கருத்துக்கள் 23☛

## மருத்துவரின் வீடு புகுந்து கும்பல் அடாவடி

(கொக்குவில்)
யாழ். கொக்குவிலில் மருத்துவர் ஒருவரின் வீட்டுக்குள் நேற்றிரவு புகுந்த கும்பல் ஒன்று அங்குள்ளவர்களை அச்சுறுத்தும் வகையில் அட்டூழியத்தில் ஈடுபட்டு தப்பித்துள்ளது.

தமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து மருத்துவர் இமானுவேல் சாந்த 02☛

## சகலருக்கும் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதே நோக்கம்!

### என்கிறார் சுமந்திரன் எம்.பி

(இரத்தினபுரி)
சகலருக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதே புதிய அரசியலமைப்பின் நோக்கம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக, இரத்தினபுரியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பு என்பது ஒரு சமூக ஒப்பந்தமாகும், இதுவரை நாம் 3 அரசியலமைப் 24☛

## சட்ட நடவடிக்கை; ஆராய அறிவுறுத்து

(கொழும்பு)
முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பான விசாரணை அறிக்கைக்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயுமாறு சட்டமா அதிபர் திணைக்களம் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், நாடாளு 23☛

## புலிகள் குறித்த கருத்துக்கு மன்னிப்பு கோரமாட்டேன்!

### விஜயகலா எம்.பி திட்டவட்டம்



(கொழும்பு)
யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் விடுதலைப் புலிகள் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்காக மன்னிப்புக் கோரவோ, அந்தக் கருத்தை விலக்கிக் கொள்ளவோ போவதில்லை என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் குறித்து அரச நிகழ்வு ஒன்றில் 23☛

## நாயாற்றில் எரிக்கப்பட்ட வாடிகளுக்கு இழப்பீட்டை அரசு வழங்க வேண்டும்

### து.ரவிகரன் கோரிக்கை

(பனிக்கன்குளம்)
நாயாற்றில் தமிழ் மக்களின் வாடிகள் எரிக்கப்பட்டுள்ளமைக்கான இழப்பீட்டினை அரசு பெற்றுக் கொடுக்கவேண்டும் என்று வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

நாயாற்றில் எரியூட்டப்பட்ட வாடிகளின் உரிமையாளர் 23☛

## மரண அறிவித்தல்

### சிவசுப்பிரமணியம் தம்பு சந்திரவதனா



யாழ்.புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி கணேசபுரம் ஜெயந்திநகரை வசிப்பிடமாகவும், விநாயகபுரத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் தம்பு சந்திரவதனா நேற்றுமுன்தினம் (18.08.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயாத்துரை-பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் தம்பு அவர்களின் அன்பு மனைவியும், நவநீதானந்தசிவம் (கனடா), காலஞ்சென்ற நித்தியானந்தசிவம், ஜெயந்திசிவம் (டென்மார்க்), சதாசிவம் (லண்டன்), சந்திரகாந்தி (ஜெயந்திநகர்), சந்திரமதி (மிருசுவில்), மோகனதாஸ் (ஜெயந்திநகர்), லலிதா (விநாயகபுரம்), சாந்தினி (சுவிஸ்), யோக்ன் (சுவிஸ்), ஈசா (விநாயகபுரம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான பரராசசிங்கம், கணேசமூர்த்தி, சிவபாதசுந்தரம், சோமசுந்தரம், கந்தசாமி, தர்மசீலன் மற்றும் குலசேகரம்பிள்ளை, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோமளாதேவி, சத்யப்பிரேமா, சூரியகலா, பாலசிங்கம் (சுவிஸ்), பாலசிங்கம் (மிருசுவில்), சிவராணி, மனோகரன், தயாபரன், லோகேஸ்வரி, தர்மேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சொர்ணம், பரமேஸ்வரி, பூபதி, தேவி, யோகநாயகி, மங்கையர்க்கரசி, தங்கனாச்சி, சிறிகனகராசா, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரியா, தீபன், ஆனந்தன், அஜித், ரகித், ஜெனித், காலஞ்சென்ற பிரகாஸ், பிரதினி, ஜீவன், சதீஸ், சுரேஸ், தினேஸ், வினோதினி, உசா, நிசா, காலஞ்சென்ற ரஞ்சன், கோபி, சுகி, சுகிந்தா, சுஜீவா, நகுலா, காலஞ்சென்ற கீதா, மனோ, மாறன், சுதன், சரண், தட்சா, திக்சா, சர்மிலன், வானு, அபினாஸ், அர்ஜுன், தர்சன், மயூரன், சாரங்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மகாலட்சுமி, சியான், கவிஸ், ஹரிஸ், சேரன், மாறன், தனுஸ், திசானா, ஜயானா, நீதன், நேத்ரா, யாழிசை, துவாரகன், விகாஷ், நிதுன், ஹாசினி, ஹர்சா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (21.08.2018) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பின்னர் அனந்தபுரம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீட்டு முகவரி:
இல.215,
விநாயகபுரம்,
கிளிநொச்சி.

தகவல்:குடும்பத்தினர். தொடர்புகளுக்கு:
ஜெயந்தி-டென்மார்க்:+4530130771, (செல்லிடப்பேசி)+4522260771
செல்வம்:+94770200036 லலிதா:+94764581968,
(சி-3564) ஜெகன்:+94778202473, ரமேஸ்:+41792584342

## ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மகிந்தவுக்கு இனி முடியாது!

### விஜயதாச ராஜபக்ஷ எம்.பி

(கொழும்பு)

19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அமைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மூன்றாவது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என ஜனாதிபதி சட்டத்தரணியும் அமைச்சருமான கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இப்படியான நிலைமையில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியுமா என்று உயர் நீதிமன்றத்தில் சட்ட விளக்கத்தை கோர ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன திட்டமிட்டுள்ளது.

எனினும் ஜனாதிபதியாக பதவி வகிக்கும் ஒருவருக்கு மாத்திரமே இந்த விடயம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் சட்ட விளக்கத்தை கோர முடியும் எனவும் விஜேதாச ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் இரண்டு முறை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி வகித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, 18-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து, மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதியாக பதவி வகிக்கும் நோக்கில், தேர்தலை அறிவித்து போட்டியிட்டார்.

2015-ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித தேர்தலில் மூன்றாவது முறையாக போட்டியிட்ட அவர், ஜனாதிபதியாக பதவி வகித்து கொண்டே; அந்த தேர்தலில் தோல்வியை தழுவினார் என்பது குறிப்பிடத்தக்கது. (மு-1)

## மருத்துவரின்...

குமார், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றிரவு முறைப்பாடு செய்துள்ளார்.

கொக்குவில் சம்பியன் லேனில் நேற்றிரவு 8.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட கும்பல், வீட்டுக்குள் புகுந்து அட்டூழியத்தில் ஈடுபட்டது. வந்தவர்களின் கைகளில் பொல்லுகள் உட்பட கூரிய ஆயுதங்கள் காணப்பட்டன.

வீட்டின் யன்னல் கண்ணாடிகள் உட்பட்ட வீட்டிலிருந்த பெறுமதியான பொருள்களை அடித்து உடைத்துவிட்டு கும்பல் தப்பித்தது. வீட்டிலிருந்த எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று மருத்துவர் இமானுவேல் சாந்தகுமார் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்த பொலிஸார் பல வழிகளிலும் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் குற்றச்செயல்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன என்றும் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஷான் பெர்ணான்டோ, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தெரிவித்திருந்த நிலையில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (மு-101)

## குற்றச் செயல்கள்...

அன்று தீர்க்கப்படாத குற்றச்செயல்கள் அதிகரித்த நிலையில் காணப்பட்டன.

எனினும் தற்போது அவை குறைவடைந்துள்ளன.

நாட்டில் தற்போது போதுமான அளவு சுதந்திரம் அனைத்து தரப்பினருக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். (மு-1)

## மரண அறிவித்தல்



### அமரர்

### மொறிஸ்ஜோய் சுசிலா

**பிறப்பு:27/11/1968**

**இறப்பு:18/08/2018**

இன்று (20.08.2018) பிற்பகல் 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெறவுள்ளது.

தகவல்:-துசாந்தனின் நண்பர்கள், மெல்பேர்ன், அவுஸ்திரேலியா

101/1 AV Road,
Ariyalai, Jaffna.

101/1 ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

# யாழ். மாவட்டத்தில் அதி உயர் வரி செலுத்துநராக நாகரெத்தினம் 8ஆவது வருடமாக கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் புரவுப் பெருமக்கள்விருது விழா கொக்குவில் பூநாறி மரத்தடியிலுள்ள செல்வா பலஸில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் யாழ். மாவட்டத்தில் அதி உயர் வரி செலுத்துநராக தொழிலதிபர் பேரம்பலம் நாகரெத்தினம் 8ஆவது வருடமாக கௌரவிக்கப்பட்டார்.



யாழ்ப்பாணம்-உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் பந்துல ஹப்புத்தந்திரிகே தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஐவன் திசாநாயக்க மேற்படி விருது வழங்கிக் கௌரவித்தார். (இ)

# இம்ரான் கானுக்கு ஜனாதிபதி வாழ்த்து



(கொழும்பு)

பாகிஸ்தானின் புதிய பிரதமராக பதவியேற்ற பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான் கானுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

புதிய பிரதமரின் ஆட்சியின் கீழ் இருநாட்டு உறவுகளை மேலும் பலப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் புதிய பிரதமர் இம்ரான் கானின் ஆட்சியின் கீழ் செழிப்பு மற்றும் சமாதானம் உதயமாகும் என எதிர்பார்ப்பதாக அந்த வாழ்த்துச்செய்திகள் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# சொல்லும் அளவிற்கு விலையுயர்வு இல்லை

## சொல்கிறார் அமைச்சர் அமுனுகம

(கொழும்பு)

சொல்லும் அளவிற்கு நாட்டில் பொருட்களின் விலையுயர்வு இல்லை என்று அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.



கண்டி தவுலகல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது தற்போது பொருட்களின் விலைகள் குறைவாகவே காணப்படுகின்றன.

அன்று பெற்றோல், சமையல் எரிவாயு போன்றவற்றிக்கு செலுத்திய தொகை இன்று அதனை விட குறைவானதாகவே காணப்படுவதாகவும் அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார். (இ-7)

# இம்ரான் கான் பிரதமரானமை முழு உலகிற்கும் எடுத்துக்காட்டு

## மகிந்த—கோத்தா வாழ்த்து







(கொழும்பு)

பாகிஸ்தானின் புதிய பிரதமராக பதவியேற்ற இம்ரான் கானுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் 22 ஆவது பிரதமராக இம்ரான் கான் நேற்று முன்தினம் சனிக்கிழமை பதவியேற்றார். அவருக்கு உலக நாடுகளின் அரசியல் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில், மகிந்தவும் கோத்தாவும் தமது டுவிட்டர் பக்கத்தினூடாக இம்ரான் கானுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

"பாகிஸ்தான் பிரதமராக பதவியேற்ற இம்ரான் கானுக்கு வாழ்த்துக்கள், நீங்கள் உலகக் கிண்ணத்தை வெல்வதற்கு வழிநடத்தியதை போல உங்கள் நாட்டை வழிநடத்த முடியும் என எதிர்பார்க்கின்றோம்" என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் "இம்ரான் கான் பிரதமரானது பாகிஸ்தான், தென் ஆசியா மற்றும் முழு உலகத்திற்கும் ஒரு எடுத்துக்காட்டாகும். தொழில்முறையை வெற்றி கொள்ள முடியும் என்பதை நிரூபித்து காட்டியுள்ளீர்கள்" என கோத்தபாய ராஜபக்ஷ தனது வாழ்த்து பதிவில் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# கடந்த மூன்று வருடங்களில் சுதந்திரம் கிடைக்கவில்லை

## விமல் வீரவன்ச விசனம்



(கொழும்பு)

கடந்த மூன்று வருடங்களுக்குள் நாட்டிற்கு சாதகமான சுதந்திரம் கிடைக்கவில்லை என கூட்டு எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

குறித்த மூன்று வருடங்களுக்குள் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

களுத்துறை பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று வருடங்கள் தொடர்பான தொலைக்காட்சி விவாதம் ஒன்றிற்கு வருமாறு அமைச்சர் சஜித் பிரேமதாஸவிற்கு மீண்டும் சவால் விடுப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# போட்டியிடுவதா? இல்லையா? பின்னர் பார்த்துக்கொள்வோம்

## ஜனாதிபதித் தேர்தல் குறித்து மகிந்த

(கொழும்பு)

நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா? என்பது குறித்து பின்னர் பார்த்துக் கொள்வோம் எனவும், முதலில் முடியுமா? என்பதற்கான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.



பிலியந்தல பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

19 ஆவது திருத்தச் சட்டத்தில் தெளிவில்லாத ஒரு நிலைமை உள்ளது. 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகளுக்கு அச்சட்டம் பொருந்துகின்றதா? இல்லையா ? என்பது குறித்த தெளிவை உயர் நீதி மன்றத்திடம் கோரவேண்டியுள்ளது.

தீர்ப்பு முடியும் என்றால், எனக்கு மட்டுமல்ல, முன்னர் இருந்த சகலருக்கும் அது பொருந்தும் எனவும் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-7)



# இங்கிலாந்தை 'பதை பதைக்க' வைத்தார் பாண்ட்யா

# இந்தியா வலுவான முன்னிலை

இங்கிலாந்தை "பதைபதைக்க" வைத்த பாண்ட்யா தனது முதல் 5 விக்கெட்டுக்கள் என்ற பெறுதியை கைப்பற்றி அசத்த, நொட்டிங்காம் டெஸ்டில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 161 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. இந்திய அணி வலுவான முன்னிலை பெற்றுள்ளது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி, அங்கு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதலிரண்டு போட்டியில் வீழ்ந்த இந்திய அணி 0-2 என பின்தங்கி உள்ளது. மூன்றாவது டெஸ்ட் நொட்டிங்காமில் நடக்கிறது.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில், இந்திய அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட்டுக்களை இழந்து 307 ஓட்டங்களை எடுத்திருந்தது. ரிஷாப் பண்ட் (22) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் ஈரப்பதம் காரணமாக அரை மணி நேரம் தாமதமாக தொடங்கியது. பிரோட் 'வேகத்தில்' ரிஷாப் (24), அஷ்வின் (14) போல்டாகினர். மற்றையவர்கள் ஏமாற்ற, இந்திய அணி முதல் இன்னிங்சில் 329 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

### சர்ச்சை "பிடி"

பின், இங்கிலாந்து அணிக்கு முதல் இன்னிங்சில் அலெஸ்டர் குக், ஜென்னிங்ஸ் ஜோடி ஆரம்பம் வழங்கியது. முதல் விக்கெட்டுக்கு 54 ஓட்டங்கள் சேர்த்தபோது, குக் (29) ஆட்டமிழந்தார். பும்ரா 'வேகத்தில்' ஜென்னிங்ஸ் (20) சிக்கினார். பாண்ட்யா பந்தில் 'சிலிப்' பகுதியிலிருந்த ராகுலிடம் 'பிடி' கொடுத்தார் ரூட். ஆனால், பந்து தரையில் பட்டதாக ரூட் சர்ச்சை கிளப்பினார்.

மூன்றாவது நடுவர் 'ரீப்ளேயில்' பார்த்த போது பந்திற்கு கீழே ராகுல் விரல் இருந்ததால் 'அவுட்' என அறிவிக்கப்பட்டது. ரூட் (16) விரக்தியில் திரும்பினார்.

பாண்ட்யா இம்முறை பேர்ஸ்டோவ் (15), வோக்ஸ் (8), ரஷித்தை (5) வெளி யேற்றினார். பிரோட்டை (0) ஆட்டமிழக்கச் செய்து, டெஸ்டில் முதல் முறையாக 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பட்லர் 39 ஓட்டங்கள் எடுத்தார்.

இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 161 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து 168 ஓட்டங்களால் பின்தங்கி இருந்தது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் பாண்ட்யா 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

168 ஓட்டங்கள் முன்னிலையுடன் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த இந்திய அணிக்கு லோகேஷ் ராகுல் 36 ஓட்டங்கள் எடுத்தார். ரஷித் 'சுழலில்' தவான் (44) சிக்கினார்.

இந்நிலையில் நேற்றைய 2ஆம் நாள் ஆட்ட நேர நிறைவில், இந்திய அணி 2 ஆவது இன்னிங்சில் 2 விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களை எடுத்து, 292 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது. புஜாரா (33), ஹோலி (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### அஷ்வின் காயம்

இந்திய 'சுழல்' வீரர் அஷ்வின் ஒரு ஓவர் மட்டுமே வீசினார். இடுப்புப்பகுதி தசை பிடிப்பு காரணமாக, இரண்டாவது 'செஷன்' முழுவதும் பந்துவீசவில்லை.

### சபாஷ் ரிஷாப்

முதல் இன்னிங்சில் ரிஷாப், 5 விக்கெட் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தார். இதன் மூலம், அறிமுக டெஸ்டில் 5 விக்கெட் வீழ்ச்சிக்கு கைகொடுத்த 4ஆவது இந்திய விக்கெட் காப்பாளரானார். இதற்கு முன், இந்த இலக்கை நரேன் தமானே (எதிர்- பாக்., தாகா, 1955), கிரேன் மோரே (எதிர்-இங்கிலாந்து, லோர்ட்ஸ், 1986), நமன் ஓஜா (எதிர்-இலங்கை, கொழும்பு, 2015) எட்டி இருந்தனர்.

முதல் இன்னிங்சில் ரிஷாப் பண்ட் சந்தித்த 2ஆவது பந்தில் சிக்சர் அடித்தார். இதனையடுத்து, டெஸ்ட் அரங்கில் சிக்சர் அடித்து ஓட்டக் கணக்கை ஆரம்பித்த முதல் இந்திய வீரரானார். ஒட்டுமொத்தமாக, 12ஆவது வீரர் என்ற பெருமை பெற்றார்.

### இரண்டாவது இந்தியர்

நேற்று, இந்திய வீரர் ஹர்திக் பாண்ட்யா 29 பந்துகளில் 5 விக்கெட்டுக்களை சாய்த்தார். இதனையடுத்து, டெஸ்ட் போட்டியில் ஒரே இன்னிங்சில் குறைந்த பந்தில் 5 விக்கெட்டுக்கள் வீழ்த்திய 2ஆவது இந்திய பந்துவீச்சாளர் என்ற பெருமை பெற்றார். முதலிடத்தை ஹர்பஜன் சிங் (24 பந்து, எதிர் - மே.தீவுகள், ஜமைக்கா, 2006) வகிக்கிறார். மூன்றாவது இடத்தில் மனீந்தர் சிங் (33 பந்து, எதிர் - பாக்., பெங்களூரு, 1987) உள்ளார்.

### ஆறாவது இடம்

இந்திய அணி முதல் இன்னிங்சில் 168 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. இதன்மூலம், இங்கிலாந்து மண்ணில் முதல் இன்னிங்சில் அதிக ஓட்டங்கள் முன்னிலை பெற்ற போட்டிகள் வரிசையில் இது 6ஆவது இடம் பிடித்தது.

### ஐந்தாவது குறைந்தபட்சம்

இந்திய அணிக்கு எதிராக சொந்த மண்ணில் இங்கிலாந்து அணி டெஸ்டில் 5ஆவது குறைந்தபட்ச ஓட்டஎண்ணிக்கையைப் (161) பெற்றது.



# பார்சிலோனா வெற்றி

லா லிகா 2018-19 சீசனை மெஸ்சி, கவுட்டினோ ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் பார்சிலோனா வெற்றியோடு தொடங்கியுள்ளது.

ஐரோப்பா நாடுகளில் நடைபெறும் கழகங்களுக்கு இடையிலான கால்பந்து தொடரில் ஸ்பெயினில் நடைபெறும் லா லிகா முக்கியத்துவம் வாய்ந்தது.

2017-2018 சீசனில் பார்சிலோனா சம்பியன் பட்டம் வென்றது. இந்நிலையில் 2018-19 சீசன் நேற்று முன்தினம் தொடங்கியது. பார்சிலோனா தனது முதல் ஆட்டத்தில் நேற்று டிபெர்ட்டிவோ அலெவ்ஸ் அணியை எதிர் கொண்டது.



முதல் பாதி நேரத்தில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. 2ஆவது பாதி நேரத்தில் பார்சிலோனா அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 64ஆவது நிமிடத்தில் மெஸ்சி முதல் கோலை பதிவு செய்தார். 83ஆவது நிமிடத்தில் கவுட்டினோ ஒரு கோல் அடித்தார். இன்ஜுரி நேரத்தில் ஆட்டத்தின் 92ஆவது நிமிடத்தில் மெஸ்சி மேலும் ஒரு கோல் அடிக்க பார்சிலோனா 3-0 என வெற்றி பெற்றது.

மற்றைய போட்டிகளில் ரியல் சோசியேடாட், லெவான்டே அணிகள் வெற்றி பெற்றன. செல்டா எஸ்பான்யல், கிரோனா - வல்லாடோல்ட் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமனிலையில் முடிந்தது.

# ரொனால்டோ ஏமாற்றம்

யுவான்டஸ் அணிக்கான தனது அறிமுக போட்டியில் கிறிஸ்ரியானோ ரொனால்டோ கோல் ஏதும் அடிக்காமல் ஏமாற்றம் அளித்தார்.

போர்த்துக்கல் கால்பந்து அணியின் தலைவரும் உலகின் தலைசிறந்த கால்பந்து வீரருமான கிறிஸ்ரியானோ ரொனால்டோ ரியல் மட்ரிட் அணியில் இருந்து இத்தாலியின் யுவான்டஸ் அணிக்கு மாறினார்.

யுவான்டஸ் அணிக்காக ரொனால்டோ விளையாடிய முதல் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் யுவான்டஸ் சியேவோவேரோனா அணியை எதிர் கொண்டது.

ஆட்டத்தின் 3ஆவது நிமிடத்தில் யுவான்டஸ் அணியின் சமி கேடிரா முதல் கோலை பதிவு செய்தார். 38ஆவது நிமிடத்தில் சியேவோ வேரோனா அணியின் மரியஸ் ஸ்டெபின்ஸ்கி பதில் கோல் அடித்தார்.

இதனால் முதல் பாதி நேரத்தில் இரு அணிகளும் 1-1 என சமநிலை பெற்றிருந்தது. 2ஆவது பாதி நேரம் ஆட்டம் தொடங்கியதும் 56ஆவது நிமிடத்தில் சியேவோவே ரோனாவிற்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. இதை பயன்படுத்தி அந்த அணி இமானுலே ஜியாச்செரினி கோல் அடித்தார்.

இதனால் யுவான்டஸ் 1-2 என பின்தங்கியிருந்தது. 64ஆவது நிமிடத்தில் ரொனால்டா வெளியேறினார். அதுவரை போராடி அறிமுக போட்டியில் அவரால் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் ஏமாற்றத்துடன் வெளியேறினார்.

ரொனால்டோ வெளியேறியதும் 75ஆவது நிமிடத்தில் ஒன்கோல் மூலம் யுவான்டஸிற்கு ஒரு கோல் கிடைத்தது. அதன்பின் இன்ஜுரி நேரமான 93ஆவது நிமிடத்தில் பெர்னார் டெஸ்சி கோல் அடிக்க யுவான்டஸ் 3-2 என வெற்றி பெற்றது.

# கேரளாவில் வெள்ளத்தில் சிக்கியவர்களை கண்டுபிடிக்க 5 செயற்கைக்கோள்கள்



## இஸ்ரோ அனுமதி

(டில்லி)

**இந்தியாவின் கேரள மாநிலத்தில் வெள்ளத்தில் சிக்கியவர்களைக் கண்டுபிடிப்பதற்கு 5 செயற்கைக் கோள்களை பயன்படுத்திக்கொள்ள இஸ்ரோ நிறுவனம் அனுமதி வழங்கியுள்ளது.**

குறித்த நிறுவனம், ஓசியான் சாட்-2, ரிசோர்ஸ் சாட்-2, கார்டோசாட்-2, 2ஏ மற்றும் இன்சாட் 3 டி.ஆர் ஆகிய 5 செயற்கை கோள்களையும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களைக் கண்டுபிடிப்பதற்காக அனுப்பவுள்ளது.

இதனூடாக கேரளாவில் வெள்ளத்தினால் காணாமல் போனவர்கள் கண்டுபிடிக்கப் படுவதுடன் மீட்பு பணிகளை துரிதமாக முன்னெடுக்க கூடியதாக அமையுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்கைக் கோள்களில் காணப்படும் கமராக்கள் துல்லியமாக படம் பிடிக்கும் தன்மை கொண்டதாக உள்ளமையினால் விரைவாக கேரளாவில் வெள்ளத்தில் சிக்கியவர்களை இனங்கண்டு, ஐதராபாத்திலுள்ள தரைக்கட்டுப்பாட்டு நிலையத்துக்கு தகவல் அனுப்பும் எனவும் இந்த தகவலை கேரளாவில் முகாமிட்டுள்ள மீட்பு படையினருக்கு தெரியப்படுத்தி மக்கள் மீட்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த 5 செயற்கை கோள்களும் மழை, வெள்ளம், கடல், நிலப்பரப்பு ஆகியவற்றை ஆய்வு செய்துதரைக் கட்டுப்பாட்டு நிலையத்துக்கு தகவல்களையும், புகைப்படங்களையும் அனுப்பி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)


# மரண அறிவித்தல்



## திருமதி நாகேஸ்வரி சிவப்பிரகாசம்
(கருணா)

சுவாமியார் வீதி, கொழும்புத்துறையைச் சேர்ந்த திருமதி சிவப்பிரகாசம் நாகேஸ்வரி அவர்கள் நேற்று முன்தினம் (18.08.2018) சனிக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சபாரத்தினம் விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற முருகேசு சிவப்பிரகாசம் (முன்னாள் ஆசிரியர் - யாழ் இந்துக்கல்லூரி / முன்னாள் பொது முகாமையாளர் - யா.ப.நோ. கூ.சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி இலட்சுமிப்பிள்ளை பரமானந்தம் அவர்களின் அன்புச்சகோதரியும் சத்தியா (பிரான்ஸ்), கோதை (லண்டன்), பிரணவன் (பிரதேச விற்பனை முகாமையாளர் - Kevilton Electrical Product Pvt Ltd) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரதீபன் (பிரான்ஸ்), இராதேயன் (வைத்தியர்-லண்டன்), வர்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுலோச்சனா (கனடா), பிரபாகரன் (அமெரிக்கா) ஆகியோரின் சிறிய தாயாரும் சின்னத்தம்பி பரமானந்தம், நகுலாம்பிகை, திலகவதி ஆகியோரின் மைத்துனியும் மிருதுளா, ஆயிசன், கஜீபன், மானசா, ஆதிரை, நிருத்தன், சிவப்பிரகா, நித்திலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

20/3, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 3604486

தகவல்:
சி. பிரணவன் (மகன்)

(சி-3557)



# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1942 - 02 - 12 | 2018 - 08 - 19 |

## அமரர். இராசரத்தினம் செல்லக்கண்டு

எமது நண்பரும் மாகாணகல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய திரு. சுப்பிரமணியம் சற்குணராஜா அவர்களின் பாசமிகு மாமியார் அமரர். இராசரத்தினம் செல்லக்கண்டு அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயரில் பங்குகொள்ளும் (சி-3558)

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

லங்கா புத்தகசாலை,
குணசிங்கபுர,
கொழும்பு-12


## 35 வயதுக்கு நிதியமைச்சர் எதிர்ப்பு

(கொழும்பு)

35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே ஆட்டோ செலுத்துவதற்கான அனுமதி வழங்குவது தொடர்பில், கொண்டு வரப்படவுள்ள புதிய சட்டத்துக்கு தான் எதிர்ப்பை தெரிவிப்பதாக, நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

குறித்தவயதெல்லை தொடர்பான சட்டத்தை தான் எதிர்ப்பதுடன், இதனை 25 வயதாக குறைக்குமாறும் தான் கோரிக்கை விடுப்பதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

மாத்தளை உயன்வத்த பகுதியில் அபிவிருத்தி வங்கியின் என்டபிரைஸஸ் ஸ்ரீலங்கா அலுவலகத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# இராசி பலன்

**மீனம்:** தடைகள் விலகி தனவரவுகள் ஏற்படலாம், பூர்வீக சொத்துக்களால் ஆதாயமுண்டு, ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மேடம்:** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், தேக நலனில் அதிக கவனம் தேவை, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பிரயாண பயமுண்டு.

**இடபம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கடன் தொல்லைகள் குறையும், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**மிதுனம்:** வியாபார விருத்தியுண்டு, ஆரோக்கியம் சீராகும், சுபகாரியப் பேச்சுகள் நல்ல முடிவுக்கு வரும், செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்:** அன்பு நண்பர்கள் ஆதரவு தர முற்படுவர், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அருமையான நாள், ஆரோக்கியமான நாள்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | இராசி பலன் | | புத. ராகு |
| கேது. செவ். | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கார்த்திகை, ரோகினி<br>இரவு 12.07 மணிக்கு<br>தனு-சந் | | சூரி |
| சனி | சந் | குரு | சுக் |

**20.08.2018**

ஆவணி 04, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
நவமி முற்பகல் 7.12 மணிவரை
கேட்டை பின்னிரவு 1.39 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை

வளவன்

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், மற்றவர்கள் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரியங்களில் திருப்பங்கள் ஏற்படலாம், இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்:** தொல்லை தந்தவர்களே தோள் கொடுத்து உதவ முன்வரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், ஆரோக்கியம் சீராகும், மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம்.

**தனுசு:** அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, சுப செலவுகள் அதிகரிக்கலாம், உடல் நலனில் கவனம் தேவை, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.


**விருச்சிகம்:** முன்னேற்றம் கூடும் நாள், உறவினர் பகை அகலும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், தேவைகள் பூர்த்தியாகும் நாள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

# புரவுப்பெருமக்கள் விருது விழா - 2018







யாழ்ப்பாணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் புரவுப்பெருமக்கள் விருது விழா -2018 நேற்று முன்தினம் கொக்குவில் பூநாறி மரத்தடியிலுள்ள செல்வா பலஸில் யாழ்ப்பாணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் பந்துல ஹப்புத்தந்திரிகே தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஐவன் திசாநாயக்க கலந்துகொண்டார். (இ-7)

## கிடைக்கின்ற வாய்ப்புக்களை மக்களின் நலனுக்காக பயன்படுத்துங்கள்

### டக்ளஸ் எம்.பி. அறிவுரை

(யாழ்ப்பாணம்)

கிடைக்கப்பெறுகின்ற வாய்ப்புக்கள் ஒவ்வொன்றையும் மக்களின் நலன்களை முன்னிறுத்தியதாக உருவாக்கி எமது மக்களின் வாழ்வியல் தேவைப்பாடுகளை வெற்றி கொள்வதற்கான முயற்சிகளை ஒவ்வொருவரும் முன்னெடுக்க வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கட்சியின் யாழ்மாவட்ட நிர்வாக செயலாளர்கள், பிரதேச நிர்வாக செயலாளர்கள், உதவி நிர்வாக செயலாளர்கள் ஆகியோருடனான சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்; கடந்தகாலங்களில் எமக்குக் கிடைக்கப்பெற்ற பல வாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் எமது மக்களின் நலன்களுக்காக பல்வேறுபட்ட சவால்கள் மற்றும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து அவற்றை சிறந்தமுறையில் மக்களிடம் எடுத்துச் சென்று நாம் சாதித்துக் காட்டியுள்ளோம். ஆனாலும் அவ்வாறான அரசியல் நிலைமை தற்போது காணப்படவில்லை. நாட்டின் தற்போதைய அரசியல் நிலையைப் பார்க்கின்றபோது, நாளுக்கு நாள் எமது மக்களின்அடிப்படைத் தேவைகளும் எதிர்பார்ப்புக்களும் அதிகரித்துக் கொண்டு வருவதையே காணக்கூடியதாகவுள்ளது.

இந்நிலையில் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை எல்லாம் எமது மக்களின் நலன்களுக்கானதாக மாற்றி அவற்றை பெற்றுக்கொடுப்பதற்கான வழிவகைகளை நாம் முன்னெடுப்பதுடன் மேலும் பல சாதகமான வழிகளை உருவாக்கி அவற்றினூடாகவும் எமது மக்களின் நலன்சார் தேவைகளை பூர்த்திசெய்துகொடுக்க நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவிட்டபுரம் செருக்கன் கிணற்றடி அருள்மிகு ஞானவைரவர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 12 ஆம் திகதி முதல் இடம் பெற்று வருகின்றது.

ஆலய வருடாந்த பூசைகள் யாவும் ஆலய குரு பிரம்மஸ்ரீ ச ஈஸ்வரசர்மாவால் நடத்தப்படுவதுடன் இவ் விழாவில் தொடர்ச்சியாக 12 தினங்கள் அபிஷேக திருவிழாக்கள் இடம் பெற்று எதிர்வரும் 23 ஆம் திகதி சங்காபிஷேகம் இடம் பெறவுள்ளது. (இ-7)

## போலி நாணயத்தாள்களுடன் இரண்டு இளைஞர்கள் கைது

(கொழும்பு)

போலி நாணயத்தாள்களை வைத்திருந்த இரண்டு இளைஞர்கள் கலேன்பிந் துனுவெவ ரத்மல்வெலிய பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கலேன்பிந்துனுவெவபொலிஸ் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து நடத்தப்பட்ட சுற் றிவளைப்பில் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்களிடம் இருந்த போலி 1000 ரூபா தாள்கள் 70 பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

23 மற்றும் 20 வயதுடைய ரத்மல்வெட்டிய மற்றும் குருநாகல் பிரதேசங்களைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், கலேன்பிந்துனுவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)



யாழ்.வலி.தெற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் மயானங்களுக்கான முதற்கட்ட சிரமதானப் பணி நேற்று உடுவில் மல்வம் பகுதியில் இடம்பெற்றது.

இதன் போது தவிசாளர் க.தர்சன் உட்பட சகல உறுப்பினர்களும் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். அதேவேளை குறித்த சிரமதான பணிகளில் கிராம உத்தியோகத்தர், மதகுருமார்கள், சமுர்த்தி உத்தியோகத்தர் என பலர் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்கினர்.

## மஹோற்சவ கால சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

அச்செழு மத்தி திருவருள்மிகு நாகதம்பிரான் ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் தேவஸ்தானவருடாந்தமஹோற்சவத்தை முன்னிட்டு விசேட சொற்பொழிவு ஆலய பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம்22.08.2018தொடக்கம் எதிர்வரும் 01.09.2018 வரை இரவு 7.00 மணி முதல் இடம்பெறும் என சொற்பொழிவு ஒழுங்கமைப்பாளர் சமயஜோதி க.நிஜலிங்கம் அறிவித்துள்ளார்.

இதில் சைவப்புலவர்கள், செ.த.குமரன், பொன்.சந்திரவேல்கந்த சத்தியதாசன் குசுமகலிங்கம், இளம் சைவப் புலவர்கள் சுநவநீதன், க.கைலநாதன், த.மனோஜ் குமார் ,சைவ நெறிச் சன்மார்கர் நித்திய பாபுதரன், நித்தியானந்தா ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். (இ)

# கார்கில் நாயகன் கங்கையில் கரைந்தார்

(டேராடூன்)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் "பாரதரத்னா" அடல் பிகாரி வாஜ்பாயின் அஸ்தி நேற்று ஹரித்துவார் நகரில் கங்கை ஆற்றில் கரைக்கப்பட்டது.

உத்தரகாண்ட் மாநிலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் அஸ்தி கலசம் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் வைக்கப்பட்டு யாத்திரையாக கொண்டு செல்லப்பட்டது.

பன்னா லால் பல்லா நகராட்சி கல்லூரியில் இருந்து புறப்பட்ட இந்த யாத்திரை பிரேம் ஆசிரமத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்கு பின்னர் புனித நதியான கங்கையின் பிறப்பிடமான ஹர்கி பவுரி காட் பகுதிக்கு சென்று சேர்ந்தது.



புரோகிதர்கள் மந்திரம் ஓத, ஈமச்சடங்குகளுக்கு பின்னர் வாஜ்பாயின் வளர்ப்பு மகளும், அவரது சிதைக்கு தீமூட்டியவருமான நமிதா கலசத்தில் இருந்த வாஜ்பாயின் அஸ்தியை கங்கை நீரில் கரைத்தனர்.

இந்த சடங்கில் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், பா.ஜ.க. தேசிய தலைவர் அமித்ஷா, உத்தரப்பிரதேசம் முதலமைச்சர் யோகி ஆதித்யாநாத், உத்தரகாண்ட் முதலமைச்சர் திரிவேந்திர சிங் ராவத், வாஜ்பாயின் பேத்தி நிஹாரிக்கா மற்றும் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த எம்.பி., எம்.எல்.ஏக்கள் உள்ளிட்ட ஏராளமான பா.ஜ.க. பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியா-பாகிஸ்தான் இடையிலான கார்கில் யுத்தத்தின் போது பிரதமராக பதவி வகித்த வாஜ்பாய் அப்போரில் இந்தியா வெற்றி பெற பெரும் பங்காற்றியிருந்தார். இதனால் கார்கில் நாயகன் எனப் புகழப்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாணவர்களுக்கிடையிலான பேச்சுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தலைவர் அமிர்தலிங்கத்தின் 91 ஆவது பிறந்த தினத்தினை மூன்னிட்டு வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பேச்சுப் போட்டி நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம்மண்டபத்தில்நடைபெற்றது.

இப்போட்டியானது இரு பிரிவுகளாக நடத்தப்பட்டதோடு பிரிவு 1 தரம் 10, 11 மாணவர்களை உள்ளடக்கியதாகவும் பிரிவு - 2 தரம் 12, 13 மாணவர்களை உள்ளடக்கியதாகவும் நடைபெற்றது. அதன்படி போட்டி முடிவுகள் வருமாறு.

பிரிவு-1

(தரம்-10, 11)

முதலாம் இடம்-தாரணி விஜயகுமார்- யா/ யூனியன் கல்லூரி, இரண்டாம் இடம்- வீவசிங் தருமகுலசிங்கம்- யா/ இராமநாதன் கல்லூரி, மூன்றாம் இடம்- ஜெயசந்திரன் கவினாஸ்- யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.

பிரிவு - 2

(தரம் 12, 13)

முதலாம்இடம்-ஆ.நவோமியா, யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, இரண்டாம் இடம்-தி.திசான், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, மூன்றாம்இடம்-ஜெ.லோகேஸ்வரி, யா/ இராமநாதன் கல்லூரி.

முதலாம் இடம்பெற்ற மாணவர்களுக்கான தங்கப் பதக்கமும் இரண்டாம் இடம்பெற்ற மாணவர்களுக்கான வெள்ளிப்பதக்கமும் மூன்றாம் இடம்பெற்ற மாணவர்களுக்கு வெண்கலப்பதக்கமும் போட்டியில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் 09.09.2018 அன்று யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும் என அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (இ-7)

# நட்டத்தில் இயங்கிய சதொச நிறுவனம் இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றம்

(கொழும்பு)

கடந்த ஆட்சியில் 600 மில்லியன் ரூபாவிற்கும் மேலாக நட்டத்தில் இருந்த லங்கா சதொச நிறுவனம் கடந்த வருடம் 350 மில்லியனுக்கு மேல் இலாப மீட்டும் நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது என பிரதிய மைச்சர் எம்.எஸ். எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.

லங்கா சதொச நிறுவனத்தின்401 ஆவது கிளையை ஓட்டமாவடியின், மாவடிச்சேனையில் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக்கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆட்சிக் காலத்தில் பெரும் நட்டத்தோடும், கடன் சுமையோடும் இயங்கிக் கொண்டிருந்த லங்கா சதொச நிறுவனத்தை அமைச்சர் றிசாட் பதியுதீன் பொறுப் பெடுத்து பாரிய மாற்றத்தை கொண்டு வந்து இலாப மீட்டும் நிறுவனமாக மாற்றியுள்ளார்.

அரசியலுக்கு அப்பால் நாட்டிலுள்ள மக்களுக்கு நியாய பூர்வமான விலையில் பொருட்கள் கிடைக்க வேண்டும் என்கின்ற விடயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட கொள்கை காரணமாக கடந்த ஆட்சியில் 600 மில்லியன்ரூபாவிற்குமேலாக நட்டத்தில் இருந்த லங்கா சதொச நிறுவனம் கடந்த வருடம் 350 மில்லியன் ரூபாவிற்கும் மேல் இலாப மீட்டும் நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது.

மக்களின் வாழ்க்கைச் சுமை குறைய வேண்டும் என்பதற்காக தான் இந்த பணிகளை அரசாங்கம் செய்து கொண்டு வருகின்றது. ஜனாதிபதி மற்றும் பிரதமரின் வழிகாட்டல் நிகழ்ச்சி நிரலில் நாட்டில் அபிவிருத்திவேலைத்திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசாங்கம், நாடு பூராகவும் கம்பெரலிய திட்டத்தை அறிமுகப்படுத்தி பாரிய நிதி ஒதுக்கீட்டை செய்து ஒவ்வொரு பிரதேசத்திலும் இருக்கின்ற மக்களுடைய அடிப்படை தேவைகளை நிறைவு செய்கின்ற வேலைத் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது.

இதேபோன்று ஓட்டமாவடி பிரதேசத்தில் பாரிய மாற்றத்தை கொண்டுவர வேண்டும் என்பதற்காக எல்லா. வசதி வாய்ப்புக்களையும் உள்ளடக்கிய திருமண மண்டபம் மிக விரைவில் 150 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்படவுள்ளது என தெரிவித்துள்ளார். (இ-7)


## நல்லைக்குமரன் மலர்-2018 (26)
## வெளியீட்டு விழா

**காலம்:- 21.08.2018 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி**

**இடம்:- நாவலர் கலாசார மண்டபம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

**தலைவர்:- திரு.இ.த.ஜெயசீலன்**
(சைவ சமய விவகாரக் குழுவின் தலைவரும், யாழ். மாநகர ஆணையாளரும்)

**பிரதம விருந்தினர்:- கௌரவ இம்மானுவல் ஆனல்ட்** அவர்கள் (முதல்வர், யாழ். மாநகர சபை)

**சிறப்பு விருந்தினர்:- திரு.எஸ்.சத்தியசீலன்** அவர்கள்
(செயலாளர், மாகாண கல்வி அமைச்சு, வடமாகாணம், யாழ்ப்பாணம்)

**நிகழ்ச்சி நிரல்**

09.00-9.05 - இறைவணக்கம்- தேவாரம்
09.05-9.10- வரவேற்பு நடனம்
யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவர்கள்
09.10-09.15- வரவேற்புரை- **திரு. அ.சீராளன்**
(யாழ். மாநகர சபை செயலாளரும், சைவசமய விவகாரக் குழு உறுப்பினரும்)
09.15-09.20- தலைமையுரை
09.20-09.50- ஆசியுரை
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**
(நல்லை ஆதீன முதல்வர்)
**சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள்**
(பீடாதிபதி, வீணாகான குருபீடம்)
**சுவாமி சிதாகாசானந்தா**
(வதிவிட ஆச்சாரியார், சின்மயாமிஷன், யாழ்ப்பாணம்)
**செஞ்சொற்சொல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்**
(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
09.50-09.55- சிறப்பு விருந்தினர் உரை
09.55-10.00- பிரதம விருந்தினர் உரை
10.00-10.10- கௌரவிப்பு
**சிவத்திரு. செந்தில்வேல் மோகனதாஸ் சுவாமிகள்** (சந்நிதியான் ஆச்சிரமம்)
அவர்களுக்கு யாழ். விருது வழங்கலும், பொற்கிழி வழங்கலும்
10.10-10.20- ஏற்புரை
10.20-10.30- மலர் வெளியீட்டுரையும், வெளியீடும்
**திரு.ந.விஜயசுந்தரம்**
(கௌரவ பதிப்பாசிரியர்)
**முதற்பிரதி பெறுவோர்**- தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
10.30-10.50- ஆய்வுரை **திரு. சோ.பத்மநாதன்** அவர்கள்
(ஓய்வுநிலை அதிபர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)
10.50-11.00- விசேட பிரதிகள் வழங்கல்
11.00-11.10- பரிசளிப்பு - பேச்சுப் போட்டி- 2018
11.10-11.15- நன்றியுரை- **திரு.பு.ஆறுமுகதாசன்**
(செயலாளர், சைவசமய விவகாரக்குழு)

பயனுள்ள ஆக்கங்கள் பலவற்றைத் தாங்கி நறுமணம் பரப்பும் மலரினைப் பெற்றுப் படித்துப் பயன்பெறும் வண்ணம் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

**சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.**

## வேலையாள் தேவை

முல்லைத்தீவுப் பகுதியில் தோட்டவேலை செய்வதற்கு ஆடு, மாடு வளர்ப்பில் அனுபவமுள்ளவர்கள்தேவை. குடும்பமாக தங்குவதற்கு வசதியுண்டு. சம்பளம் 30,000/-. சாப்பாடு, தங்குமிடம் உண்டு.

தொடர்புகளுக்கு:- 077 168 1697, 076 620 5322

## விற்பனைக்கு

முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள கரைச்சிக் குடியிருப்பில் 6 1/2 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

**0774861948**

(இ-3536)

## பணி நயப்பும் மணிவிழாவும்

**'மணிவிழா நாயகன்'**
**திரு.பரமானந்தம் சுந்தரலிங்கம்**
(விஞ்ஞான ஆய்வுகூட உதவியாளர்- தரம்-1
கிளி/ தருமபுரம் மத்திய கல்லூரி, கிளிநொச்சி)



எமது கல்லூரியில் விஞ்ஞான ஆய்வுகூட உதவியாளராக திரு.ப.சுந்தரலிங்கம் அவர்கள் நெடுங்காலம் ஆற்றிய அரும்பெரும் சேவையையும் பழகிய நட்பையும் நன்றியோடு நினைவு கூர்கிறோம்.

கல்லூரியில் அழியாப் பதிவாக அவரது சேவை என்றும் நிலைத்திருக்கும். அவர் ஓய்வுக் காலத்தில் சிறந்த உடல் உள நலத்துடன் நீண்ட ஆயுள் பெற்று குடும்ப சகிதம் இனிதே வாழ வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவதோடு இன்று (20.08.2018) தனது அறுபதாவது பிறந்தநாளைக் கொண்டாடும் அவரை வாழ்க வாழ்க என வாழ்த்துவதில் பெரும் மகிழ்வடைகின்றோம்.

**சேவை விபரம்**

*04.01.1999- 05.09.2007-* கிளி/ தருமபுரம் மகா வித்தியாலயம்
*06.09.2007- 31.05.2010-* கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியாலயம்
*01.06.2010- 16.06.2015-* கிளி/ தருமபுரம் மத்திய கல்லூரி
*17.06.2015- 02.07.2015-* கிளி/ வட்டக்கச்சி மத்திய கல்லூரி
*03.07.2015- 19.08.2018-* கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி

(C-3551)

**ஊழியர் நலன்புரிச் சங்கம், கிளி/ தருமபுரம் மத்திய கல்லூரி.**

# வாக்காளர்கள் தங்கள் பதிவுகளை பார்வையிட்டு சரிபார்த்துக்கொள்க!

## முல்லை.மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் வாக்காளர்கள் தங்கள் பெயர் பதிவுகளை சரி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் க.காந்தீபன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேர்தல் திணைக்களத்தினால் வாக்காளர்கள் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு அவை மக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலின் போது 72ஆயிரத்து 961பேர் வாக்களிப்பு நிலையங்கள் ஊடாக வாக்களித்துள்ளார்கள்.

இந்நிலையில் புதிய வாக்காளர்கள் பலர் வாக்காளர் இடாப்பில்உள்வாங்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி புதிய வாக்காளர்களின் புதிய விபரங்கள் 136 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் வைக்கப்பட்டுள்ளதுடன் பிரதேச செயலகங்கள், பிரதேச சபை மற்றும் உள்ளூராட்சி தேர்தல் திணைக்களத்திலும் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் இதனை பார்வையிட்டு இதில் வாக்காளர்களின் பெயர்கள் மற்றும் மாற்றங்கள் செய்யவேண்டுமாக இருந்தால் மாற்றம் செய்து கொள்ளலாம் என்றும் முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் க.காந்தீபன் தெரிவித்துள்ளார். (2-315)

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கி வைப்பு





(குருமன்காடு)

வவுனியாவில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வட்க்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வு, சமூக சேவைகள் மற்றும் கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரனால் அண்மையில் வவுனியா சமூக சேவைத் திணைக்களத்தில், வைத்து வவுனியா சமூகசேவைகள் உத்தியோகத்தர் எஸ்.எஸ். வாசன் தலைமையில் உதவித்திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா மற்றும் வவுனியா தெற்கு பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த பெண் தலைமைத்துவங்களைக் கொண்ட பத்து குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சின் குறித்தொதுக்கப்பட்ட ஐந்து இலட்சம் ரூபா நிதியில் குறித்த வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன், வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ரூபினி வரதலிங்கம், சமூக சேவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250-281)

# மருதமடுக்குளத்தின் வாய்க்கால்களை புனரமைப்பதற்கான மதிப்பீடுகள் தயார்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட மருதமடுக்குளத்தின் கீழான நீர்விநியோக வாய்க்கால்களைப் புனரமைப்பதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட மருதநகர் குளம் கடந்த 2013ஆம்ஆண்டு புனரமைக்கப்பட்டுள்ளபோதும், இதற்குட்பட்ட விநியோக வாய்க்கால்கள் இதுவரை புனரமைக்கப்படவில்லை.

இதனால் பயிர்ச்செய்கை காலங்களில் நீர்ப்பாசனம் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன் அதிகளவான நீர் வீண்விரயமாவதாகவும் சுட்டிக்காட்டியுள்ள கமக்கார அமைப்பினர் இதற்குட்பட்ட 4.8 கிலோமீற்றர் நீளமான பிரதான நீர்விநியோக வாய்க்கால்களைப்புனரமைத்து தருமாறு விவசாயிகள் கோரியுள்ளனர்.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த நீர்ப்பாசத்திணைக்களத்தினர் ஒரு கிலோமீற்றர் நீளமான பகுதியை புனரமைப்பதற்கு ஆறு மில்லியன் ரூபா வரையான நிதி தேவையெனவும் இவ்வாறு 4.8 கிலோமீற்றர் நீளமான நீர்விநியோக வாய்க்கால்களில்புனரமைக்கப்படவேண்டிய நான்கு கிலோமீற்றர் நீளமான பகுதியை புனரமைப்பதற்கு 24 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகின்றது என்றும் இதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதி கிடைக்கும் பட்சத்தில் புனரமைப்புப் பணிகளை முன்னெடுக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளதுடன், தற்போது ஒரு மில்லியன் ரூபா நிதிகிடைக்கப்பெற்று அவசரமாக புனரமைக்கப்படவேண்டிய பகுதியில் குறிப்பிட்ட பகுதியை மட்டும் கொங்கீறிட் வாய்க்காலாக புனரமைத்து வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த வாய்க்கால்களை புனரமைத்து தருமாறு இறுதியாக நடைபெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் கோரிக்கை விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# கண்டாவளை பிரதேச செயலாளர் இரு நாட்கள் மட்டுமே கடமையில்

## நிரந்தரமாக எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேசத்திற்கு நிரந்தரமாக பிரதேச செயலாளர் எவரும் இதுவரை நியமிக்கப்படாத நிலையில் சேவைகளை பெற்றுக் கொள்ளும் பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கண்டாவளைப்பிரதேச செயலகத்திற்கான பிரதேச செயலாளராக கடமையாற்றி வந்த கடந்த மார்ச் மாதம் 26ஆம் திகதி கடமையின் போது ஏற்பட்ட தீடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்தைத்தொடர்ந்து கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக இதுவரை நிரந்தர பிரதேச செயலாளர் எவரும் நியமிக்கப்படவில்லை.

கடந்த மார்ச்மாதம் முதல் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பதில் பிரதேச செயலாளராக கடமையாற்றி வரும் நிலையில் வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டுமே குறித்த பிரதேச செயலர் கடமையாற்றும் நிலையில் பிரதேச மக்கள் தமது முழுமையான தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன என்றும் நிரந்தரமான பிரதேச செயலர் ஒருவரை நியமிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை கண்டாவளைப்பிரதேச செயலகத்திற்கான நிரந்தரக்கட்டடத்தின் கட்டுமானப்பணிகள் முழுமைப்படுத்தாமல் காணப்படுவதனால் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரிவு மற்றும் ஏனைய நிர்வாக கட்டமைப்புக்கள் வெவ்வேறு இடங்களில் நீண்டகாலமாக இயங்கி வருகின்றது. இதனால் சேவை பெறுவதில் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.(2-315)




# ஆற்றில் மீன்பிடிக்க முடியாது;

# வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அச்சுறுத்துகின்றனர்

## முள்ளிக்குளம் கிராம மக்கள் விசனம்

(மன்னார்)

மீள் குடியேறியுள்ள முள்ளிக்குளம் கிராம மக்கள் தற்போது தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தமது குடியிருப்பில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஆற்றில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போதும், அப்பகுதியில் உள்ள வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பல்வேறு அசௌகரியங்களை ஏற்படுத்துவதாக முள்ளிக்குளம் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



முள்ளிக்குளம் கிராம மக்கள் பல வருடங்களாக குறித்த ஆற்றில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக மீன் பிடித்தல், மட்டி மற்றும் குவாட்டி போன்றவற்றை பிடித்து தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வந்திருந்தனர்.

இடம் பெயர்ந்த முள்ளிக்குளம் கிராம மக்கள் மீண்டும் முள்ளிக்குளம் கிராமத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மீள் குடியேறினர்.

முள்ளிக்குளம் ஆலயத்திற்கு சற்றுத் தொலைவில் தற்காலிக கூடாரங்களை அமைத்து வாழ்ந்து வரும் இவர்கள் விவசாயம், தோட்டம், மீன்பிடி போன்ற தொழில்களை மேற்கொண்டு வந்தனர்.

தற்போதைய நிலையில் ஆற்றில் மீன்பிடி நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர்.

இந்த நிலையில் கடந்த சில தினங்களாக ஆற்றில் மீன்பிடிக்கச் செல்பவர்களை பிடித்து வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தாக்குவதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த ஒரு சிலரை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பிடித்து மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அபராதம் அறவிடப்பட்டுள்ளதாகவும் அந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வாழ்வாதாரத்திற்கு கஷ்டப்படும் முள்ளிக்குளம் மக்கள் குறித்த ஆற்றில் மீன் பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நிலையில் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதி இங்கு மீன்பிடிக்க முடியாது என கூறி எங்களை தாக்கி அச்சுறுத்துகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயத்தில் தலையிட்டு குறித்த பகுதியில் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் குறித்த நடவடிக்கைகளுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு முள்ளிக்குளம் கிராம மக்களை குறித்த ஆற்றில் எவ்வித தடையும் இன்றி மீன் பிடிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

# இளைஞர்களின் சீரழிவுகளுக்கு பின்னணியில் இருப்பவர்கள் ஆயுதம் தாங்கிய சீருடை அணிந்தவர்கள்

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

(கிளிநொச்சி)

எமது இளைஞர்களின் இன்றைய சீரழிவுக்குக் காரணமாக இருப்பவர்கள் ஆயுதம் தாங்கிய சீருடை அணிந்தவர்களும் அவர்களுடன் சேர்ந்து இயங்குகின்ற குழுக்களுமே பின்னணியில் இருக்கிறார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.



தேசிய இளைஞர்கள்சேவைகள் மன்றத்தின் 30 ஆவது மாவட்ட விளையாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட தேசிய இளைஞர்கள் சம்மேளனத்தினால் பரந்தன் இளைஞர் வட்டக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,


1970 ஆம் ஆண்டுளில் தமிழ்த் தலைவர்கள் அகிம்சை ரீதியில் போராடும் போது அக்காலப்பகுதியில் இருந்த இளைஞர்கள் தங்கள் இனம் பற்றியும் இனத்திற்கு எதிராக சிங்கள தேசம் புரிந்த அடக்கு முறைகளுக்கு எதிராக இளைஞர்கள் பலவாறு செயற்பட்டார்கள்.

கல்வித்தரப்படுத்தல் முறைகளுக்கு எதிராக இளைஞர்கள் சிந்தித்தார்கள். ஆனால் இன்றைய இளைஞர்களை நம் இனம் பற்றியோ தேசம் பற்றியோ சிந்திக்க விடாது அவர்களுக்கு வேறு விதமான சிந்தனைகளை ஊட்டிவிடலாம் என சிங்கள தேசம் கங்கணம் கட்டி நிற்கிறது. அதற்கு ஒரு சில இளைஞர்கள்அடிமையாவதுடன்போதைப் பொருள், வாள்வெட்டு என பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள்.

எம் இளைஞர்களின் இன்றைய சீரழிவுகளுக்கு பின்னணியில் இருப்பவர்கள் ஆயுதம் தாங்கிய சீருடை அணிந்தவர்களே. ஆனால் எமது இளைஞர்கள் இந்த தேசத்திலே கல்வியிலும் விளையாட்டிலும் அதிசிறந்தவர்கள் என்பதை மீண்டும் மீண்டும் தொடர்ந்தும் தக்கவைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆனால் அவற்றை தக்கவைப்பதில் இளைஞர்களின் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் எதிர்கொள்ளும் நெருக்கடியை நாம் அறிவோம். இளைஞர்களின் தமது கல்விக்கு ஏற்ற வேலை வாய்ப்புக்கள் இன்றி அவதிப் படுகிறார்கள். இவற்றை எல்லாம் நாம் எதிர்கொண்டு இந்த மண்ணிலே ஆரோக்கியம் மிக்க இளைஞர் சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மேலும் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் கொழும்பு மாநகரசபை உறுப்பினர்களான பாஸ்கரா, பாலமுரளி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாண இளைஞர்கள் சேவைகள் மன்றப் பணிப்பாளர், இளைஞர்கள் சேவைகள் மன்ற உத்தியோகத்தர்கள், மாவட்ட இளைஞர் கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2)

# நீர்நிலைகள் வரண்டமையையடுத்து கால்நடைகள் குடிநீரின்றி தவிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம், புளியம்பொக்கணை, கல்லாறு ஆகிய பகுதிகளில் கால்நடைகளுக்கான குடிநீரின்றி கால்நடைகள் நீர்தேடி அலையும் அவல நிலை காணப்படுகின்றது.

மாவட்டத்தில் நிலவுகின்ற கடுமையான வரட்சி காரணமாகவே பல்வேறுபட்ட பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

தருமபுரம், புளியம்பொக்கணை, பெரியகுளம், கல்லாறு ஆகிய பகுதிகளில் காணப்பட்ட நீர்நிலைகளில் நீர்வற்றிக் காணப்படுவதனால் கால்நடைகளுக்கான குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இவ்வாறு வரட்சி நிலவும் பகுதிகளில் கால்நடைகளுக்கு தேவையான குடிநீர் கல்மடுக்குளத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் கல்மடுக்குளத்தின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளமையால் குறித்த பகுதிக்கான நீர்விநியோகம் மேற்கொள்ளப்படாத நிலையில் தற்போது கால்நடைகளுக்கான குடிநீர் இன்றிக் காணப்படுகின்றது.

இதனால் கால்நடைகள் குடிநீர் தேடி அலையும் அவல நிலைகாணப்படுகின்றது. (2-315)

# பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு பண உதவி

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் 20 ஆவது பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட போது விசேட தேவைக்குட்பட்டோர் மற்றும் தாய், தந்தையரை இழந்த மாணவர்," மாணவிகள் என 20 பேருக்கு பண உதவிகள் வழங்கி வைக்கப் பட்டன.

சங்கத்தின் தலைவர் எஸ்.ரி.ஜே.இராஜேஸ்வரன் தலைமையில் ஹொரவப் பொத்தான வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டிருந்தார். நிகழ்விற்கு மாலை அணிவித்து வரவேற்கப்பட்ட முதலமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அதனைத் தொடர்ந்து வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையரளர் சங்கத்தின் உறுப்பினர்களால் முதலமைச்சருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவம் அளிக்கப்பட்டது. வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவரால் நினைவுக் கேடயம் ஒன்றும் முதலமைச்சருக்கு வழங்கி வைக்கப்பட்டது. (2-250)

# ஆயிரத்து 100 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் தேவை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் மீள் குடியேறிய ஆயிரத்து 667 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட்ட போதும் 899 குடும்பங்களுக்கான நிரந்தர வீட்டுத் தேவைகள் காணப்படுவதாக பிரதேச செயலகத்தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்குப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளிலும் மூவாயிரத்து 83 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன.

இந்நிலையில் ஆயிரத்து 667 புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டதுடன், பகுதியளவில் சேதமடைந்த 575 வீடுகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

இவைதவிர, இரண்டாயிரத்து 96 மலசலகூடங்கள், 105 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் 208 கிணறுகளும் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஆயிரத்து 709 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

899 குடும்பங்களுக்கான புதிய வீடுகள், 75 குடும்பங்களுக்கான பகுதித்திருத்த வீடுகள், 50 மலசலகூடங்கள், 250 கிணறுகள், 270 திருத்தப்படவேண்டிய கிணறுகள் போன்ற தேவைப்பாடுகள் காணப்படுவதுடன் ஆயிரத்து 100 குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளும் தேவைப் படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)






# பட்டதாரிகள் நேர்முகத் தேர்வில் பாரபட்சம்; போராட்டம் நடத்த முடிபு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகளின் நேர்முக தேர்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் பாரபட்சம் காட்டியுள்ளதால் அதிகளவான பட்டதாரிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு எதிராக போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முக தேர்வு மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையிலான அதிகாரிகள் மேற்கொண்டுள்ளார்கள்.

அவர்கள் நேர்முக தேர்வு செய்யும் போது புள்ளி அடிப்படையில் நேர்முகத்தேர்வு செய்வதாக அறிவித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் 319 வேலையற்ற பட்டதாரிகள் நேர்முகத்தேர்வுக்கு சென்றுள்ளார்கள் என்றும் இதில் 72 பட்டதாரிகளுக்கே நியமன அனுமதி கிடைத்துள்ளது என தெரிவித்த அவர்கள் அதிகூடிய புள்ளியினை கொண்டவர்கள் தெரிவுசெய்யப்படாமலும் குறைந்த புள்ளிகளை கொண்டவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமையும் புலப்பட்டுள்ளது.

நேர்முகத் தேர்வுக்குச் சென்ற அனைத்துப் பட்டதாரிகளின் புள்ளிவிபரத்தைக் காட்டுமாறு அரசாங்க அதிபரிடம் கோரியிருந்தும் பல இழுத்தடிப்புக்களின் பின்னர் அவர்கள் புள்ளிவிபரத்தினை காட்டியுள்ளார்கள். அதில் அதிகளவான புள்ளிகளை பெற்றவர்களின் பெயர்விபரங்கள் தெரிவு செய்யப்படவில்லை.

இந்த நிலையினை கருத்தில் கொண்டு இதில் தெரிவாகாத பட்டதாரிகள் சிலர் 17.08.18 அன்று கொழும்பு சென்று அங்குள்ள தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடம் சென்று முறையிட்டுள்ளோம். அதில் அவர்கள் எங்கள் தகைமைகள் பார்வையிட்டு உங்கள் விபரங்கள் எங்களுக்கு மாவட்ட செயலகத்தால் அனுப்பிவைக்கப் படவில்லை. அவர்கள் அனுப்பிய விபரத்திற்கே நாங்கள் அனுமதிக்கடிதங்கள் கொடுத்துள்ளோம் என்று கூறினர்.

இவ்வாறான செயற்பாட்டிற்கு எதிராக போராட்டம் ஒன்றினை நடத்தவுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (2-281)

# அமெரிக்க விமானப்படை வைத்தியர்கள் வவுனியாவில் இலவச மருத்துவமுகாம்



(பனிக்கன்குளம்)

வவுனியாவில் கடந்த ஒரு வார காலமாக அமெரிக்க விமானப்படை வைத்தியர்களுடன் இலங்கை விமானப் படை வைத்தியர்கள் இணைந்து இலவச மருத்துவ முகாம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தின் ஈரப்பெரியகுளம், அலகல்ல வித்தியாலயத்தில் கடந்த ஒருவார காலமாக இடம்பெற்றுவரும் இலவச மருத்துவ முகாம் நேற்றுடன் முடிவடைந்துள்ளது.

பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு ஆகிய ஆசிய பசுபிக் கண்டங்களைச் சேர்ந்த சுமார் 65 அமெரிக்க விமானப்படை வைத்திய அதிகாரிகளுடன் இணைந்து இலங்கை விமானப்படை வைத்திய அதிகாரிகளும் இச் செயற்றிட்டத்தை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராலயத்தின் பதில் அதிகாரி றெபேட் ஹில்டன் இடம்பெற்றுவரும் இலவச மருத்துவ முகாமை பார்வையிட்டுள்ளார்.

மருத்துவ முகாமில் பொது சுகாதாரம், பல் சுகாதாரம், குழந்தை மருத்துவம் மற்றும் பொறியியல் திட்டங்கள், பொருள் நிபுணர் பரிமாற்றங்கள் ,லவச மூக்குக்கண்ணாடிகள், ஏனைய நோய்களுக்கான



மருந்துகள் என்பன பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வழங்கப்பட்டன. ஆயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் இதில் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர். (2-281)

# வடக்கு-கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் இந்திய – இலங்கை உடன்படிக்கைக்கு முரணானது

## ஈ.பி.ஆர்.எல்.எவ்.தலைவர் சுரேஷ் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில் குறிப்பாக முல்லைத்தீவில் முன்னெடுக்கப்பட்டுவரும் சட்டவிரோத திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு முரணானது என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தக் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வடக்கு-கிழக்கின் நிலத்தொடர்பைத் துண்டிக்கும் விதமாக சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன. இதில் முக்கியமாக முல்லைத்தீவு மாவட்டத்திற்குள் உட்பட்டிருந்த ஏறத்தாழ நாற்பத்தெட்டு கிராமங்களை உள்ளடக்கிய வெலிஓயா பிரதேசத்தை அரசாங்கம் தமிழ் மக்களிடமிருந்து அடாத்தாகப் பறிப்பதற்கான சூழ்ச்சிகளை மேற்கொண்டது. இந்தப் பிரதேசத்தில் பல்வேறுபட்ட கிராமங்களும் வயல் நிலங்களும் மத்தியதர வகுப்பினருக்கான பண்ணைகளுமாக முற்றுமுழுதாக தமிழ் மக்களின் வாழ்விடமாக அவை இருந்துவந்தன.

யுத்த காலத்தில் இங்கிருந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் விரட்டப்பட்டு ஏதிலிகளாக மாற்றப்பட்டது மட்டுமல்லாமல் இப்பிரதேசம் முழுமையாக இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. அப்போதைய நிர்வாக வசதிக்காக இப்பிரதேசம் அநுராதபுரம் மாவட்டத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குளும் கொண்டுவரப்பட்டது. பின்னர், இந்த சமயத்தில் இப்பிரதேசம் மகாவலி அதிகாரசபைக்குள் உள்ளீர்க்கப்பட்டு மகாவலி 'L' வலயம் என்று குறிப்பிடப்பட்டது.


அதே நேரம் இப்பிரதேசத்தின் தமிழ்ப் பெயரான மணலாறு என்பது வெலிஓயா என்று சிங்களத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழர்களை விரட்டி ஏதிலியாக்கியவர்கள் சிங்கள மக்களைக் குடியேற்றத் தொடங்கினார்கள். இதில் பலநூறு சிங்கள மக்கள் கிரிமினல் குற்றச்சாட்டிற்கு உள்ளாக்கப்பட்டு சிறைத் தண்டனை அனுபவித்துவந்த நிலையில் ஊர்காவற்றுறையில் இணைத்துக்கொள்ளப்பட்டு ஆயுதப் பயிற்சிகள் அளிக்கப்பட்டதன் பின்னர் அப்பிரதேசத்தில் குடியேற்றப்பட்டவர்கள்.

வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர்களின் தாயகம் என்ற தமிழ் மக்களின் கோரிக்கையை இல்லாமல் செய்வதற்காக வடக்கு-கிழக்கு நிலத்தொடர்பைத் துண்டிப்பதே இவர்களது முக்கிய நோக்கமாக இருந்தது. அதுமட்டுமன்றி, அநுராதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட வடமத்திய மாகாணத்திற்கு கடலுடனான தொடர்புகளும் தேவை என இதன்மூலம் நியாயப்படுத்தப்பட்டது.

இந்தப் பின்னணியில் இராணுவப் பாதுகாப்புடனான சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது மட்டுமன்றி, வாழ்க்கையில் மகாவலி நீரே வரமுடியாத பிரதேசத்தை மகாவலி அபிவிருத்திச் சபைக்கு உள்ளிட்ட காணிகள் என அடையாளப்படுத்தியதுடன், கடற்கரை அண்டிய தமிழ் மக்களின் கரவலைப் பாடுகள்கூட இந்த மகாவலி அபிவிருத்திச்சபையின்கீழ் கொண்டுவரக்கூடிய கேவலமான நிலையும் அரங்கேறியது.

வடக்கு-கிழக்கின் நிலத்தொடர்பைத் துண்டிக்கும் இவர்களின் வேலைத்திட்டம் யுத்தகாலத்தில் பின்தள்ளப்பட்டிருந்தது. ஆனால் யுத்தம் முடிந்ததற்குப் பின்னர், தமிழ் மக்களிடமிருந்து பறித்தெடுத்த காணிகளை நிரந்தரமாக சிங்கள மக்களுக்கு வழங்கியது மாத்திரமல்லாமல், அதற்கான உறுதிகளையும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிங்கள குடியேற்ற வாசிகளுக்கு வழங்கி வைத்தார்.

இந்த நிலையில் தற்போது ஆட்சியிலுள்ள நல்லாட்சி அரசாங்கம் என்று சொல்லக்கூடிய மைத்திரி-ரணில் கூட்டு அரசாங்கமானது இதே நிகழ்ச்சி நிரலை தொடர்ந்தும் முன்னெடுத்து வருவதை நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. நாயாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் போன்ற பிரதேசங்களை உள்ளடக்கிய 2500 ஹெக்டெயருக்கும் மேற்பட்ட காணிகளை மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குக் கொண்டுசெல்வதன் மூலம் அங்குள்ள தமிழ் மக்களை விரட்டியடித்து, சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை இவ் வரசாங்கமும் மேற்கொண்டு வருகிறது.



சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருக்கும் சிங்கள மீனவர்களை அங்கு தொடர்ச்சியாக வைத்திருப்பதற்கான அரச உதவிகளும் இராணுவ ஆதரவுகளும் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றன. இதேபோல் அம்மக்களுக்கான குடியிருப்புக் காணிகளை வழங்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிதாக பௌத்த ஆலயங்களும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

பதினாறு கிராம உத்தியோகத்தர் பிரிவுடன் ஒரு புதிய பிரதேச செயலாளர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இது தற்போதைய முல்லைத்தீவு மாவட்ட குடிசனப் பரம்பலிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய செயற்பாடுகள் இவ்வளவு தூரம் நடைபெற்றும் கூட, சட்டவிரோதமான இந்த வேலைத்திட்டங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு நல்லாட்சி அரசாங்கத்துடன் இணக்க அரசியலில் ஈடுபட்டிருக்கும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்? என்றவினா அனைவரிடமும் எழுந்துள்ளது.

மக்கள் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் தமிழ் மக்களின் இருப்பையே கேள்விக்குட்படுத்தும் அரசாங்கத்தின் இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் நாடாளுமன்றத்தினூடாகவும், சர்வதேச சமூகத்தினூடாகவும் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பும் கடமையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உண்டு.

அதுமட்டுமன்றி, தமிழ் மக்களின் இருப்பைக் காப்பாற்றுவதற்காக இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினூடு வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு அது ஒரு மாகாணம் என்ற அந்தஸ்தையும் எட்டியது. இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் அறிமுக உரையிலேயே "வடக்கு-கிழக்கு என்பது தமிழ் மக்களின் பாரம்பரிய வாழிடம்" என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனால், இன்று இத்தகைய சட்டவிரோத சிங்களக் குடியேற்றத்தினூடாக வடக்கு-கிழக்கு நிலத்தொடர்பைத் துண்டிக்கும் விடயம் என்பது இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கும் விரோதமான ஒரு செயற்பாடாகும்.

ஆகவே, இவ்வாறான செயற்பாடுகளை இந்திய அரசு கண்டிப்பது மட்டுமன்றி, அதனைத் தடுத்து நிறுத்தவும் முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## நாமல் நாட்டின் தலைவராவதை எவராலும் தடுக்க முடியாதாம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வயதெல்லை நிர்ணயிக்கப்பட்டு போட்டியிடும் வாய்ப்புக்குத் தடை ஏற்படுத்தினாலும் எதிர்காலத்தில் ஒருநாள் நாமல் ராஜபக்ஷ நாட்டின் தலைவராக பதவிக்கு வருவதை எவராலும் தடுக்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நாடாளுமன்ற விவகார செயலாளர் குமாரசிறி ஹெட்டிகே தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் 5ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள அரசாங்கத்திற்கு எதிரான போராட்டம் தொடர்பாக நுகேகொடையில், அரசியல் செயற்பாட்டாளர்கள் சிலருடன் கலந்துரையாடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் மகிந்த ராஜபக்ஷ உட்பட நான்கு ராஜபக்ஷவினரின் ஜனநாயக உரிமைகளைப் பறிக்க மேற்கொண்டுள்ள முயற்சியை உலகில், மனிதவுரிமைகளை மதிக்கும் எவரும் அங்கீகரிக்க மாட்டார்கள். இவ்வாறான செயற்பாடுகள் ஆட்சியாளர்களுக்கு ஒருநாள் படுகுழியாக மாறும்.

சட்டதிட்டங்கள், வதைகள், தடைகள் மூலம் மக்களின் ஆதரவை வென்றெடுத்தவர்களின் எதிர்காலப் பயணத்தை நிறுத்த முடியாது. நாடு தற்போது அராஜக நிலையில் உள்ளது.

நாட்டின் பொறுப்பு மகிந்த ராஜபக்ஷவின் கைகளுக்குச் செல்ல வேண்டும் என நாட்டின் பெரும்பான்மையான மக்கள் கருதுகின்றனர். கிராமத்திலும் நகரத்திலும் தொழில் நிலையங்களிலும் இந்தக் குரல் உரத்துக் கேட்கிறது. எதிர்வரும் 5ஆம் திகதி கொழும்பு அதிரும்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு மீண்டும் ஆணையை வழங்க மக்கள் தயார். 19ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து அந்த உரிமையைப் பறித்தனர்.

அது அவசரத்தில்கொண்டு வரப்பட்ட சட்டம். இதன் மூலம் பசில், கோத்தபாய, நாமல் ஆகிய மூவருக்கும் தடையேற்படுத்தினர். இது ஜனநாயக விரோதம். மனித உரிமை மற்றும் அடிப்படை உரிமையை மீறும் செயல் எனவும் குமாரசிறி ஹெட்டிகே தெரிவித்தார். (இ-7)

## வெள்ள நீரைக் கட்டுப்படுத்த கொழும்பில் வேலைத்திட்டம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் வெள்ள நீரை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் பல, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, 36 வேலைத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த வேலைத்திட்டப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டங்களுக்கு அமைய, 3 இறைப்பிகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இவை, அம்பதலை, மாலபே, தலங்கம, எவரிய ஹென ஆகிய பிரதேசங்களில் வெள்ள நீரைக் கட்டுப்படுத்தும் வகையில் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## திருட்டு மின்சாரம்

## கொழும்பில் 110 பேர் கைது

(கொழும்பு)

தொட்டலங்க - ஹஜிமா வத்தையில் திருட்டுத்தனமாக மின் இணைப்பை பெற்றிருந்த 110 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை மின்சார சபையின் விசேட சுற்றிவளைப்பு பிரிவால் நேற்று முன்தினம் அதிகாலை இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பு முகத்துவாரம் பொலிஸாரின் உதவியுடன் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக மின்சக்தி அமைச்சின் ஊடகப்பேச்சாளர் சுலக்ஷன ஜெயவர்த்தன தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டுள்ள நபர்கள் கிராண்பாஸ் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் திருட்டு மின்சாரக் குற்றச்சாட்டில் பெருமளவானோர் கைது செய்யப்பட்டுள்ளமை இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நால்வர் மரணம்; இருவரும் மீண்டும் விளக்கமறியலில்

(கொழும்பு)

வாத்துவ பகுதியிலுள்ள ஹோட்டலில் இடம்பெற்ற களியாட்ட நிகழ்வின் போது திடீரென சுகவீனமடைந்திருந்த நான்கு பேர் உயிரிழந்த சம்பவத்தில் கைது செய்யப்பட்ட இரண்டு பேரும் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

களியாட்ட நிகழ்வை ஏற்பாடுசெய்தநிறுவனம்பதிவுசெய்யப்பட்ட உரிமையாளரின் கணவன் மற்றும் பிரசார அதிகாரி ஆகிய இருவரும் கடந்த 09 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இந்த இரண்டு பேரும் கடந்த 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களின் விளக்கமறியலை மேலும் நீடிக்க பாணந்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி இருவரும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வாத்துவ பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் அண்மையில் இடம்பெற்ற க்ளியாட்ட நிகழ்வின் போது திடீரென சுகவீனமடைந்த நான்கு பேர் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மகிந்தவை பழிவாங்கினால் எதிர் விளைவுகள் ஏற்படும்

## அரசிற்கு பந்துல எச்சரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவைப் பழி வாங்குவதாக நினைத்துக் கொண்டு அரசாங்கம் தனக்குத்தானே பாதாள குழியினைத் தோண்டிக் கொள்கின்றது. அரசாங்கத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளும் அரசாங்கத்திற்கே எதிர்விளைவு களை ஏற்படுத்தும் எனக் கூட்டு எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன எச்சரித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மகிந்த ராஜபக்ஷவிடம் பொய்யான குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டனர். இவ்விடயத்தின் பின்னணியில் அரசாங்கத்தின் இராஜதந்திரங்களே காணப்படுகின்றன. எமக்கு எதிராக அரசாங்கம் கடந்த மூன்று வருட காலமாக குற்றச்சாட்டுக்களை மாத்திரமே மேற்கொண்டுள்ளது.

முறையற்ற பொருளாதார கொள்கைகளை கொண்டுள்ள ஐக்கிய் தேசியக் கட்சியின் நிர்வாகத்தின் காரணமாக இன்று பொதுமக்கள் குறிப்பாக நடுத்தர மக்கள் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்துவதை விடுத்து எம்மீது குற்றம் சுமத்துகின்றது.

இன்று மக்கள் தேசிய அரசாங்கத்தின் ஆட்சியின் பலனை நன்கு அனுபவித்து விட்டார்கள். கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சிமன்ற தேர்தலின் பெறுபேறுகள் அரசாங்கத்திற்கு பாரிய பதிலடியினை ஏற்படுத்தியது. அன்றிலிருந்து அரசாங்கம் தனது வேலைத் திட்டங்களிலும், அமைச்சரவையிலும் பாரிய மாற்றங்களை எற்படுத்தியது. ஏற்படுத்திய மாற்றங்களினால் இதுவரை காலமும் எவ்வித மாற்றங்களும் மக்கள் மத்தியில் ஏற்படவில்லை.

கடந்த அரசாங்கத் தரப்பை சட்டத்தின் முன் குற்றவாளிகளாகக் காட்டித்தான் தேசிய அரசாங்கம் மக்கள் மத்தியில் நற்பெயரை பெற வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. மிகுதியாக உள்ள காலத்தில் மக்களுக்கு சிறந்த சேவையினை ஆற்றினால் மக்கள் தேசிய அரசாங்கத்தை விரும்பினால் தோற்றுவிப்பார்கள். ஆனால் 2015ஆம் ஆண்டு செய்த தவறை மீண்டும் மக்கள் ஒருபோதும் செய்ய மாட்டார்கள்.

சர்வதேசத்தின் குப்பையாக இன்று இலங்கை மாற்றப்பட்டு வருகின்றது. சிங்கப்பூர் நாட்டுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்று தெரிந்தும் அரசாங்கம் அதனை அமுல்படுத்தும் நோக்கத்திலே செயற்படுகின்றது. கடந்த காலங்களில் இந்த உடன்படிக்கையினை கைவிட வேண்டும் என்று பல்வேறு தொழிற்சங்கங்கள் போராட்டங்களை நடத்தியும் அரசாங்கம் அவற்றை கவனத்திற் கொள்ளாமல் தான் தோன்றித்தனமாக செயற்பட்டு வருகின்றது. இவ்வாறு முறையற்ற விதத்தில் செயற்படும் அரசாங்கம் இன்று மகிந்தவின் மீதும் சேறு பூச முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இடம் பெறவுள்ள மாகாண சபை மற்றும் ஜனாதிபதி தேர்தல்களில் பொது எதிரணிக்கே வெற்றி என்ற விடயத்தை நன்கு அறிந்தே தற்போது அரசாங்கம் எமக்கு எதிராக காய்நகர்த்தி வருகின்றது. எமக்கு எதிராக அரசாங்கம் செயற்படும் பட்சத்தில் அது அரசாங்கத்திற்கே எதிர் விளைவுகளை ஏற்படுத்தும்" என பந்துல மேலும் எச்சரித்தார். (இ-7)

# திருகோணமலையில் அமைச்சர் பொன்சேகா



(திருமலை)

வனஜீவராசிகள் அமைச்சர் சரத் பொன்சேகா நேற்றுக் காலை திரு கோணமலைக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார்.

திருகோணமலை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் காட்டு யானைகள் மற்றும் குரங்குகளால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்த கலந்துரையாடலில் பங்கேற்பதற்காகவே அமைச்சர் குறித்த விஜயத்தினை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது காட்டு யானைகளின் அட்டகாசம் காரணமாக ஏற்பட்டுள்ள உயிரிழப்புக்கள், சொத்துக்கள் சேதம், குடியிருப்புக்கள் சேதம், யானை வேலிப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன.

அத்துடன் இதில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள உயரதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நல்லூர் ஆலயச் சூழலில்

## 'கந்தன் கருணை' சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தன் மஹோற்சத்தை முன்னிட்டு கதிர் தொலைக்காட்சி ஏற்பாட்டில் நல்லூரில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் தினமும் மாலை 4.30 மணிமுதல் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

இதில் இன்று திங்கட்கிழமை " கந்தன் கருணை" எனும் தலைப்பில் இந்து கலாசார அமைச்சின் ஓய்வு நிலை உதவிப் பணிப்பாளரும் புலவருமான செ.ஸ்ரீதயாளன் சொற்பொழிவாற்றுவார். (இ)

# தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தசுவாமிகோவில் உற்சவத்தையொட்டி இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8.15 மணி வரை தெய்வீக இசையரங்கு இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று பாட்டு தரங்கினி பாலமுருகன், வயலின்- ப.காயத்திரி, மிருதங்கம்- என்.சதீஸ்குமார், முகர்சிங்- நி.மோகன், பாட்டு- தில்லையம்பலம் கருணாகரன், வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம்- பி.ஞானவேல், கடம்- எஸ்.பிரணவன் ஆகியோர் நிகழ்த்துவர். (இ)

# கந்தபுராண எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தசுவாமிகோவில் உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் கந்தபுராண எழுச்சி அருள் நெறி விழா- 2018 கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம் எனும் தலைப்பில் நல்லைதிரு ஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் மாலை 6 மணி தொடக்கம் இரவு 8.30 மணிவரை இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் 5 ஆம் நாள் வைபவம் இன்றைய தினம் மாலை 6 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் திருமுன்னிலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி கு.ஹேமலோஜினி தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை நுண்கலைத்துறை மேனாள் தலைவர் பேராசிரியர்நாச்சியார்செல்வநாயகம் கலந்து கொள்வார். ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர்மணி மண்டப நிகழ்வுகள் பிற்பகல் 3 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை இடம் பெறும்.

இதில் மட்டுவில் மத்திவைரவர் கோயில் குழுவினரின் பஜனை நிகழ்வு இடம்பெறுவதுடன் திருக்கை வேல் போற்றி போற்றி எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகு யோகா விரிவுரையாளர், ஆன்மீக பிரசாரகர் சி.உமாசுதன் சிறப்பு சொற்பொழிவு வழங்குவார். சிறப்பு நிகழ்வாக வைசாலினி யோகராஜன் தனி இசைக்கச்சேரி இடம்பெறும். (இ-7)

குறிப்பு:- உற்சவ காலச் சிறப்புச் சொற்பொழிவின்போது பத்து வினாக்கள் அடங்கிய வினாக்கொத்து அன்றைய நிகழ்வுச் சொற்பொழிவினை உள்ளடக்கியதாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு, அன்றைய தினமே விடைத்தாள்கள் மாணவர்களிடமிருந்து பெறப்படும். முதல் இருபது நாட்களிலும் விடையளித்த மாணவர்களில் முன்னிலை பெறும் ஐந்து மாணவர்களுக்கு ஐந்து துவிச்சக்கர வண்டிகளும் கற்றல் உபகரணங்களும் பரிசாக வழங்கப்படும்.




## அரசியல் கைதி சுதாகரின் விடுதலையை ஜனாதிபதி உடன் உறுதிசெய்ய வேண்டும்

ஆனந்த சுதாகரன் ஆயுள் கைதியாகிய பின்னர் அவருடைய துணைவியார் உள தாக் கத்தினால் இறந்து போனார். அதன் விளை வாக பிள்ளைகள் நிர்க்கதியாகியுள்ளனர். மனைவியின் மரணச் சடங்கில் மூன்று மணி நேரம்கலந்த கொண்ட பின் மீள அழைத்து செல்லப்பட்டார்பிள்ளைகளும் தந்தையுடன் செல்வதாக அழுதனர். அந்த அவலக் குரல் உலகநாடுகள் முழுவதும் எதிரொலித்தன.

தந்தையின்விடுதலைகுறித்து ஜனாதிபதியைபிள்ளைகள் சந்தித்த போது புதுவருடத்துக்கு முன்னர் விடுதலை செய்வதாக வாக் குறுதி வழங்கியிருந்தார். அந்த வாக்குறுதி பொய்யானால் அந்த குழந்தைகள் எவ்வளவு மனத்தாக்கத்துக்கு உள்ளாவார்கள் என்பதை ஜனாதிபதி கருத்தில் கொண்டு, உயர் நீதிமன்ற ஆலோசனையை கேட்டு அவரது விடுதலைக்கு நடவடிக்கைஎடுக்க வேண்டும்

த.பத்மநாதன்
நீர்வேலி மத்தி




### நம்பினோர் துயர் தீர்க்கும் நல்லை நாயகா

நல்லைக்கந்தன் இருக்கையிலே
சூழும் வினைகள் சூன்யமாய் ஓடும்
கதி யென்று உன்னை நாடிவந்தோம்
நம் விதிகளை மாற்றிடு நல்லை நாயகா

கலியுகம் தன்னில் நடப்பவை
அனைத்தும் கவலைக்குரியதல்லோ
வலி போக்கி கலி நீக்கி வாழ்வாங்கு
வாழவே நல்லை நாயகா வழி சமைத்துவிடு

அல்லும் பகலும் வேலும் மயிலும்
துணையிருக்க வேறென்ன வேண்டும் வாழ்வில்
நாடி வரும் பக்தர் துயர் தேடி ஓடி
துயர் நீக்கும் நல்லை நாயகா உன் திருவடி சரணம்.

செல்வி கீர்த்தனா ஆறுமுகதாசன்

### வேலவனே துன்பங்கள் நீக்கிடுவாய்

வேலவனே வேலவனே
நல்லூர் பதியில் உறைபவனே
அல்லலுறும் பக்தர்களின்
அறு வினைகள் தீர்த்திடுவாய்
தேடி வரும் பக்தருக்கு
தெய்வ பலம் கொடுத்திடுவாய்
நாடி வரும் மக்களுக்கு
நல்ல வழி காட்டிடுவாய்
பக்தி பலம் பெருகுதையா
பரவசத்தில் பாடல்களும்-எம்
நாவை நோக்கி வருகுதைய்யா
நல்லறிவும் பெருகுதையா

வ.கிஷானா,
மானிப்பாய்.

### நல்லைநகர் உறையும் பணக்காரக் கந்தா

யாழின் நல்லையில்
உறையும் கந்தா
வேலின் துணையுடன்
அருள்புரியும் கந்தா
மயிலின் மீது
வீற்றிருந்தருளும் கந்தா
துயிலும் பக்தர்களுக்கு சக்தி
கொடுக்கும் கந்தா
சேவல் கொடியுடன்
விளங்கும் முருகா
காவல் செய்து பிரபஞ்சத்தைக்
காக்கும் மருகா
நாவல் கனியில்
திருவிளையாடல் புரிந்த முருகா
ஆவலுடன் பக்தருக்கும்
அருள் தருவாய் கந்தா

மூளாயூர் க.அபிஷேக்,
யாழ்ப்பாணம்

### நல்லைக் குமரப் "பா"

மண்ணில் காற்றில் வான்வெளியில்
மலரும் ஒளியில் ஒலிகளிலும்
கண்ணில் கண்ட, காணாத
கண்டம் அண்டம் யாவிலுமே
எண்ணும் எண்ண வியலாத
எல்லா மேயவன் தானாகி
திண்ணமாகத் திகழ்ந் தெங்கும்
தெரிவான் நல்லைக் குமரப்பா!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

## பாரதம்

# கேரளாவில் மீட்புப்பணியில் தேசிய பேரிடர் படையினர்



(டில்லி)

கேரள மீட்புப் பணியில் இதுவரை இல்லாத வகையில் தேசிய பேரிடர் மீட்புப் படையை சேர்ந்த 58 அணியினரும் களம் இறங்கி மழை, வெள்ள மீட்பு, நிவாரண



பணியில் மிகப்பெரிய அளவில் ஈடுபட்டு சாதனை படைத்து வருகின்றனர்.

தேசிய பேரிடர் மீட்பு படை 2006ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 58 அணிகளை கொண்டுள்ளது.

இதுவரை இல்லாத வகையில் இந்த படையினர் கேரளாவில் மழை, வெள்ள மீட்பு, நிவாரண பணியில் மிகப் பெரியளவில் ஈடுபட்டு சாதனை படைத்து வருகின்றனர்.

எந்த ஒரு மாநிலத்திலும் எந்தவொரு இயற்கை பேரிடரிலும் தேசிய பேரிடர் மீட்பு படையின் அத்தனை அணியினரும் களம் இறங்கியது கிடையாது.

ஆனால் கேரளாவில் 55 அணிகள் களத்தில் உள்ளனர்.

எஞ்சிய 3 அணிகளும் அங்கு விரைகின்றன.

ஒவ்வொரு அணியிலும் சுமார் 40 வீரர்கள் இடம் பெற்று உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# கேரள வெள்ள அனர்த்தத்தை தேசிய பேரிடராக அறிவிக்கவும்

## ராகுல்காந்தி பிரதமரிடம் கோரிக்கை



(டில்லி)

கேரள வரலாற்றில் இது வரை இல்லாத அளவுக்கு நிகழ்ந்துள்ள இந்த இயற்கை சீற்றத்தை தேசிய பேரிடராக அறிவிக்குமாறு பிரதமர் மோடிக்கு, காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கேரளாவில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை மற்றும் அணைகள் திறப்பால் ஒட்டுமொத்த மாநிலமும் வெள்ளத்தில் மிதக்கிறது. அத்துடன் பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டு மக்களின் பாதுகாப்புக்கு மிகுந்த அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளது.

மாநிலம் முழுவதும் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன. எனினும் பல இடங்களில் மக்கள் இன்னும் தங்கள் வீடுகளிலேயே முடங்கிக் கிடக்கின்றனர்.

கேரள வரலாற்றில் இது வரை இல்லாத அளவுக்கு நிகழ்ந்துள்ள இந்த இயற்கை சீற்றத்தை தேசிய பேரிடராக அறிவிக்குமாறு பிரதமர் மோடிக்கு. காங்கிரஸ் தலை



வர் ராகுல் காந்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் தனது டுவிட்டர் தளத்தில் கூறுகையில், 'அன்புக்குரிய பிரதமரே, தயவுசெய்து கேரள வெள்ளப்பெருக்கை எவ்வித தாமதமும் இன்றி தேசிய பேரிடராக அறிவியுங்கள்.

நமது இலட்சக்கணக்கான மக்களின் உயிரும், வாழ்வாதாரமும், எதிர்காலமும் ஆபத்தில் இருக்கிறது' என்று குறிப்பிட்டுள்ளார். முன்னதாக மாநிலத்தில் வெள்ளத்தால் பாதித்த பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு காங்கிரஸ் தொண்டர்களுக்கு அவர் நேற்று முன்தினம் அழைப்பு விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (7)

# ஆசிய விளையாட்டுப் போ

# இந்தோனேசியாவில்

# பொலிஸாரால் சு

(ஜகார்த்தா)

ஆசிய விளையாட்டு போட்டியில் இடையூறு ஏற்படுத்துவார்கள் எனக் கருதி இந்தோனேசியாவில் 77 குற்றவாளிகள் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று ஆரம்பமாகிய ஆசியவிளையாட்டுப் போட்டிகள் அடுத்த மாதம் செப்டெம்பர் 2 திகதி வரை நடக்கிறது.

2 வாரங்கள் நடைபெறும் ஆசிய விளையாட்டு போட்டியில் ஆசிய நாடுகளைச் சேர்ந்த 17 ஆயிரம் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர்.

போட்டியைக் காண ஏராளமான ரசிகர்களும், வெளி



# பாகிஸ்தான் பிரதமராக இம்ரான்கான் பதவியேற்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமராக முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கான் நேற்று முன்தினம் பதவியேற்றார். அவருக்கு ஜனாதிபதி மம்னூன் உசேன் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

பாகிஸ்தான் பாராளுமன்ற தேர்தலில் முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி, கூடுதல் இடங்களைப் பிடித்து தனிப் பெரும் கட்சியாக வந்தது. சிறிய கட்சிகளின் ஆதரவுடன் அந்தக் கட்சி பாகிஸ்தானில் கூட்டணி அரசு அமைக்கிறது.

இஸ்லாமாபாத்தில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் பதவியேற்பு விழா நடைபெற்றது.

விழாவில், பாகிஸ்தானின் 22 ஆவது பிரதமராக இம்ரான்கான் பதவியேற்றார். அவருக்கு ஜனாதிபதி மம்னூன் உசேன் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இந்த விழாவில் பாகிஸ்தான் காபந்து பிரதமர் நசிர் உல் முல்க், பாகிஸ் தான் இராணுவ தளபதி பஜ்வா உள்ளிட்ட உயர் அதிகாரிகள், இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் சித்து மற்றும் பல்வேறு பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (7)

# கேரளாவில் நூறாண்டு காணா

## ஐ.நா.சபை ஆழ்ந்த கவலை



(நியூயோர்க்)

கேரள மாநிலத்தில் நூறாண்டு காணாத வெள்ளப் பெருக்கால் ஏற்பட்ட உயிர் சேதங்களுக்கு ஐ.நா. சபை பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ் கவலை தெரிவித்துள்ளார். கடந்த நூறாண்டுகளில் இல்லாத மிகப்பெரும் இய

# வெளிநாடு

# ப் போட்டிக்கு இடையூறு

# ில் 77 குற்றவாளிகள்

# ட்டுப் படுகொலை



நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் குவிந்துள்ளனர். இதனால் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு இலட்சம் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இந்தோனேசியாவில் 77 குற்றவாளிகள் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயம் அடைந்துள்ளனர் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.

இவர்கள் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இடையூறு ஏற்படுத்துவார்கள் எனக் கருதி இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக சமூகநல ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.


இவர்கள் அனைவரும் ஜேப்படி மற்றும் வழிப்பறி போன்ற சிறிய தவறுகளை செய்பவர்கள் எனத் தெரிவித்துள்ளனர். முதலில் அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு பின்னர் விசாரணை நடத்தப்பட்டது எனவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் பொலிஸார் இத்தகைய நடவடிக்கையை தொடங்கினர். ஜூலை மாதத்தில் தான் அதிகம்பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மேலும் 5 ஆயிரம்பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 700 இற்கும் மேற்பட்டவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (7)

# கோபி அனான் மறைவுக்கு கானாவில் ஒருவார துக்கம்

## ஜனாதிபதி அறிவிப்பு



(அக்ரா)

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலாளர் கோபி அனான் மறைவுக்கு அவரது தாய் நாடான கானாவில் ஒரு வாரம் அரசுமுறை துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஏழாவது செயலாளராக பதவி வகித்தவர் கோபி அனான்.

கானா நாட்டில் 08-04-1938 அன்று பிறந்த இவர் 01-01-1997 அன்று இப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 31-12-2006 அன்று ஓய்வு பெற்றார்.

அமைதியான உலகத்திற்காக உழைத்ததற்காக கோபி அனான் மற்றும் ஐக்கிய நாடுகளுக்கு கூட்டாக அமைதிக்கான நோபல் பரிசு விருது வழங்கப்பட்டது.

பதவி ஓய்வுக்கு பின்னர் 23.02.2012 முதல் 31.08 .2012 வரை, சிரியாவிற்கான ஐ.நா. அரபு லீக் கூட்டுச் சிறப்பு பிரதிநிதியாக இருந்தார்.

சுவிட்சர்லாந்து நாட்டில் தங்கியிருந்த கோபி அன்னான் (வயது-80) உடல் நலக்குறைவால் பேர்ன் நகரில் உள்ள வைத்தியசாலையில் நேற்று முன்தினம் மரணம் அடைந்தார்.

கோபி அனான் மறைவையொட்டி அவர் பிறந்து, வளர்ந்த நாடான கானாவில் ஒருவார காலம் அரசுமுறை துக்கம் அனுஷ்டிக்கப்படும் என கானா ஜனாதிபதி நானா அக்குபோ - அட்டோ இன்று அறிவித்துள்ளார்.

'கோபி அனான் பல வகைகளில் ஐக்கிய நாடுகள் சபையாகவே திகழ்ந்தார்' என்று புகழாரம் சூட்டியுள்ள ஐ.நா.சபை பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ், 'அவரை எனது நல்ல நண்பராகவும், வழி காட்டியாகவும் பெற்றமைக்காக பெருமை கொள்கிறேன்' என குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், பிரிட்டன் பிரதமர் தெரசா மே, ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சஞ்சேஸ் உள்ளிட்ட உலக தலைவர்கள் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (7)

# கேரளாவின் சோகத்தில் பங்கெடுக்கும் அனைவருக்கும் எனது நன்றிகள்

## பிரதமர் மோடி டுவிட்

(திருவனந்தபுரம்)

வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் நிலைகுலைந்துள்ள, கேரள மக்களின் சோகத்தில் பங்கெடுத்துவரும் ஒட்டுமொத்த மக்களையும் பாராட்டுவதாக, பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று சனிக்கிழமை வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் மேற்படி தெரிவித்துள்ளார்.

இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட பாதிப்பை எதிர்த்து போராடும் கேரள மக்களின் மனவலிமைக்கு தலை வணங்குகிறேன்.

எதிர்மறையான இந்த நிலைமையிலும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் அதிகாரிகளுக்கு என்னுடைய பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்பாராத இந்த சோகத்தில் கேரளாவுக்கு இந்தியா முழுவதிலும் இருந்து ஒருமைப்பாட்டுடன் ஒட்டுமொத்தமாக பரவலான ஆதரவை தெரிவித்துவரும் நாட்டு மக்களை பாராட்டுகிறேன் என பிரதமர் தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

மீட்புப் பணிகளில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர், எல்லை பாதுகாப்பு படையினர், மத்திய தொழிற்சாலை பாதுகாப்பு படையினர் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



அவர்களுக்கு தேவையான உதவிகளை விமானப்படை, இராணுவம், கடற்படை மற்றும் கடலோர காவல் படையினர் செய்து வருகின்றனர்.

கேரளாவுக்கு உடனடி தேவையான நிதி, உணவு, தானியங்கள், மருந்துகள் உள்ளிட்ட அனைத்து அடிப்படை தேவைகளையும் மத்திய அரசு வழங்கிவருகிறது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட பகுதிகளை பிரதமர் நரேந்திரமோடி நேற்று நேரில் சென்று பார்வையிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (7)

# கேரளாவுக்கு ரூ.500 கோடி இடைக்கால நிவாரண நிதி


## மோடி அறிவிப்பு



(திருவனந்தபுரம்)

மழையால் கடுமையான இழப்புகளை சந்தித்துள்ள கேரள மாநிலத்திற்கு 500 கோடி ரூபாய் இடைக்கால நிவாரண நிதி வழங்கப்படும் என பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

கேரளாவில் மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளை



பார்வையிடுவதற்காக பிரதமர் நரேந்திர மோடி நேற்று இரவு கேரள மாநிலம் திருவனந்தபுரம் வந்தடைந்தார். நேற்றுக் காலை திருவனந்தபுரத்தில் இருந்து விமானத்தில் புறப்பட்ட அவர் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட கொச்சிக்கு சென்றார்.

அங்கிருந்து வெள்ளம் பாதித்த பகுதிகளை பார்வையிடுவதற்காக ஹெலிகொப்டரில் புறப்பட்டார்.

ஆனால் ஹெலிகொப்டர் புறப்பட்டுச் சென்றதும் அப்பகுதியில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியது. ஹெலிகொப்டரை தொடர்ந்து இயக்கமுடியாத நிலை ஏற்பட்டது.

எனவே, பிரதமர் மோடி பயணம் செய்த ஹெலிகொப்டர் மீண்டும் கொச்சிக்கு திரும்பி தரையிறங்கியது.

ஆய்வுப் பணி தாமதம் ஆனதால், மழை வெள்ள பாதிப்பு மற்றும் நிவாரணப் பணிகள் தொடர்பாக கொச்சியில் ஆளுநர் சதாசிவம், முதலமைச்சர் பினராயி விஜயன் மற்றும் அதிகாரிகளுடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார்.

அப்போது, கேரள மாநிலத்திற்கு இடைக்கால நிவாரண நிதியாக 500 கோடி ரூபாய் வழங்கப்படும் என பிரதமர் மோடி அறிவித்தார்.

கேரளாவுக்கு உடனடி நிவாரண நிதியாக 100 கோடி ரூபாய் வழங்கப்படும் என உள்துறைஅமைச்சர்ராஜ்நாத் சிங் ஏற்கனவே அறிவித்தது குறிப்பிடத்தக்கது. (7)

# ாத அதிகமான உயிரிழப்புக்கள்



ற்கை பேரழிவை கேரளா சந்தித்துள்ளது.

இந்நிலையில், வெள்ளப் பெருக்கால் ஏற்பட்ட உயிர் சேதங்களுக்கு ஐ.நா.சபை பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ் கவலை தெரிவித்துள்ளார். (7)

# சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் விபரங்களை தெரிவியுங்கள்

# கல்வி இராஜாங்க அமைச்சர் கோரிக்கை


(கொழும்பு)

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் விபரங்களை உடனடியாக கல்வி அமைச்சுக்குத் தெரிவிக்குமாறு கல்வி இராஜாங்க அமைச்சர்வே. இராதாகிருஷ்ணன் பாதிப்புக்கு உள்ளான பாடசாலைகளின் அதிபர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெள்ளவத்தையில்நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இந்த விடயம் தொடர்பில் உரையாற்றிய கல்வி இராஜாங் அமைச்சர்,

தற்போது நாட்டில் சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது. இதனால் பாடசாலைகள் பாதிக்கப்படுகின்றன. தற்போது பாடசாலை விடுமுறை என்பதால் மாணவர்களுக்கு பாதிப்பு இல்லாவிட்டாலும் பாடசாலைகளுக்குப் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.



அதிபர்கள் விடுமுறை எனக் கருதி வீடுகளில் இருக்காமல் பாடசாலைகளுக்குச் சென்று பாடசாலையின் நிலைமையினை உடனடியாகப் பார்வையிட்டு பாதிப்புக்கள் ஏற்பட்டிருந் தால் கல்வி அமைச்சுக்கும் எனக்கும் அறியத்தரவும்.

பாதிப்புக்குள்ளாகும் பாடசாலைகளை பாடசாலை விடுமுறை முடிந்து ஆரம்பிக்கும் முன்னர் மீள் நிலைக்கு கொண்டு வரமுடியும்.

அத்துடன் தற்போது உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை நடைபெற்று வருகின்றது. இந்தப் பரீட்சை நடைபெறும் நிலையங்களில் பாதிப்புக்கள் ஏற்பட்டால் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள்பரீட்சை திணைக்களத்தின் ஊடாக கல்வி அமைச்சுக்கு அறியத்தரவும். அவ்வாறான நிலையில் மாணவர்களுக்கும் பாடசாலைகளுக்கும் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்று அவர் .மேலும் தெரிவித்தார். (இ-7)

## வாகன இலக்கத்தகடுகள்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து 2018.08.16 ஆம் திகதி யாழ்ப்பாணம் அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலகத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என யாழ்ப்பாணம் பிரதி ஆணையாளர் அறிவித்துள்ளார். வாகன இலக்கத்தகடுகள்.

AAB-0783, AAD-0976, AAG-5847, AAS-8848, AAW-6271, ABR-9824, ABR-9875, ABR-9879, ABR-9880, ABR-9881, ABR-9884, ABR-9888, ABR-9889, ABR-9892, ABR-9907, ABS-0015, ABS-0017, ABS-0211, ABS-0236, ABS-0239, ABS-0644, ABS-0657, ABS-0663, ABS-0667, ABS-0671, ABS-0721, ABS-0758, ABS-0779, ABS-0867, ABS-0973, ABS-1064, ABS-1091, ABS-1095, ABS-2132, ABS-2528, ABS-5009, ABS-5253, ABS-8531, BAA-5930, BAM-2220, BAN-3926, BAS-7221, BAS-7935, BAW-2283, BAZ-9670, BCH-4067, BCP-2770, BCS-9097, BDD-4041, BEV-9762, BEW-0271, BEW-3688, BEH-2258, BFE-0369, BGE-0196, BGF-7741, CAA-3120, CAF-9431, CAJ-7073, CAL-7809, CAP-3475, CAQ-4176, CAQ-6758, CBC-5294, DAE-3727, GA-8665, GB-9774, GC-3209, GC-8490, GF-5783, GV-2959, GI-5820, GI-5914, GL-1114, GO-5607, GO-5608, GO-5630, GO-5781, GO-6865, GV-1398, GV-1995, GV-2040, GV-2046, GV-4363, GW-6840, GW-6873, GW-7078, GW-7087, GW-8433, GY-1674, GY-9555, GZ-4898, HA-2752, HD-6409, HD-7807, HH-4916, HI-1235, HM-2120, HM-2169, HM-2208, HM-2440, HM-2811, HM-2817, HO-4679, HQ-6044, HR-3176, HW-7097, HY-2333, HY-7716, HZ-2646, JB-6258, JF-4064, JG-5902, JL-6373, JM-4700, JN-1006, JN-9058, JN-9064, JN-9557, JQ-6693, JQ-9221, JS-8416, JT-4309, JW-7101, JY-1771, JZ-5455, JZ-8323, JZ-8331, JZ-8339, JZ-8378, JZ-9951, KC-6476; KC-9686, KD-5695, KE-6470, KF-9731, KG-1738, KG-4426, KI-3430, KK-5756, KM-1882, KM-2886, KM-3783, KM-9835, KO-2601, KP-1302, KV-0105, KV-01995, KV-1787, KY-2289, KY-9081, LA-8955, LE-8101, LI-4840, LJ-2113, LJ-2114, LK-3813, LN-0421, LN-1983, LW-0153, LW-0163, LW-1100, LW-11125, LW-1117, LW-1122, MA-8819, MA-9583, MA-9584, MA-9585, MA-9593, MA-9602, MB-6426, MH-0009, MJ-4935, MN-5606, MO-5408, MU-3146, MX-6886, NA-5126, NA-5637, NA-7589, NA-9456, NB-3364, NB-3522, NC-2662, NE-1696, NE-9963, NF-6769, PA-2591, PA-5148, PA-7665, PB-1400, PB-3760, PB-8285, PB-9445, PC-3623, PC-7811, PD-1610, PD-5757, PD-6786, PE-8964, PF-0788, PF-0895, PF-1817, PP-2528, PH-8811, PQ-7511, PV-7308, QA-2576, QA-4310, QA-5087, QA-6035, QA-6537, QB-4313, QB-4808, QC-1218, QC-6206, QD-2549, QE-0869, QE-8431, QG-5410, QG-5624, QI-4267, QI-4559, QJ-6826, QK-5691, QU-3559, SH-9451, SI-3044, TI-8853, TJ-0244, TL-4728, TP-6517, TQ-0167, UA-9072, UF-1720, UG-8883, UI-7860, UL-0476, UT-7926, UW-2194, UW-7008, UX-7766, UY-8787, VG-5892, VG-7018, VG-9053, VI-4689, VJ-0232, VK-0035, VK-0038, VK-0059, VN-5513, VS-2007, WB-7997, WH-2667, WH-8689, WN-4618, WY-4576, WZ-0095, WZ-1906, XP-7514, XR-7608, XY-8303, YB-4016, YX-5036, YH-2295

## வெளிநாட்டுப் பயணம் இரத்து



(கொழும்பு)

சப்ரகமுவ மாகாண ஆளுநர் நிலுக்கா ஏக்கநாயக்கவின் இத்தாலி பயணம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

தனிப்பட்ட காரணங்களுக்காக, நிலுக்கா ஏக்கநாயக்க தனது இராஜதந்திர பயணத்தை இரத்துச் செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## சர்வதேச சைட்டீஸ் மாநாடு அடுத்தாண்டு இலங்கையில்

(கொழும்பு)

அழிவடையும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ள தாவரங்களையும் விலங்குகளையும் பாதுகாப்பதற்காக மக்களை விழிப்பூட்டும் நோக்கில் இடம்பெறும் சர்வதேச சைட்டீஸ் மாநாடு அடுத்த ஆண்டு இலங்கையில் இடம் பெறவுள்ளது.

மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் இம் மாநாடு 2019 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 03 ஆம் திகதி வரை கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளதுடன், 183 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள், சர்வதேச அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சுற்றுச்சூழல் அமைப்புகள், உலகளாவிய ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட நாலாயிரத்தை அண்மித்தோர் குறித்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

சர்வதேச மட்டத்திலான "சைட்டீஸ்" சமவாயம் எனப்படும் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் வனவிலங்குகளினதும் தாவரங்களினதும் சர்வதேச வணிகம் பற்றிய சமவாயம்1973 ஆம் ஆண்டு வோஷிங்டன் நகரில் இடம் பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வின்போதே கைச்சாத்திடப்பட்டு, 1975 முதல் அமுல்படுத்தப்பட்டதுடன், 1979 ஆம் ஆண்டில் இலங்கை இச்சமவாயத்தில்இணைந்து கொண்டது.

இலங்கையின் வனப்பிரதேசத்தை மேம்படுத்துவதற்கும் வன விலங்குகளையும் உயிர்ப்பல்வகைமையை பாதுகாப்பதற்கும் பேண்தகு அபிவிருத்தி கொள்கைகளின் ஊடாக ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் பாரிய வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டுவரும் தருணத்தில் இம் மாநாடு இலங்கையில் இடம் பெறுவது விசேட அம்சமாகும்.

மாநாட்டின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் தொடர்பிலான விசேட கலந் துரையாடல் ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனவிரத்னவின் தலைமையில் நேற்று முன்தினம்ஜனாதிபதிசெயலகத்தில் இடம் பெற்றது.

அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, ஜோன் அமரதுங்க, காமினி ஜெயவிக்கிரம பெரேரா ஆகியோரும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச் சின் செயலாளர் அநுர திஸாநாயக்க உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகளும், பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர உள்ளிட்ட பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகளும் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### தட்டிக் கொடுக்கும் தன்மை உண்டா?

மனிதர்கள் உணவால் மட்டும் வாழ்வது இல்லை. தட்டிக் கொடுக்கப்படும் தன்மையாலும் (Encouragement) வாழ்கிறார்கள்.

தட்டிக் கொடுக்கும் தன்மை இல்லாதவர்கள் குறைகளைச் சுட்டிக் காட்டுவதற்குத் தகுதியற்றவர்கள். திருமணமான புதிதில், செல்லமாய் தாய் வீட்டில் வளர்ந்த தன் மனைவிக்குச் சமைக்கத் தெரியவில்லை என்பது கணவனுக்கு ஒரு பெரிய குறையாகவே தெரியவில்லை.

ஆனால் போகப் போக வயிற்றுப்பாடு தாங்க மாட்டாமல் கணவன் புலம்ப ஆரம்பித்து விட்டான்.

அவனது தொல்லை தாங்க முடியாமல் சமைக்க ஆரம்பித்த மனைவி, ஒரே வருடத்தில் காலங்காலமாய்ச் சமைத்துப் நற்பெயர் எடுக்காத பெண்களைக்கூட மிஞ்சும் வகையில் சமைக்க ஆரம்பித்து விட்டாள். பலருக்கு ஆச்சரியம். குறிப்பாக அவளது அம்மாவுக்கு "எப்படிம்மா இவ்வளவு நல்லா சமைக்க ஆரம்பிச்சிட்டே?" என்று கேட்க, அவர் தாம்மா காரணம். என்ன சமைச்சுப் போட்டாலும் ஒண்ணுமே சொல்லாம சாப்பிடுவாரும்மா கொஞ்சம் நல்லாயிருந்தாக் கூடப் போதும். ஆய் ஊய்னு பாராட்டுவாரும்மா. சமையல் புத்தக மெல்லாம் வாங்கிக் கொடுத்து ரொம்ப என்கரேஜ் பண்ணாரும்மா. எனக்கும் சுவாரசியமா வந்திருச்சும்மா" என்றாள் அவள். தாய்க்குப் பெருமை பிடிபடவில்லை.


பொல்லாத பிள்ளையைக்கூட, சமத்துல்ல! அந்தக் கண்ணாடி டம்ளரை கீழே வச்சுடு பார்ப்போம் என்றதும் தூக்கி உடைக்கப் போன அந்தக் குழந்தை, அதைக் கொடுத்து விடுகிறது.

முரட்டுத்தனமாகக் கார் ஓட்டிய கணவரைத் திருத்த முடியாத மனைவி, தன் அணுகுமுறையை மாற்றினாள். "இப்ப இவர் எவ்வளவோ தேவலைங்க. தன்மையா ஓட்ட ஆரம்பிச்சிட்டாரு என்று தன் தோழிகள் மத்தியில் அவரையும் வைத்துக்கொண்டு சொல்லி வைக்க, கணவனின் ஓட்டத்தில் உண்மையில் நல்ல் மாறுதல்."

தட்டிக் கொடுக்கும் தன்மைக்குச் சில சிறப்பியல்புகள் உண்டு. மங்கிப் போன பகுதிகளை அது பளபளப் பாக்கும். செயறபட மறுத்த செல்களுக்குக் கூட அது உயிரூட்டும்.

**லேனா தமிழ்வாணன்**

## காட்டில் கடுமையாக மோதிக்கொண்ட புலிகள்
### ஒரு புலி மரணம்



(கொழும்பு)

சிங்கராஜவனத்திற்கு சொந்தமான கலவான காட்டில் இரண்டு புலிகள் கடுமையாக மோதிக்கொண்டுள்ளன.

இதன் காரணமாக ஒரு புலி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 15 வயதான ஆண் புலி ஒன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது. மோதலில் உயிரிழந்த புலியின் உடலை வனவிலங்கு அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

புலியின் சடலம் நீதிமன்ற நடவடிக்கைக்காக இரத்தினபுரி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# ஜனாதிபதியாக 3 ஆவது தடவை ஒருவர் போட்டியிட முடியாது என்ற சட்டத்தில் தெளிவில்லை-பிரதீபா

(கொழும்பு)

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தின்படி இரு தடவைகளுக்கு மேலதிகமாக ஒருவர் ஜனாதிபதியாக முடியாது எனக் கூறப்பட்டுள்ளதில் தெளிவின்றியுள்ளதாகவும் இதனை நீதிமன்றம் தான் விளக்கிக் கூற வேண்டியுள்ளதாகவும் இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.



இவ்வாறு இரு தடவைகளுக்கு மேலதிகமாக போட்டியிட முடியாது எனக் கூறப்படுபவர், இந்த திருத்தச் சட்ட மூலம் நிறைவேறியதன் பின்னர் பதவியில் உள்ளவர்களுக்கா அல்லது முன்னர் பதவி வகித்தவர்களுக்குமா என்பது 19 ஆவது திருத்தச் சட்டத்தில் தெளிவாக கூறப்படவில்லையெனவும் பிரதீபா மஹாநாம ஹேவா விளக்கமளித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மீண்டும் மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும் என்ற ஒரு புதிய வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து அவரிடம்வினவியதற்கே இவ்வாறு பதிலளித்துள்ளார். (இ-7)

# 1048 சுற்றிவளைப்புக்களின் மூலம் 3 கோடியே 50 இலட்சம் வருமானம்
## வனப் பாதுகாப்புத் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

வனப் பாதுகாப்புச் சட்டங்களை மீறியவர்களைப் பிடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாக வனப் பாதுகாப்புத் திணைக்களம் அறிவித்துள்ளது.வனப் பாதுகாப்புச் சட்டங்களை மீறியவர்களிடம் பெறப்பட்ட தண்டப் பணமே இந்த வருமானம் எனவும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வருடத்தில் 1048 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதிகமான சுற்றிவளைப்புக்கள் பொலநறுவைப் பிரதேசத்திலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# யார் என்ன சொன்னாலும் சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை செயற்பாட்டில்
## ஐ.தே.க.அமைச்சர் மலிக் தெரிவிப்பு




(கொழும்பு)

சிங்கப்பூர் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பில் அரசியல் மேடைகளில் யார் என்ன கருத்தை தெரிவித்தாலும் இந்த உடன்படிக்கை செயற்படுத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்துள்ளார்.

இந்த வர்த்தக உடன்படிக்கை தொடர்பில் சிலர் முன்வைத்து வரும் கருத்துக்கள் எந்தவித அடிப்படையும் அற்றது. மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்துவதற்கே இவ்வாறான பிரசாரங்களை எதிர்த்தரப்பினர் முன்வைத்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# கேரளாவில் கனமழை வெள்ளத்தால் பலி எண்ணிக்கை 380 ஆக அதிகரிப்பு
## முதல்வர் பினராயி விஜயன் கவலை





(திருவனந்தபுரம்)

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கேரள மாநிலம், ரூ.19 ஆயிரத்து 512 கோடி இழப்பை சந்தித்துள்ளதாகவும், பலியானவர்களின் எண்ணிக்கை 380 ஆக உயர்ந்துள்ளதாகவும் முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

கேரளாவில் கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மழை வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆண்டுதோறும் வழக்கம் போல் பெய்யும் தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு கோரத் தாண்டவம் ஆடியது.

கடந்த 9 ஆம் திகதி தொடங்கிய பருவமழை, தொடர்ந்ததால், நீர் வரத்து அதிகரித்தது. இதனால் 80 அணைகளில் இருந்தும் உபரி நீர் திறக்கப்பட்டன. இதனால் கொச்சி, ஆலப்புழா, கோழிக்கோடு, மலப்புரம் என அனைத்து நகரங்களும் வெள்ளநீரில் மிதக்கின்றன.

கேரள மாநிலத்தில் பெரும்பாலான பகுதிகள் அழிந்து போயுள்ளன. இருக்க இடமின்றி, இரண்டு இலட்சத்துக்கும் அதிகமானோர், நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

பல்லாயிரக்கணக்கான மின்சாரக் கம்பங்கள் சாய்ந்து பல கிராமங்கள் மின்சார இணைப்பின்றி தவித்துக் கொண்டிருக்கின்றன. நிலச்சரிவு ஏற்பட்டு வீதிகள் பிளவுபட்டுக்கிடக்கின்றன.

இதுகுறித்து கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

நாம் ஒரு பேரழிவின் நடுவில்இருக்கிறோம், அதைச் சமாளிக்க இணைந்து ஒன்றுபட வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதிக்கு போக்குவரத்து துண்டிப்பால் உணவு பொருட்களை கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

நிவாரணப்பணிகளை மேற்கொள்ள ஆட்சியாளர்களுக்கும், மீட்புப் பணி மேற்கொள்ள பொலிஸாருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். மேலும், தொடர்ந்து பெய்து வரும் கன மழை மற்றும் வெள்ளத்தினால் ரூ.19 ஆயிரத்து 512 கோடி அளவிற்கு கேரள மாநிலம் சேதத்தை சந்தித்துள்ளதாக குறிப்பிட்ட விஜயன், இதுவரை பலியானோரின் எண்ணிக்கை 380 ஆக உயர்ந்துள்ளதுடன், எந்த மாநிலத்திலும் இல்லாத பாதிப்பு கேரளாவில் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (7)

# ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அரசு நடவடிக்கை
## கல்வியமைச்சர் காரியவசம் தகவல்

(கொழும்பு)

பாடசாலை ஆசிரியர்களின் சம்பளங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.




கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பாடசாலை ஆசிரியர்களின் சம்பளம் குறைக்கப்படாது. அவர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் பரீட்சை கடமைகளில் ஈடுபட்டு வரும் ஆசிரியர்களின் கொடுப்பனவுகளை மேலும் அதிகரிக்குமாறு பரீட்சைகள் ஆணையாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன்.

கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியை சிலர் குரோத உணர்வுடன் நோக்குகின்றனர்.

குறுகிய அரசியல் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கில் சிலர் சேறு பூசல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



வடமராட்சி கம்பர்மலையில் கலைவாணி சனசமூக நிலையமும் வல்வெட்டித்துறை ஊரிக்காடு இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட மருத்துவ முகாமும், இரத்ததான முகாமும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது. இதில் இராணுவத்தினரும், பொதுமக்களும் இணைந்து இரத்ததானம் வழங்கியதுடன், பொதுமக்களுக்கான மருத்துவமுகாமில் இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. இந் நிகழ்வை யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி தர்ஷன ஹெட்டியாராச்சி ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் சனசமூக நிலையத்தின் தலைவர் சி.தயானந்தராஜா, வல்வெட்டித்துறை கட்டளைத்தளபதி தம்பிக்க ஜெயரட்ண, 5 ஆம் நிலை கட்டளைத்தளபதி செனவிரட்ன, யங் கம்பன்ஸ் விளையாட்டுக்கழக தலைவர் வே.கஜேந்திரன், கிராம உத்தியோகத்தர் சுஜீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

# தனது ஊடகச் செயலரை 'முட்டாள் பிசாசு'என்று திட்டி அவமானப்படுத்திய மகிந்த



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது ஊடகச் செயலாளரைப் பகிரங்கமாக, "முட்டாள் பிசாசு" என்று திட்டி அவமானப் படுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர்கீத்நொயர் கடத்தப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக மகிந்த ராஜபக்ஷவிடம், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியிருந்தனர்.

இந்த விசாரணையின் பின்னர், விஜேராம மாவத்தையிலுள்ள தனது இல்லத்துக்கு வெளியே காத்திருந்த ஊடகவியலாளர்களை மகிந்த ராஜபக்ஷ சந்தித்தார்.

மகிந்த ராஜபக்ஷ ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்துக் கொண்டிருந்த போது, அவரது ஊடகச் செயலர் உதித் லொக்குபண்டார, மகிந்தவை நெருங்கியிருந்த ஊடகவியலாளர்களை விலகி நிற்குமாறு கூறினார்.

இதனால் கோபமடைந்த மகிந்த ராஜபக்ஷ, "மோட யக்கக்" (முட்டாள் பிசாசு) என்று சிங்களத்தில் திட்டினார்.

இதனைச் சற்றும் எதிர் பாராத உதித் லொக்குபண்டார, சங்கடத்துடன் சிரித்து சமாளித்துக் கொண்டார்.

மகிந்தவின் தனிப்பட்ட செயலராகவும், அவரது ஊடகச் செயலராகவும் உள்ள உதித் லொக்குபண்டார, முன்னாள் சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டாரவின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க தீர்மானம்

(கொழும்பு)

தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இக்கோரிக்கைகளுக்கு அமைய ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்துவதாக அமைச்சர் ரவீந்திர சமரவீர தெரிவித்துள்ளார்.

தேசிய தொழிலாளர் ஆலோசனை சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் சில தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் அமைச்சர் கருத்து வெளியிட்டார்.

தனியார் துறையினரின் குறைந்தபட்ச சம்பளம் 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் என அமைச்சரிடம் 9 தொழிற்சங்கங்கள் கோரியுள்ளன.

சம்பள அதிகரிப்பு தொடர்பில் சில சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பொலிஸாரை கண்டதும் ஹெரோயின் போதைப்பொருளை விழுங்கிய பெண்

## 8 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பிலியந்தலை - மிரிஸ்வத்தை பண்டாரநாயக்க வீடமைப்பு தொகுதியில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவர் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தேடுதலின் போது அதிகவலு கொண்ட மோட்டார்சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். பொலிஸ் அதிகாரிகள் பெண்ணின் வீட்டை சுற்றிவளைத்து சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

வீட்டை சுற்றி வளைத்த பொலிஸார், வீட்டின் கதவை தட்டியுள்ளனர். கதவை திறந்த பெண், பொலிஸாரை பார்த்ததும் தனது கையில் இருந்த ஹெரோயின் பக்கெற் ஒன்றை வாயில் போட்டு விழுங்கியதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதுடன் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர். (இ-7)

# மருந்துப் பொருட்களின் விலையைக் குறைக்கும் வர்த்தமானி விரைவில்

(கொழும்பு)

புற்று நோய்க்கான மருந்துகள் உட்பட இதர மருந்துகள் மற்றும் 25 உபகரணங்கள் என்பவற்றுக்கான விலையைக் குறைக்கும் வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் இரு வாரங்களுக்குள் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (இ-7)

# புகையிரதக் கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

புகையிரதக் கட்டணம் அதிகரிக்கப்படுமென இலங்கை போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி புகையிரதக் கட்டணம் 15 சதவீதத்தால் அதிகரிக்கப்படுமென இலங்கை போக்குவரத்து அமைச்சு தெரி வித்துள்ளது. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்


## பிறப்பு எண் 4 விதி எண் 2

இராகு, சந்திரன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் அடிக்கடி மனநிலைத் திடம் குறைந்து பின்னர் மனம் தெளிவடைந்து விடுவார்கள். அடிக்கடி சளி பிடித்துக் கொள்ளும். பார்க்கக் கம்பீரமாகக் காட்சியளித்த போதும் மனக்குழப்பமுடையவர்கள். வசதியான குடும்பத்தவராக இருந்தாலும் ஆண்கள் சோதனைக்கு உள்ளாவார்கள். சோதனைக்குப் பின்னர் தான் மேன்மையடைவார்கள். தன்மான உணர்ச்சிகள் அதிகமுடையவர்கள். எப்பொழுதும் நன்மையே நடக்க வேண்டுமென்று நினைப்பார்கள். தன்னுடைய சுய முன்னேற்றத்திலேயே குறிக்கோளாக இருப்பார்கள். எதையும் தாங்கும் மனவலிமை உடைய வர்கள்.

கலையை ரசிப்பவர்கள். சுயகௌரவம் பார்ப்பார்கள். ஏதாவது ஒரு பிரச்சினையை சுமந்து கொண்டேயிருப்பார்கள். மற்றவருக்கும் பணிந்து போகமாட்டார்கள். நட்பு விடயத்தில் நல்ல விசுவாசமிருக்கும். அன்பு, பாசத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். தான, தர்மத்தை மனம் விரும்பிச் செய்வார்கள். குழந்தைகள், பெரியவர்களிடம் தனிப்பட்ட அன்பு இருக்கும். கம்பீரமான தோற்றமும், தடித்த குரலும், குளிர்ச்சியான பார்வையும் உடையவர்கள். ஜோதிடம், மருத்துவம், தத்துவ ஆராய்ச்சிகளில் ஈடுபடுவார்கள். கேள்விகள் கேட்பதிலும் பதில் உரைப்பதிலும் மிகப் பிரமாண்டமிருக்கும். புத்திக் கூர்மையுடையவர்கள். தன் மனம் நேர்மையை விரும்புவதால் தீய காரியங்களில் ஈடுபட மனம் இடந்தராது. சிரமப்பட்டுப் பணம் சம்பாதிப்பார்கள். ஆனால் செலவோ அவ்வப்போது காத்துக் கொண்டிருக்கும். நன்கு முன்னேறி வரும் நிலையில் எல்லாம் மாயமாய் மறைந்து விடும்.

மற்றவர்களின் இரகசியங்களை எளிதில் கண்டுபிடித்து விடுவார்கள். நாலும் தெரிந்த நல் மனிதர்கள் என்று பெயரெடுப்பார்கள். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவார்கள். துன்பம், துயரம் எது வந்த போதும் இவர்களுக்கு ஆறுதல் கூறப்பல பேர் வந்து கொண்டேயிருப்பார்கள். போலியாக நடிக்கக் கூடத் தெரியாதவர்கள். தன் மனதில்- தோன்றும் கருத்துக்களைத் தெளிவாக வெளியிடுவார்கள். கடன் வாங்குவதையும் பிறருக்குத் தலை வணங்குவதையும் இவர்கள் வெறுப்பார்கள். அன்பினால் எந்தவொரு காரியத்தையும் மிக எளிதில் சாதித்து விடுவார்கள்.

நாணயமாக நடந்து கொள்வார்கள். பிறரும் தன்னிடம் அது போலவே நடந்து கொள்ள வேண்டுமென்று எண்ணுவார்கள். வெற்றி பெற்ற மனிதர்களாகவும் வீறு கொண்ட சிங்கமாகவும் அஞ்சா நெஞ்சம் படைத்தவராகவும் வலம் வருவார்கள். தோல்வியைக் கண்டு துவளாத மனம் படைத்தவர்கள். இராஜதந்திரிகள், புரியாதவருக்குப் புதிராகவும் புரிந்தவர்களுக்குச் சிந்தனைச் சிற்பியாகவும் இருப்பார்கள். கணிதம், சங்கீதம், சிற்பம், மருத்துவம் போன்ற துறைகள் மிகவும் பிடிக்கும். சில நேரத்தில் மிகவும் முன் கோபிகள் போல நடந்து கொள்வார்கள். பகையையும் சம்பாதிப்பார்கள். உடனுக்குடன் கோபம் மறைந்துவிடும். கெட்ட பழக்கத்திற்கு எளி ல் அடிமையாகமாட்டார்கள். மூளை பலமிக்கவர்கள். மின்னல் வேகத்தில் செயற்படும் இவர்கள், சென்ற இடமெல்லாம் சிறப்புகள் வந்து சேரும். என்றென்றும் வர வேற்புகள் குறையாத வண்ணம் வாழ்வார்கள்.




வாக்கில் வன்மை அதிகமிருக்கும். பேச்சும், எழுத்தும் உலகையே உலுக்கும். தெய்வத்தின் மீது நம்பிக்கை அதிகம் இருக்கும். எந்தக்காரியத்தையும் தானே செய்தால்தான் திருப்தியடைவார்கள். மிகவும் கடினமான உழைப் பாளிகள். தன் மீது அன்பு செலுத்துபவருக்கு எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்வார்கள். பார்க்க அமைதியாகக் காட்சியளிப்பார்கள். மற்றவர்களைச் சந்தோசப்படுத்துவார்கள். கலையுணர்வு, உலக அனுபவம் அதிகம் இருக்கும். வைத்தியம் பலிதமாகும். தனிமையை விரும்புவார்கள். பிறருடைய சொல்லைக் கேட்க மாட்டார்கள். புத்தகப் பிரியர் கள், புதிய சீர்திருத்தக் கொள்கைகளைப் பரப்புவார்கள். புலனடக்கமிக்கவர்கள்.

இனிப்பு, காரம், ருசியான உணவினை விரும்பி உண்பார்கள். மிகவும் உணர்ச்சிவசமாகப் பேசும் மனிதர்கள். இலட்சியவாதிகள். பசி என்று யார் வந்தாலும் உடனே உதவும் இளகிய மனமுடையவர்கள். பிறர் பேசுவதை அப்படியே கிரகித்துக் கொள்வார்கள். தன்னுடைய கல்வியைப் பூர்த்தி செய்வதற்குள் பலவிதமான தோல்விகளைச் சந்தித்து வெற்றி பெறுவார்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
1,10,19,8,6,15,24

துரதிர்ஷ்ட திகதிகள்
8,17,26,4,13,22,31,9,18,27

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர் நீலம், மஞ்சள், பொன்னிறம், பச்சை

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, சிவப்பு, இருண்ட நிறங்கள்.

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
கோமேதகம், நீலக்கல், முத்து, அக்கோமரின், சந்திர காந்தக் கல், ஓபல், டைகர்ஸ் ஐ, ஜேட்

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

22


கலாநிதி மு.குணசிங்கம்

இவை போன்ற விடயங்களைக் கருத்திற் கொள்ளாது பரணவிதான தமிழர்களை அந்நியர்கள் என்றும் அவர்கள் ஆட்சி அந்நிய ஆட்சியென்றும் துட்டகாமினி- எல்லாளன் போர் ஓர் இனப்போர் என்றும் வரலாற்றைத் திரிபுபடுத்தி எழுதியிருக்கின்றார். பேராசிரியர் பரணவிதான ஒரு தொல்லியலாளர், கல்வெட்டியாளர், வரலாற்று அறிஞர். அப்படி இருந்தும் அவர் மேற்கண்டவாறு வரலாற்றைத் திரிபுபடுத்தி எழுதிய செயல், இலங்கையின் அண்மைக்கால போரியல் வரலாற்றில் எத்தனை அப்பாவி மக்களின் உயிர்களைக் குடித்திருக்கின்றது என்பதனைச் சிங்கள வரலாற்று அறிஞர்களும் வரலாற்று மாணவர்களும் நிச்சயம் கருத்திற்கொள்ள வேண்டும்.

துட்டகாமினி மஹாகமவில் இருந்து அநுராதபுர இராச்சிய மன்னன் எல்லாளனுக்கு எதிராகப் படைதிரட்டிப் போர்புரிந்த சம்பவத்தை மகாநாம தேரர் கூறும்போது, முப்பத்திரண்டு சிற்றரசுகளை எதிர்கொண்டு, அவற்றைத் தாண்டி அநுராதபுர இராச்சியத்தின்மீது படையெடுத்து வெற்றி கொண்டான் என்று குறிப்பிடுகின்றார்.

இச் சம்பவம் மூலம் அக் காலகட்டத்தில் பல சிற்றரசுகள் இலங்கையில் இருந்திருக்கின்றன என்று தெரிகின்றது. பல்வேறு தொல்லியல் ஆராய்ச்சிகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன. இவற்றில் தமிழர்களுடைய சிற்றரசுகளும் இருந்திருக்கின்றன. இவைபற்றி ஆராய்வதற்கு முன்னர், ஏற்கனவே கேட்கப்பட்ட இரண்டாவது கேள்விக்கு விடைகாண்பது முக்கியமாகின்றது.

அக் கேள்வியானது, பௌத்த மதம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட முன்பு, இலங்கையில் வாழ்ந்த மக்கள் என்ன மதத்தினராக இருந்திருக்கின்றனர் என்பதாகும். ஏற்கனவே முதலாவது அத்தியாயத்தில் கூறப்பட்டது போன்று, இலங்கையின் ஆதி மக்கள், குறிப்பாக இரும்புப் பண்பாட்டுக்கால மக்களும், தென்னிந்தியாவில் உள்ள இரும்புப் பண்பாட்டுக் கால மக்களும், ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதாகும். வடநாட்டு வைதீகச் சமயக் கோட்பாடுகள், தென்னிந்தியாவில் முன்பிருந்த சமய நம்பிக்கைகளுடன் கலந்து சைவ, வைணவ மதங்களாகத் தோற்றம் பெற்று, குறிப்பாகத் தமிழ்நாட்டின் வரலாற்று ஆரம்ப காலகட்டத்தில் இடம் பெற்றன. தொல்லியற் சான்றுகளும் சங்க இலக்கியங்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன. அவ்வாறெனின் வரலாற்றுத் தொடக்க காலத்தில், இலங்கைக்கு பௌத்தம் வருமுன் மக்கள் மத்தியில் நிலவிய மதமும், இந்து மதத்தின் முக்கிய பிரிவுகளுள் ஒன்றான சைவமாகவே இருந்திருக்க வேண்டும். சிவ வழிபாடு அக்காலத்தில் முக்கிய இடம் பெற்றிருந்தது என்பதைப் பல்வேறு



தேவநம்பிய தீசனால் அநுராதபுரத்தில் கட்டப்பட்ட தூபராம விகாரை

“இலங்கைக்கு பௌத்தம் வருமுன் மக்கள் மத்தியில் நிலவிய மதமும், இந்து மதத்தின் முக்கிய பிரிவுகளுள் ஒன்றான சைவமாகவே இருந்திருக்க வேண்டும். சிவ வழிபாடு அக்காலத்தில் முக்கிய இடம் பெற்றிருந்தது என்பதைப் பல்வேறு வழிகளில் அறியமுடிகின்றது. உதாரணமாக, தேவநம்பியதீச மன்னன் பௌத்த மதத்தைத் தழுவிய நிகழ்வு அவன் வேறு ஒரு மதத்தில் இருந்துநீங்கியேபௌத்தமதத்தைத்தழுவியிருக்கின்றான் என்பதை உணர்த்துகின்றது.”

## தமிழரின் தோற்றமும் ஆரம்ப வரலாறும் கி.மு 300-கி.பி 300

வழிகளில் அறியமுடிகின்றது. உதாரணமாக, தேவநம்பியதீச மன்னன் பௌத்த மதத்தைத் தழுவிய நிகழ்வு அவன் வேறு ஒரு மதத்தில் இருந்து நீங்கியே பௌத்த மதத்தைத் தழுவியிருக்கின்றான் என்பதை உணர்த்துகின்றது. அம்மதம் சைவமாகத்தான் இருந்திருக்கின்றது என்பதை, அவனுடைய தந்தையின் பெயரை வைத்து அறிய முடிகின்றது.

கி.மு.247இல் அரசனாக முடிசூடிக்கொண்ட தேவநம்பியதீசனின் தந்தை பெயர் பாளி நூல்களில் மூதசிவன் (மூத்தசிவன்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மூத்தசிவன் கி.மு. 307 தொடக்கம், கி.மு 247 வரை அநுராதபுர அரசனாக இருந்திருக்கின்றான். மேலும் மகாசிவன் என்பவன் கி.மு.197-187 காலப்பகுதிகளில் அநுராதபுர அரசனாக இருந்திருக்கின்றான். சிவன் என்ற பெயர் வழக்கில் இருந்தமை, அக்காலத்தில் சிவவழிபாடு இருந்திருக்கின்றது என்பதனை உணர்த்துகின்றது. கடவுளின் பெயர்களை, சைவர்கள் தமக்குச் சூட்டிக் கொள்வது, சைவ, தமிழ்க் கலாசாரங்களில் அன்று தொடக்கம் இன்றுவரை நிலவும் பாரம்பரியமாகும். சிவன் என்ற பெயர் வழக்கில் இருந்தமைக்கு ஆதிப் பிராமிக் கல்வெட்டுகளில் சிவ என்ற பெயர் பலமுறை காணப்படுகின்றமை ஆதாரமாகும். அத்தோடு பாளி வரலாற்று ஏடுகளிலும், அநுராதபுரத்திலும், வேறு இடங்களிலும் சிவ வழிபாடு நடைமுறையில் இருந்தமை பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இதற்கு மேலும் எடுத்துக்காட்டாக, வட்டகாமினியின் ஆட்சியின்போது (கி.மு.103 - கி.மு.89), பிராமணர்களின் குடியிருப்புக்களையும், வேதம் ஓதும் மண்டபங்களையும், யாக சாலைகளையும் அவன் அமைத்தான் என மகாவம்சத்திலிருந்து அறிய முடிகிறது.

இவை தவிர, புராதன காலத்திலிருந்து, இலங்கையைச் சுற்றி ஈஸ்வரன் கோவில்கள் இருந்தன என்று சைவமக்கள் மத்தியில் மரபுக் கதைகள் இருந்து வந்திருப்பதையும் அறியமுடிகின்றது. இம் மரபுக் கதைகளை உண்மைப்படுத்தும் வகையில், இலங்கையின் வடக்குக் கரையில் மிகப் புராதன சிவாலயமாக நகுலேஸ்வரமும், மேற்குக் கரையில் முனீஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகியவையும், கிழக்குக் கரையில் திருக்கோணேஸ்வரமும், தெற்கில் தெவிநுவரவில் தொண்டேஸ்வரமும் மிகப் பழைமை வாய்ந்த புராதன சிவாலயங்களாக அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது.

இக் கோவில்களைப் பற்றிய தொடக்ககால வரலாறுகள்பற்றி அறிய, எதுவித சான்றுகளும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. ஆனால், கி.பி.7ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில், திருஞானசம்பந்தரும் சுந்தரரும் திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம் ஆகிய சிவ தலங்களின் மீது தேவாரப் பதிகங்களைப் பாடிச் சிறப்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. சைவத்தின் தொன்மை, அதன் வளர்ச்சி என்பன சம்பந்தமாக பிறிதோர் அத்தியாயத்தில் ஆராய இருப்பதனால் அவை பற்றி மேற்கொண்டு தொடர்வதை இங்கு நிறுத்துவது அவசியமாகின்றது. பௌத்தமதம் இலங்கைக்கு வருமுன் சைவசமயமே மக்களின் பிரதான மதமாகவும், அரச மதமாகவும் இருந்திருக்கின்றது என்பதனையே இவ்விடத்திற் கருத்திற் கொள்ள வேண்டும்.

வரலாற்று நூல்களில் அநுராதபுரம் ஏன் ஒரு புராதன இராச்சியமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது என்பது இறுதிக் கேள்வியாகும். அவ்வாறாயின், எதுவிதமான ஓர் ஆரம்ப அரசும் இல்லாமல் அநுராதபுர இராச்சியம் எவ்வாறு ஒரு வலுவுள்ள இராச்சியமாகத் தோற்றம் பெற்று ஆரம்பகால வரலாற்றில் இடம் பெற்றிருக்க முடியும்?. இதுவரை மேலே கூறப்பட்ட விடயங்கள் இக் கேள்விக்கான பதிலைக் குறிப்பிடத்தக்க அளவு அளித்திருந்தாலும் இவ் விடயத்தை மேலும் ஆழமாக நோக்குவது அவசியமாகின்றது.

கி.மு. 1000 ஆம் ஆண்டளவில், இலங்கையின் வடக்கு, கிழக்கு, வடமேற்கு, வடமத்திய பகுதிகளில் இரும்புக்காலப் பண்பாட்டைக் கொண்ட திராவிட மக்கள் ஓரளவு சமூக, சமய, கலாசார, பொருளாதார, அரசியல் நிலைமைகளில் தம்மை வளர்த்துக் கொண்டிருந்தனர் என்பது தொல்லியல் தரும் சான்றுகளாகும். அவ்வாறான ஒரு சமூகக் கட்டமைப்பு, ஒரு நிர்வாக அமைப்பு முறையையோ அல்லது அரசமைப்பு முறையையோ கொண்டிருந்திருக்கும். இந்த அடிப் படையில் அப்பிரதேசங்களின் நிலைமையை ஆராயும்போது, ஆரம்பகால அரசியல் பற்றிய விடயங்களைக் காணக்கூடியதாக உள்ளது. இதுபற்றி பேராசிரியர் இந்திரபாலா முன்பு குறிப்பிட்ட நூலில் பின்வருமாறு கூறுகின்றார்.

“இப் புதிய பண்பாட்டின் (இரும்புக்காலப் பண்பாடு) வருகையால் தென்னிந்திய-இலங்கைப் பிராந்தியத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் முக்கியமான நாகரிகப் பண்புகள் வளரத் தொடங்கின. தென்னிந்திய-இலங்கைப் பிராந்தியத்தின் நடுப்பகுதிகளில் அதாவது மன்னார்க் கடலின் இரு மருங்கிலும், இப் பிராந்தியத்தின் முதலாவதுகுறுநில அரசுகள் எழுச்சி பெற்றன.

(தொடரும்)

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2018-16.09.2018

## பணப் பற்றாக்குறை அகலும்!



விளம்பி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இலாப ஸ்தானத்தில் சூரியன் வீற்றிருக்கிறார். நன்மை தரும் செவ்வாய் 4 இல் இருக்கிறார். இராசிநாதன் சுக்கிரன் நீச்சம் பெற்றிருந்தாலும், ஓகஸ்ட் 28 ஆம் திகதிக்கு மேல் பலம் பெறுகிறார். எனவே குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உடன் இருப்பவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். வாடும் நிலை மாறி வளர்ச்சி நிலை உருவாகும். பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கவில்லையே என்று நினைத்த உங்களுக்கு, ஆவணி 10 ஆம் திகதிக்கு மேல் அற்புதப் பலன்கள் வரப்போகிறது.

தேவைகள் பூர்த்தியாகும். செல்வநிலை உயரும். நெருங்கிய நண்பர்கள் உங்கள் நிகழ் காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வர். வீடு கட்டும் பணி தொடரும். வெளிநாட்டு முயற்சியில் ஆர்வம் காட்டுபவர்களுக்கு அது கைகூடும். நல்ல வாய்ப்புகள் வருவதற்கான அறி குறிகள் தோன்றும். திருமண வரமும் குழந்தை பாக்கியமும் கிடைக்கலாம்.

சுகஸ்தானத்தில் கேதுவும் 10 இல் ராகுவும் சஞ்சரிப்பதால் சர்ப்ப கிரகங்களின் ஆதிக்கத்தில் உங்கள் இராசி சிக்கியிருக்கிறது. எனவே அதிலிருந்து விடுபட சுய ஜாதக அடிப்படையில் பரிகாரங்களை மேற்கொள்ளுங்கள். அப்பொழுது தான் ஆதாயம் தரும் தகவல்கள் உங்களுக்கு வரும். பழைய வாகனங்கள் பழுதாவதால், புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகள் சலுகைகளை வழங்குவர். உயர் பதவியும், ஊதிய உயர்வும் தானாகவே வந்து சேரலாம். தொழில் புரிபவர்களுக்கு அரசு வழிச் சலுகைகள் கிடைத்து ஆனந்தம் ஏற்படும். வியாபாரத்தில் இலாபம் இருமடங்காக வரலாம். விநாயகர் சதுர்த்தியன்று, தும்பிக்கையானை முறையாக வழிபட்டு வருவதன் மூலம் நம்பிக்கைகள் அனைத்தும் நடைபெறும்.

சனி வக்கிர நிவர்த்திக் காலம்!

மாதத் தொடக்கத்தில் சனி பகவான் வக்கிரம் பெற்றுச் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஓகஸ்ட் 20 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு சனி நட்பு கிரகமாவார். எனவே நல்ல வாய்ப்புகளையெல்லாம், இல்லம் வர வழிவகுத்துக் கொடுப்பார். உங்கள் இராசிக்கு 4, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. பாக்கிய ஸ்தானத்திற்கும், சுக ஸ்தானத்திற்கும் அதிபதியான சனி பலம் பெறும் இந்தநேரத்தில் வளர்ச்சி கூடும். வருமானம் திருப்தி தரும். இழப்புகளை ஈடு செய்ய இனிய நண்பர்கள் உதவிக்கரம் நீட்டுவர். என்றைக்கோ வாங்கிப் போட்ட சொத்துகளை விற்பதன் மூலம் பெரியளவில் இலாபம் கிடைக்கும். உறவினர்கள் பகை மாறும்.

புதன் பெயர்ச்சி காலம்

இம்மாதம் ஓகஸ்ட் 28 ஆம் திகதி சிம்மத்திற்கு புதன் வருகிறார். அங்குள்ள சூரியனோடு இணைவதால் புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி, கடல் தாண்டிச் செல்வது தொடர்பான முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அனுகூலமான நேரமிது. புதிய பொறுப்புகளும், பதவிகளும் ஆச்சரியப்படும் விதத்தில் வந்து சேரலாம். புனிதப் பயணங்களும் அதிகரிக்கும். செப்டெம்பர் 3 ஆம் திகதி புதன் அஸ்தமனம் அடைகிறார்.

9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக புதன் விளங்குவதால், பெற்றோர் வழி உறவில் விரிசல்கள் ஏற்படலாம். சொத்துத் தகராறு உருவாகும். செப்டெம்பர் 15 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறுகிறார். இக்காலத்தில் சுபவிரயங்கள் அதிகரிக்கும். கல்யாண காரியங்கள் கைகூடும். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.




மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தைச் சீராக்கிக் கொள்வீர்கள்.

சுக்கிரப் பெயர்ச்சிக் காலம்!

ஓகஸ்ட் 28 ஆம் திகதி துலாம் இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். இக்காலம் ஒருபொற்காலமாகும். குருவுடன் சுக்கிரன் இணைந்து சஞ்சரிக்கும் பொழுது பலவித மாற்றங்கள் உங்களுக்கு வரப்போகின்றது. திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திடீர் திருப்பங்கள் உருவாகும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்திணைவர். தொழில் முயற்சி வெற்றிபெறும். அதிக முதலீடு செய்யும் யோகம் உண்டு.

செவ்வாய் வக்கிர நிவர்த்தி

செப்டெம்பர் 6 ஆம் திகதி செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகிறார். இது மிகுந்த நற்பலன்களை உங்களுக்கு வழங்கும். குறிப்பாக 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் உச்சம் பெற்றுப் பலம்பெற்றிருக்கும் இந்த நேரத்தில், சொத்துகள் வாங்கும் யோகம் உண்டு. சொந்தங்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். வெற்றிக்குரிய செய்தி நிறைய வரலாம். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர். நண்பர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு அகலும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்திணைவர். முட்டுக் கட்டையாக இருந்தவர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர்.

பாதியில் நின்ற பணியை மீதியும் தொடருவீர்கள். குடும்ப முன்னேற்றம் அதிகரிக்கும். முக்கியப் புள்ளிகள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவர். இம்மாதம் வள்ளி மணவாளனை செவ்வாய் தோறும் வழிபாடு செய்யுங்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

குரு-சந்திர யோகத்தோடு பிறக்கும் இந்த மாதத்தில் கிரக நிலைகள் சாதகமாகவே சஞ்சரிக்கின்றன. இலாப ஸ்தானம் பலம்பெறுவதால் பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். செவ்வாய் பலத்தால் உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். கணவன்-மனைவிக்குள் பாசமும் நேசமும் கூடும். உங்கள் பெயரில் தொழில் தொடங்கும் முயற்சிக்கு குடும்பத்தினர் சம்மதிப்பர். குடும்ப உறுப்பினர்களின் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். குழந்தைகளின் வழியிலும் சுபச்செலவு உண்டு. அவர்களின் கல்வி வளர்ச்சி திருப்தி தரும். தாய்வழி ஆதரவும் தமக்கை வழி ஒத்துழைப்பும் உங்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றும். சொத்துகள் வாங்கும் யோகம் உண்டு. வாகனங்கள் வாங்க, வீடுகட்ட எடுத்த முயற்சிக்கு மேலிடத்து ஆதரவு கிடைக்கும். சதுர்த்தியன்று ஆனைமுகப் பெருமானை வழிபடுவது உகந்தது.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## வருமானம் கூடும் நேரம்!



விளம்பி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் உச்சம் பெற்று வலிமையோடு சஞ்சரிக்கிறார். அதே நேரத்தில் அவர் வக்கிரமாகவும் விளங்குகிறார். இம்மாதத்தில் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாவதால் சிறப்பான பலன்கள் உங்களுக்கு ஏராளமாக வந்துசேரப் போகிறது. குறிப்பாக தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் ரீதியாக வரும் வருமானம் உயரும். சூரிய பலமும் தொழில் ஸ்தானத்தில் நன்றாக இருப்பதால் ஒரு சிலருக்கு கிளைத் தொழில் தொடங்கும் வாய்ப்பும் உருவாகும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு அதிகாரப் பதவி கிடைக்கலாம். வீடு கட்டும் முயற்சியில் இருந்த தடைகள் அகலும். மனை கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சி கைகூடும். உடன்பிறப்புகள் உதவியாக இருப்பர்.

சனியும் இம்மாதத்தில் வக்கிர நிவர்த்தியாகிறார். சகாய ஸ்தானாதிபதியாக விளங்கும் சனி பகவான், குடும்பச் சனியாகத் திகழும் இம்மாதத்தில் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். மங்கல ஓசை மனையில் கேட்க வழிபிறக்கும். வாக்கு, தனம், குடும்பம் எனப்படும் இடத்திற்கு அதிபதியான குருபகவான், சந்திரனோடு இணைந்து குரு-சந்திர யோகத்தை உருவாக்கும் விதத்தில் இம்மாதத் தொடக்கம் அமைகிறது. எனவே நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரப்போகின்றது.

இராசிநாதன் செவ்வாய் கேதுவோடு இணைந்து சஞ்சரிப்பதால் ஆனைமுகப்பெருமான் வழிபாடும், ஆறுமுகப்பெருமான் வழிபாடும் உங்களுக்கு அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொடுக்கும். விநாயகர் சதுர்த்தி அன்று விரதமிருந்து அருகிலிருக்கும் ஆலயத்திற்குச் சென்று விநாயகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட்டு வருவது நல்லது. மேலும் 9 ஆம் இடத்தில் ராகு பலம் பெற்றிருப்பதால் நாக சாந்திப் பரிகாரங்களையும் யோகபலம் பெற்ற நாளில் அனுகூலம் தரும் தலங்களில் செய்துவந்தால் சந்தோசங்களை மட்டுமே சந்திக்கும் வாய்ப்பு உருவாகும்.

சனி வக்கிர நிவர்த்திக் காலம்!

இதுவரை வக்கிர இயக்கத்தில் இருந்த சனிபகவான் ஓகஸ்ட் 20 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசி அடிப்படையில் சகாய ஸ்தானாதிபதியாகவும் சுக ஸ்தானாதிபதியாகவும் விளங்குபவர் சனி பகவான். இவர் இப்பொழுது தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அவர் வக்கிர நிவர்த்தியாகி பலம்பெறுதால் பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். குடும்ப முன்னேற்றம் கூடும். வாகன யோகம் முதல் அனைத்து யோகங்களும் படிப்படியாக வந்து சேரும். தேக நலனில் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். நண்பர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்து கொள்வர். எதிரிகள் விலகுவர். உதிரி வருமானங்கள் வந்துசேரும். சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும் நேரம் இது. இடம், பூமி சேர்க்கை உண்டு.

புதனின் பெயர்ச்சி காலம்




ஓகஸ்ட் 2 ஆம் திகதி சிம்ம இராசிக்குப் புதன் செல்கிறார். அங்கு சஞ்சரிக்கும் சூரியனோடு இணைந்து புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். இக்காலம் ஒரு பொற்காலமாக உங்களுக்கு அமையும். கல்விக்காகவும், கலைத் துறையில் ஈடுபடவும் எடுத்த முயற்சி கைகூடும். அரசியல்வாதிகளால் அனுகூலம் உருவாகும். தொழில் தொடங்குவதற்கோ அல்லது ஏதேனும் ஒரு புது முயற்சி செய்வதற்கோ அரசு வழிச் சலுகைகளை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு, அதற்காக வாய்ப்புகள் கைகூடும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும், ஊதிய உயர்வும் எதிர்பாராமல் கிடைக்கலாம். செப்டெம்பர் 3 ஆம் திகதி புதன் கொஞ்சம் வலிமையிழக்கிறார். அதன்பிறகு செப்டெம்பர் 15 இல் கன்னி இராசியில் புதன் உச்சம் பெறுகிறார். இக்காலம் மிகமிக இனிய காலமாகும். இலாப ஸ்தானம் பலம்பெறும் பொழுது நினைத்துப் பார்க்க இயலாத சில நல்ல நிகழ்வுகள் நடைபெறும். வெளிநாட்டு யோகம் வீடு தேடி வரும். வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். வங்கிச் சேமிப்பு உயரும். வாய்ப்புகள் வாசல் கதவைத் தட்டும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

சுக்கிரப் பெயர்ச்சிக் காலம்!

ஓகஸ்ட் 28 ஆம் திகதி துலாம் இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். சுக்கிரனுக்கு அது சொந்த வீடாகும். அயன சயன ஸ்தானத்தில் சுக்கிரன் பலம் பெற்று 6 ஆம் இடத்தைப் பார்ப்பதால் இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். தீர்த்த யாத்திரைக்குச் சென்று திருவருள் பெறும் யோகம் உண்டு. இடமாற்றம், ஊர்மாற்றங்கள் இனிமை தரும். புதிய வாகனம் வாங்கும் அமைப்பு உருவாகும்.

செவ்வாய் வக்கிர நிவர்த்தி

உங்கள் இராசிநாதன் செவ்வாய் செப்டெம்பர் 6 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். எனவே உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும். செய்தொழிலில் மேன்மையும் சிறப்பும் வந்து சேரும். தோட்டம் வாங்குவதில் நாட்டம் செலுத்துவீர்கள். வாக்கு சாதுர்யத்தால் நோக்கமெல்லாம் நிறைவேறும். வணிகம் செய்பவர்களுக்கு வரவு இருமடங்காகும். நீங்கள் துணிந்து எடுக்கும் முடிவுகளைப் பார்த்து அருகிலுள்ளவர்கள் ஆச்சரியப்படுவர். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். திறமை பளிச்சிடும்நேரமிது. இம்மாதம் விநாயகர் சதுர்த்தியன்று விரதமிருந்து வடக்கு நோக்கி வீற்றிருக்கும் கற்பக விநாயகரை வழிபட்டால் வளர்ச்சி கூடும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!


இம்மாதம் இராசிநாதன் செவ்வாயும் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனியும் வக்கிர நிவர்த்தியாவதாலும் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை வரவு திருப்தி தரும். பட்டி, தொட்டிகளில் உங்கள் புகழ் பரவும். நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கும் முயற்சிக்கு குடும்ப உறுப்பினர்கள் சம்மதிப்பர். தாய்வழி ஆதரவு திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் ஏற்படும். கல்யாணக் கனவுகள் நனவாகும். உத்தியோகத்தில் உள்ள பெண்களுக்கு உயர் பதவிகள் கிடைப்பது மட்டுமல்லாமல் மேலதிகாரிகளின் ஆதரவோடு வீடுகட்டச் சலுகைகள் கிடைக்கும். வெள்ளிக்கிழமை விநாயகரையும் சனிக்கிழமை அனுமனையும் வழிபட்டால் வெற்றி வாய்ப்புகள் வீடு தேடிவரும்.

(தொடரும்)

# சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயமும் இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதித்துவமும்




கலாநிதி
க. தவலிங்கம்,
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு



முதலாவது "கூட்டு அமைச்சரவை"


(குறிப்பு- சுதந்திரச் சதுக்க ஞாபகார்த்த மண்டபக் கட்டட நிர்மாணப் பணிகள் 1949ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது)

அரசியலமைப்பின்படி நியமிக்கப்பட்ட ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களில் தமிழர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.



பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை
(அன்றைய தோற்றம்)

### செனற்சபை



காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை
(அன்றைய தோற்றம்)

சோல்பரி அரசியலமைப்பு இலங்கைப் பாராளுமன்றம் கீழ்ச் சபை, மேற்சபையென இருசபைகளைக் கொண்டிருக்குமென விதித்தது. கீழ்ச்சபை பிரதிநிதிகள் சபையென அழைக்கப்பட்டது. அதன் உறுப்பினர் "பாராளுமன்ற உறுப்பினர்" என அழைக்கப்பட்டனர். பிரதிநிதிகள் சபைதான் உண்மையான அரசியலதிகாரம் படைத்த சபையாக விளங்கியது. நிதி விடயங்கள் உட்படச் சகல சட்டங்களையும் இச் சபைதான் விவாதித்துத் தீர்மானித்தது.

கீழ்ச்சபை அவசரப்பட்டு நிறைவேற்றும் சட்டங்களை புனராலோசனைசெய்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஆலோசனை வழங்குவதே மேற்சபையின் கடமையாகவிருந்தது. மேற்சபையில் (செனற்சபை) 30 உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்கள் செனட்டர்களென அழைக்கப்பட்டனர். 15 செனட்டர்களை மகாதேசாதிபதி பிரதமரின் ஆலோசனையின்படி நியமனம் செய்வார்.

மீதி 15 செனட்டர்களும் பிரதிநிதிகள் சபையினால் "விகிதாசாரப் பிரதிநிதித்துவம்" என்ற முறையில் தெரிவு செய்யப்பட்டனர். 1947ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட செனற்சபையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் இடதுசாரிகள் சார்பாக சோமசுந்தரம் நடேசன், தமிழ்க் காங்கிரஸ் சார்பாக டாக்டர் இ.மு.வி. நாகநாதன் மற்றும் இலங்கை-இந்திய காங்கிரஸ் சார்பாக பெரி சுந்தரம் ஆகிய தமிழர்கள் செனட்டர்களாக தெரிவு செய்யப்பட்டனர். நியமன முறையில் யாழ். இந்துவில் படித்த செ.குமாரசாமி, சேர். சிற்றம்பலம். ஏ. காடினர், ஏ.பி. இராஜேந்திர முதலியார் ஆகிய தமிழர்கள் செனட்டர்களாக இருந்தனர். 1949 ஆம் ஆண்டில் எஸ். ஆர். கனகநாயகம் செனட்டராக தெரிவு செய்யப்பட்டார்.



பெரி சுந்தரம்



செல்லப்பா.
குமாரசாமி



டாக்டர் இ.மு.வி.
நாகநாதன்



சோமசுந்தரம்
நடேசன்



சேர். சிற்றம்பலம்.
ஏ. காடினர்



எஸ். ஆர்.
கனகநாயகம் (1949)

### தமிழ் செனட்டர்கள் (1947)


முதலாவது பாராளுமன்றத்தில் பருத்தித்துறை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ரீ. இராமலிங்கம் குழுக்களின் பிரதித் தவிசாளராக 1951ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதியிலிருந்து 1952ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி வரை கடமையாற்றினார்.

1952ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் திகதி பிரதமர் டீ. எஸ்.சேனநாயக்க குதிரையிலிருந்து விழுந்து மரணமடைந்ததையடுத்து அவரின் மகன் டட்லி சேனநாயக்க இலங்கையின் இரண்டாவது பிரதமராக பதவியேற்றுக் கொண்டார்.

டட்லி சேனநாயக்க பதவியேற்று சரியாக 17 நாட்களின் பின் அதாவது 1952ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றம் பிரதமர் டட்லி சேனநாயக்கவினால் கலைக்கப்பட்டது.

முதலாவது பாராளுமன்ற காலத்தில் கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட பிளவுகள் மற்றும் இந்திய வம்சாவளியினரின் பிரஜாவுரிமை மற்றும் வாக்குரிமையை இரத்துச்செய்தமை போன்ற விடயங்களை இன்னொரு கட்டுரையில் பார்ப்போம்.

(முற்றும்)



1948ஆம் ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதி சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தின் முதல் அமர்வு சுதந்திரச் சதுக்கத்தில் விஷேடமாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பம்

# சிறுவர் அரங்கம்

## எலி மாளிகைக்குச் சென்ற தாத்தா!



அவந்தி நாட்டில் தாத்தாவும் பாட்டியும் வசித்து வந்தனர். தாத்தா காட்டுக்குச் சென்று விறகு வெட்டி, அதை விற்று வரும் வருமானத்தில் குடும்பம் நடத்திவந்தார்.

அன்று காலை வழக்கம்போல் தாத்தா வேலைக்குக் கிளம்பினார். பொரி அரிசி மா உருண்டை ஒன்றை மதிய உணவுக்காகக் கொடுத்து அனுப்பினார் பாட்டி. பட்டுப்போன மரங்களைத்தான் வெட்டுவார் என்பதால் அதைத் தேடிக் கண்டுபிடிக்க நேரம் ஆகிவிட்டது. அரிசி மா உருண்டையை ஒரு பற்றைக்கு அடியில் வைத்துவிட்டு வெட்ட ஆரம்பித்தார். சிறிதுநேரத்தில் பசி எடுத்தது.

அருகில் இருந்த பொந்தில் உள்ள எலிகளுக்கு அரிசி மாவு உருண்டையின் மணம் கவர்ந்தது. வேகமாக வெளியில் வந்து உருண்டையை எடுத்துச் சென்றன. ஓடையில் கைகளைச் சுத்தம் செய்துவிட்டு, பற்றைக்கு வந்தார் தாத்தா. அரிசி மா உருண்டையைக் காணவில்லை.

பொந்து வாசலில் தன்னுடைய பை இருப்பதைக் கண்டவுடன், அதை மெதுவாக இழுத்தார். துணியைக் கவ்வியபடி ஓர் எலி வெளியே வந்து நின்றது. தாத்தா திகைத்தார்.

"சுவையான உணவை எங்களுக்குத் தந்ததற்கு மிக்க நன்றி" என்ற எலியைப் பார்த்து ஆச்சரியமானார் தாத்தா.

"எலியே, உருண்டை உங்களுக்குப் பிடித்திருந்ததில் மகிழ்ச்சி! வயிறு நிரம்பியதா?" என்று அன்போடு கேட்டார் தாத்தா.

"உங்கள் உணவை அனுமதியின்றி உண்ட எங்களைப் பார்த்துக் கோபப்படாமல் அன்பாக விசாரிக்கிறீர்களே! உங்கள் உயர்ந்த மனம் யாருக்கும் வராது. எங்களுடைய மாளிகைக்கு வந்து சற்று இளைப்பாறிவிட்டுப் போக வேண்டும்" என்று பணிவோடு கூறியது எலி.

"உங்கள் மாளிகைக்குள் நான் எப்படி நுழைய முடியும்?"

"என்னைத் தொடுங்கள்" என்றது எலி. தொட்ட உடன் தாத்தா எலி அளவுக்குச் சிறிதாக மாறினார். மாளிகைக்குள் நுழைந்தார்.

அந்த மாளிகையில் அவருக்குத் தடபுடலான வரவேற்பும் விருந்தும் பரிமாறப்பட்டன. தாத்தா கிளம்பும் நேரம் வந்தது. எலிகள் சுமக்க முடியாமல் ஒரு பெரிய மூடையைத் தூக்கி வந்தன. அதைத் தாத்தாவிடம் கொடுத்து, எங்களது அன்புப் பரிசை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றன.

தாத்தா பிரித்துப் பார்த்தார். பை நிறைய தங்க நாணயங்கள் இருந்தன. இவ்வளவு நாணயங்கள் எங்களுக்கு எதுக்கு என்று ஒரே ஒரு நாணயத்தை மட்டும் எடுத்துக் கொண்டார்.

"உங்களை நினைத்தால் பிரமிப்பாக இருக்கிறது. இந்தப் பையில் ஒற்றை நாணயத்தைப் போட்டு வைத்துக் கொள்ளுங்கள். இதை நீங்கள் செலவழித்ததும் மீண்டும் ஒரு தங்க நாணயம் தோன்றும். நீங்களும் பாட்டியும் சந்தோசமாக இருங்கள்" என்று சொல்லி, வழி அனுப்பி வைத்தன எலிகள். பொந்தை விட்டு வெளியே வந்தவுடன் மீண்டும் பழைய உருவத்தை அடைந்தார் தாத்தா.

தங்க நாணயப் பையோடு வீட்டுக்கு வந்தார். பாட்டியிடம் நடந்ததைக் கூறினார். இதைக் கேட்ட பக்கத்து வீட்டுக்காரர் முத்துவுக்கு, உடனே எலி மாளிகைக்குச் செல்ல வேண்டும் என்று ஆசை வந்தது. மறுநாள் தாத்தாவிடம், நேற்று எந்த இடத்திலிருந்து விறகு கொண்டு வந்தீர்கள் என்று கேட்டார். தாத்தாவும் பற்றைச் செடியை அடையாளம் சொன்னார். உடனே அரிசி மாவு உருண்டைகளோடு கிளம்பினார் முத்து.

காட்டில் அலைந்து திரிந்து தாத்தா சொன்ன இடத்தைக் கண்டுபிடித்தார். தான் கொண்டு வந்த அரிசி மா உருண்டைகளைப் பொந்துக்குள் வீசினார். பிறகு மரத்தடியில் படுத்து உறங்கினார். மாலையில் கண் விழித்தார். அரிசி மா உருண்டைகள் அப்படியே இருந்ததைக் கண்டு கோபம் அடைந்தார்.

"எலிகளே, மரியாதையாக வெளியே வாருங்கள்! என் அரிசி மா உருண்டைகளை வைத்துக்கொண்டு, தங்க நாணயங்களைத் தாருங்கள்" என்று கத்தினார் முத்து.

எலி ஒன்று கோபமாக வெளியே வந்தது.

"நீதான் அரிசி உருண்டையைத் தூக்கி வீசியவனா? தாத்தா கொண்டுவந்ததுபோல சுவையாக இல்லையே? போனால் போகட்டும், உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டது அந்த எலி.

"எனக்கு மூடை மூடையாகத் தங்க நாணயங்கள் வேண்டும்" என்றார் முத்து.

"அவ்வளவுதானே!" என்ற எலி, முத்துவைச் சிறிய உருவமாக மாற்றி, மாளிகைக்குள் அழைத்துச் சென்றது.

தங்க நாணயங்களைக் கண்டவுடன், பெரிய பெரிய பைகளில் போட்டு மூடைகளாகக் கட்டினார் முத்து.

"நாணயங்கள் போதுமா? சாப்பிடுகிறாயா?" என்று கேட்டது ஓர் எலி.

"பத்து மூடைகள்தான் கட்ட முடிந்தது. இப்போது மூடைகளில் கொண்டு செல்லும் எண்ணம் இல்லை. இந்த மாளிகை நாணயங்கள் முழுவதையும் எடுத்துச் செல்ல விரும்புகிறேன். எலிகளே, உங்கள் மீது இந்த மருந்தை அடிக்கப் போகிறேன். நீங்கள் அழிந்து போவீர்கள். பிறகு இந்த மாளிகை முழுவதும் எனக்கே" என்று சொல்லிக்கொண்டே மருந்தை எடுத்தார் முத்து.

உடனே எலிகள் மாயமாக மறைந்தன. தங்க நாணயங்களும் காணாமல் போயின. பொந்தின் வாயில் அடைத்துக்கொண்டது. மருந்தின் நெடியில் முத்துவும் மயங்கி விழுந்தார். நீண்டநேரம் கழித்து கண் விழித்தபோது இருள் சூழ்ந்திருந்தது. பயந்து போனார்.

"எலிகளே, என்னை மன்னித்து விடுங்கள்! என்னை வெளியே விடுங்கள். எனக்கு நாணயங்கள் வேண்டாம்" என்று கத்தினார் முத்து.

எலிகள் திரும்பி வரவே இல்லை. முத்து ஒரு பெருச்சாளியாக மாறி, எவ்வளவு உணவு கிடைத்தாலும் திருப்தி இல்லாமல் வளைகளைத் தோண்டிக்கொண்டிருக்கிறார்.

# பொன்மொழிகள்

- கல்வி ஒரு மூடை நூல்களை வாசிப்பது அன்று. அடக்கம், ஒழுங்கு, அறம், நீதி இவற்றின் முன்மாதிரியாகும். - எட்மண்ட் பர்க்
- ஒழுக்கம் உண்டாக்காத இலக்கியக் கல்வியால் ஒருவித உபயோமும் கிடையாது. - காந்திஜி
- சான்றோன் ஆக்காத கல்வி, சாமர்த்தியமாய்க் கழித்த சோம்பலேயாகும். - போலிங் புரூக்
- நாம் கற்றுக் கொண்டதைப் போற்ற வேண்டும். நமக்குத் தெரிந்தவற்றை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும். - மூர்
- தனிமனிதர் வாழ்வை இன்பமுடையதாகவும் நன்மையுடையதாகவும் மாற்றி அமைப்பதும் வாழ்வாங்கு வாழ வகுப்பதுமே கல்வி. - பெஸ்டலசி
- ஒரு குழந்தை கனவானாகவோ, சீமாட்டியாகவோ இருக்கும்படி செய்வது கல்வியல்ல. நல்ல மனிதனாக இருக்கச் செய்வதே கல்வி. - ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்
- கல்வி என்பது தெரியாததைத் தெரியச் செய்வதன்று. ஒழுக்கத்தை ஒழுகச் செய்வதும் இன்பம் அளிப்பதுமாகும் - ரஸ்கின்
- நூறு முறை உளியால் அடித்தும் சிறு கீறல் கூட ஏற்படாமல் இருக்கும் பாறை, நூற்றியொராவது முறை அடிக்கிறபோது உடையும். அது கடைசி அடியால் உடையவில்லை. அதற்கு முந்தைய அடிகளால்தான் உடைந்தது. - ஜேக்கப்ரைஸ்
- பொறுமையோடு இடைவிடாமல் முயற்சி செய்பவனுக்கே வெற்றி கைகட்டிச் சேவகம் செய்யக் காத்திருக்கிறது. - ஹெக்டர்
- கடினமான வேலைகளைச் செய்வதில் மகிழ்ச்சியடைபவர்களே எப்போதும் புகழ் பெறுகிறார்கள். - மகாகவி மில்டன்
- விசிறியை அசைக்காமல் காற்று வராது. வியர்வை சிந்தாமல் உயர்வு வராது. - ஜப்பான்

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2018.08 20

- 1917-இலங்கையில் ஒரு ரூபாய்த்தாள் வழங்கப்பட்டது.
- 1948-இலங்கை குடியுரிமை சட்டம் இலங்கை நாடாளுமன்றத்தில்கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் 700,000 இற்கும் அதிகமான (மொத்த மக்கள்தொகையில் 11%) இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களான இந்திய வம்சாவளித் தமிழர்கள் நாடற்றவர்கள் ஆக்கப் பட்டனர்.
- 1968-பனிப்போர்: 200,000 வார்சா ஒப்பந்த நாடுகளின் படைகள் செக்கோஸ்லவாக்கியாவினுள் புகுந்தன.
- 1975-நாசா வைக்கிங் 1 விண்கலத்தை செவ்வாயை நோக்கி ஏவியது.
- 1977-நாசா வொயேஜர் 2 விண்கலத்தை ஏவியது.
- 2006-நமது ஈழநாடு பணிப்பாளர், முன்னாள் யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிவமகராஜா சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

### பிறப்புகள்

- 1944-ராஜீவ் காந்தி, இந்தியாவின் 6வது பிரதமர் (இ. 1991)
- 1946-நா. ரா. நாராயணமூர்த்தி, இந்தியத் தொழிலதிபர்
- 1951-முகம்மது முர்சி, எகிப்தின் 5ஆவது ஜனாதிபதி
- 1984-மதுமிதா, இந்திய நடிகை

### இறப்புகள்

- 984-பதினான்காம் யோவான் (திருத்தந்தை)
- 1572-மிகுவெல் உலோபசு டி லெகாசுபி, எசுப்பானிய அரசியல்வாதி, பிலிப்பைன்ஸின் முதலாவது ஆளுநர் (பி. 1502)
- 1943-மயிலை சின்னத்தம்பிப்பிள்ளை ராஜா, தமிழக அரசியல்வாதி (பி. 1883)
- 2001-எஸ். கே. பாலகிருஷ்ணன், தமிழக அரசியல்வாதி (பி. 1935)
- 2006-சி. சிவமகராஜா, இலங்கை ஊடகவியலாளர், அரசியல்வாதி (பி. 1938)
- 2011-ராம் சரண் சர்மா, இந்திய வரலாற்றாளர் (பி. 1919)
- 2013-நரேந்திர தபோல்கர், இந்திய எழுத்தாளர், செயற்பாட்டாளர் (பி. 1945)
- 2014-பி. கே. எஸ். அய்யங்கார், யோகா ஆசிரியர் (பி. 1918)
- 2014-அந்தோன் செர்கெயேவிச் புசுலோவ், உருசிய வானியற்பியலாளர், ஊடகவியலாளர் (பி. 1983)

### சிறப்பு நாள்

- விடுதலை நாள் (எசுத்தோனியா, சோவியத்திடம் இருந்து 1991)
- உலகக் கொசு நாள்

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 200 |
| தக்காளி | 60 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 40 |
| கோவா | 140 | 140 | 160 |
| கரட் | 200 | 400 | 400 |
| பூசணி | 80 | 70 | 100 |
| புடோல் | 50 | 60 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 150 | 140 | 200 |
| வெண்டிக்காய் | 30 | 30 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 120 |
| பயற்றங்காய் | 80 | 70 | 100 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 80 | 120 |
| கறிமிளகாய் | 120 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 100 |
| போஞ்சி | 200 | 200 | 200 |
| கத்தரித்தம்புள்ள | 60 | — | 100 |
| கீரை -1பிடி | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 30 | 50 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 140 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 160 | 160 |
| முள்ளங்கி | 30 | 50 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 |
| வல்லாரை | 15 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 40 | 60 |

திருவாசகத்துக்கு உருகாதார்
ஒருவாசகத்துக்கும் உருகார்.

– மூதுரை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எங்களை உருக்கியவனே நீ உருகலையோ

நல்லூர்க் கந்தனின் மகோற்சவம் ஆரம்பமாகிவிட்டால் எங்கும் தெய்வீகமயமாகிவிடும்.

அந்தளவுக்கு நல்லூர்க் கந்தனின் மீது தமிழ் மக்கள் அளவு கடந்த அன்பு கொண்டுள்ளனர்.

வைகறைப்பொழுதில் இளைஞர்கள் அரோகரா என்ற வண்ணம் வீதிப்பிரதட்சணம் செய்வதைப் பார்க்கும்போது, உலகில் எங்கும் இப்படியொரு பக்தி நிலையைக் காணமுடியாது என்று எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு எங்கள் இளைஞர்களுக்கு நல்லூர்க் கந்தனின் மீது அளவு கடந்த அன்பு.

இருபத்தைந்து நாட்களும் நல்லூர்க் கந்தனின் பெருவீதியை உடம்பால் வலம் வருகின்ற எங்கள் இளைஞர்களின் பக்தி நிலை கல் மனதையும் கசிந்துருகச் செய்யும்.

ஆம், வைகறைப் பொழுதில் நல்லூர் முருகனைப் போற்றித் துதித்து அங்கப்பிரதட்சணம் செய்துவிட்டு படிப்பு, உத்தியோகம், தொழில் முயற்சி என்று நம் இளைஞர்கள் தத்தம் கடமைக்குச் செல்கின்ற ஒழுங்கு கண்டு நாமல்லவோ உயர்ந்தவர்கள் என்று மார்தட்டமுடியும்.

எனினும் நாவூறு கழிப்பதுபோல ஒன்று இரண்டு இளைஞர் குழுக்கள் எங்கள் இனத்துக்கு ஈனம் செய்கின்றன. இந்த வேதனை இன்னமும் தொடர்கிறது என்பதுதான் சகிக்க முடியாமல் இருக்கிறது.

தவிர, நேற்றைய தினம் நல்லூர்க் கந்தனின் மாலை உற்சவத்துக்குப் போனேன். வேலவன் திருமுகத்தை யான் பார்த்தேன். ஆனால் அவனுக்கு நான் நின்றது கூடத் தெரியுமோ தெரியவில்லை.

ஒரு குறையும் இல்லாத அலங்காரக் கந்தன் என்ற மிடுக்கு அவனில் தெரிந்தது. அதற்கு மேலாக இப்போது ஏகப்பட்ட வெளிநாட்டவர் வருகையும் சேர, நம் போன்றவர்கள் அவன் கண்ணுக்கு அகப்படாமல் இருப்பதில் நியாயம் இருக்கவே செய்யும்.

பரவாயில்லை என்றோ ஒரு நாள் அவன் பார்வை நம்மீதும் விழும் என்ற நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கை வீண்போனாலும் அது நல்லூர்க் கந்தனின் தவறேயன்றி நம்முடையதல்ல. நம் பணி அவனைப் பார்ப்பது அதுவே நமக்குக் கிடைத்த பெரும் பேறு. மிகுதி அவனைப் பொறுத்தது.

இவை ஒருபுறமிருக்க; வழமைபோல் வேற் பெருமான் வெளிவீதி வருகின்றபோது ஈசானத்தில் திருவாசகம் பாடுகின்ற பாங்கு கண்டேன்.

முதலில் நாதஸ்வரத்தில் திருவாசகம் இசைக்க, அதனைத் தொடர்ந்து அந்தணச் சிவாச்சாரியார் திருவாசகத்தை தேன் சுவையோடு பாடினார். உருகாதார் மனமும் உருகுகின்ற இடம் அது. நெக்குருகி நின்ற அந்தக்கணம் மனிதப் பேற்றின் பேறு என்றுணர்ந்தோம்.

திருவாசகத்தில் உருகுகின்றார் உள்ளம் கண்டு தெளிந்து முருகனைப் பார்த்தேன்.

அட தினம் தினம் நீ எங்களை உருக்குகிறாய். உன்னை நாங்கள் உருக்கவில்லையோ. எங்களால் நீ உருகவில்லையோ அதனால் தான் தமிழர் குறை நீக்க இன்னும் நீ மனம் கொள்ளவில்லையோ என்று எண்ணத் தோன்றியது.

ஓ! எல்லோரும் சேர்ந்து அவன் நாமத்தை உச்சரித்தால், பிறவார்த்தை விடுத்து நல்லூர் முருகா என்றுரைத்தால், அனைவரும் ஆசாரத்தைக் கடைப்பிடித்தால் எங்கள் நல்லூர்க் கந்தப் பெருமான் கசிந்துருகி எங்களுக்கு எல்லாம் தருவான் என்று உள்ளம் உணர்த்தியது.

அதைச் செய்தால் என்ன? அவன் உருகினால் தானே எங்கள் வாழ்வு மலரும். ஆகையால் நல்லூர்த் திருவீதியில் எல்லோரும் ஒன்றாய் முருக நாமத்தை உச்சரிக்கலாம் பிற வார்த்தை விடுத்து.

# தமிழ் மக்களை தவறான வழிக்கு கொண்டு செல்கின்றனர் – அமீர் அலி

(மட்டக்களப்பு)

தமிழ் மக்களை தவறான வழியில் நடத்தும் செயற்பாட்டில் சில தமிழ் அரசியல் தலைவர்கள் ஈடுபட்டு வருவதாக கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 5ஆவது சதொச விற்பனை நிலையத்தின் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பெரிய புல்லுமலையில் குடிதண்ணீர் உற்பத்தித் தொழிற்சாலை ஆய்வு அடிப்படையில் சகலவிதமான சட்ட அங்கீகாரத்துடனேயே ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால், ஒரு சில அரசியல்வாதிகள் தமது அரசியல் நடவடிக்கைக்காக இதனைப் பயன்படுத்தி மக்களை உணர்ச்சிபூர்வமாக பேசி மீண்டும் அரசியல் களத்தில் குதிக்க தீர்மானித்துள்ளனர்.

அண்மைக்காலமாக இத்தகைய குரோதச் செயற்பாடுகளை முடுக்கி விடுவதில் அவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படுகின்றார்கள்.

எனவே, இந்த தருணத்தில் மாவட்டத்தில் வாழும் தமிழ், முஸ்லிம் பொதுமக்கள் மிகவும் பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டும்" என அமீர் அலி கேட்டுக் கொண்டுள்ளார். (மு)

# சமுர்த்தி வங்கிகளில் மோசடி

## யோகேஸ்வரன் எம்.பி குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

சமுர்த்தி வங்கிகளில் 3 ஆயிரத்து 520 மில்லியன் ரூபாய் நிதி சேமிப்பில் இருக்கின்றபோதும், நிதிகளை மக்களுக்கு வழங்காமல் ஒரு சில அதிகாரிகள் அவற்றை துஷ்பிரயோகம் செய்வதாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

நலிவுள்ளோர் சங்கத்தினால் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி வங்கிகளில் பெருந்தொகைப் பணம் கிடப்பில் வைக்கப்பட்டிருக்கின்ற போதும், மக்கள் கூடிய வட்டியில் நுண்கடன் நிதி நிறுவனங்களில் கடன் பெற்று தற்கொலை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சில சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்றவர்களின் பெயர்களில் கடனைப் பெற்று தமது தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றார்கள். சில இடங்களில் போலியாக கையொப்பமிட்டு பணம் பெறப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக சமுர்த்தி சமூக நிதியில் 57 இலட்சம் பணம் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் சமுர்த்தி உத்தியோகத்தர் உட்பட 8 பேர் மீது குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி வங்கிகள் தொடர்பாக ஆராய்ந்து பணத்தை கையாடல் செய்துள்ளவர்கள் தொடர்பாக நடவடிக்கையெடுக்கப்படும் என அமைச்சர் என்னிடம் உறுதியளித்துள்ளார்.

எனவே, மக்களின் பணத்தைக் கொள்ளையடிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்பட வேண்டும் என கூறினார். (மு)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் 369 பேருக்கு வழக்கு தாக்கல்

ஐந்து மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில், 369 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில், கடந்த 16 மற்றும் 17ஆம் திகதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது, சுமார் 40,000 பகுதிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் விசேட வ்வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

இதன்போது, டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய வகையில் சூழலை வைத்திருந்த 1,500 பேருக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள் 35,000க்கும் அதிகமானோர் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.

அத்தோடு, டெங்கு காய்ச்சலினால் இதுவரை 40 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (மு)

## ஞானசார தேரருக்கு இன்று சத்திரசிகிச்சை

சிறைத்தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ள பொது பல சேனா அமைப்பின் பொதுச செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு, இன்று சத்திரசிக்சை செய்யப்படவுள்ளதாக, ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அவரது சிறுநீரகப்பையில் காணப்படும் கல்லை அகற்றுவதற்கான, சத்திரசிகிச்சையானது கடந்த வாரம் செய்யப்படவிருந்த நிலையில், ஞானசார தேரரின் உடல் நிலையில் காணப்பட்ட பலவீனம் காரணமாக, குறித்த சத்திரசிகிச்சையானது பிற்போடப்பட்டது. (மு)

## பிஜியில் கடலுக்கடியில் அதிபயங்கர நிலநடுக்கம்

### சுனாமி எச்சரிக்கை இல்லை


பசுபிக் சமுத்திரத்தில் உள்ள பிஜி மற்றும் டொன்கா தீவுகளுக்கு அருகில் 8.2 ரிக்டர் அளவில் அதிபயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நில நடுக்கத்தினால் இலங்கைக்கு தாக்கம் இல்லை என காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

கடற்பரப்பில், இருந்து 560 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நில நடுக்கம் காரணமாக ஆழிப்பேரலை ஏற்படாது என பசுபிக் ஆழிப் பேரலை எச்சரிக்கை மையம உறுதிப்படுத்தி உள்ளது. (மு)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## கலாச்சாரம்



நம்மொழியில் "கலாசாரம்" (Culture) என்ற வார்த்தை இருக்கிறதே அது "கலை" "ஆச்சாரம்" என்ற இரண்டு சொற்கள் இணைந்து உருவான கூட்டுச்சொல் (Compound-word). இதில் "கலை" என்ற வார்த்தை எப்படி வந்தது என்றால் இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக அறிவின் நுட்பத்தினாலே, கைத்தினாலேயே உருமாற்றி, அழகுபடுத்தி நாம் துய்க்கிறோம் பாருங்கள், அதுதான் கலை.

ஆக மனிதன் வாழ்வே கலைதான். அப்படி இந்தக் கலையின் காரணமாக விளைவு தனக்கோ, பிறர்க்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, அறிவுக்கோ, உடல் உணர்ச்சிகளுக்கோ துன்பம் எழாது விழிப்போடு இருந்து கொண்டு, அளவோடு, முறையோடு கலையை நாம் பழகி வந்தோமானால், அந்த நெறியின் பெயரே "ஆச்சாரம்" துன்பம் எழாமல் காக்கக் கூடிய ஒரு நெறி, ஒரு முறை, ஒரு அளவு, இது எல்லாம் பார்த்தோமானால், அதன் பெயர் ஆச்சாரம் என்று சொல்லுவார்கள். அதனால் கலை + ஆச்சாரம் = கலாச்சாரம் என்றானது.

ஆங்கிலேயர்கள் நமது நாட்டுக்கு வந்த போது பார்த்தார்கள் நல்ல அழகான சொல்லாக இருக்கிறது, நாமும் உச்சரிக்கலாம் என்று எடுத்தவர்கள், இடையிலேயுள்ள நெடிலை விட்டுவிட்டு "Culture" என்று தங்கள் அகராதிக்கு எடுத்துச் சென்றார்கள். "கலாச்சாரம்" என்ற வார்த்தையை வைத்துக் கொண்டு பார்த்தோமானால் எப்பொழுதுமே இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக மாற்றி, அறிவினாலோ, கைத்திறனாலோ, உருமாற்றி அழகுபடுத்தியே துய்த்து வாழக் கூடியவர்களாகவே நாம் இருக்கிறோம்.

## நாட்டை மீட்டெடுக்க நடைமுறையிலுள்ள அரசியல் முறையை மாற்ற வேண்டும்

### ஊவா மாகாணசபை உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாதாளத்தில் விழுந்துள்ள நாட்டை மீட்டெடுக்க வேண்டுமாயின் நடைமுறையில் உள்ள அரசியல் முறையை மாற்ற வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் ஊவா மாகாணசபை உறுப்பினர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நடைமுறையில் உள்ள அரசியல் முறையின் மூலம் நாட்டை மீட்டெடுக்க முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

பதுளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதாளத்தில் விழுந்துள்ள நாட்டை மீட்க நாட்டை நேசிக்கும் புத்திஜீவிகள் உட்பட தேசப்பற்றாளர்களை இணைத்து தேசிய அமைப்பு ஒன்றின் தலைமையில் எதிர்வரும் 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அரசியல் முன்னணி ஒன்றை உருவாக்க போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாடாளுமன்றத்தில் தற்போது உறுப்பினர்களாக அங்கம் வகிக்கும் அரைவாசிக்கும் மேற்பட்டோர் சாதாரண தரப் பரீட்சையில் கூட சித்தியடையாதவர்கள். இப்படி கல்வியறிவு இல்லாதவர்களிடம் நாட்டை ஒப்படைத்ததால் தான், நாடு வெகுவாக பாதிப்படைந்துள்ளது.

இந்த நிலைமையில் இருந்து நாட்டை மீட்க நாடாளுமன்றத்திற்கும், மாகாணசபைகளுக்கும் கல்வி கற்றவர்களையும், புத்திஜீவிகளையும் அனுப்பிவைக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார். (2-9)

# 'மூச்செடுத்த மூன்று வருடங்கள்' மக்களுக்கு காணி உறுதிகள்

(கொழும்பு)

**அரச காணிகளுக்கான அனுமதிப் பத்திரத்தை பெற்றுள்ளவர்களுக்கு நிரந்தரக் காணி உறுதிகளை வழங்கும் பணிகளைத் துரிதப்படுத்தும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

பத்து இலட்சம் காணி உறுதிகளை பகிர்ந்தளிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் மாத்தறை மாவட்ட நிகழ்வு தெனியாய பஸ்கொட பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.


இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கருத்தை வெளியிட்டார்.

தென் மாகாணத்தில் காலி, வெலிகம மற்றும் அம்பாந்தோட்டை பிரதேசங்களில் வர்த்தக வலயங்கள் ஆரம்பிக்கப்படும். தெனியாய மற்றும் காலி பிரதேசங்களை சுற்றுலா வலயங்களாக அபிவிருத்தி செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் மூன்று வருட பூர்த்தியை முன்னிட்டு மூச்செடுத்த மூன்று வருடங்கள் என்ற தொனிப்பொருளின் கீழ் இடம்பெறும் வேலைத்திட்டத்திற்கு அமைவாக மக்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்படுகின்றன.

கேகாலை மாவட்ட நிகழ்ச்சித் திட்டம் இன்று கேகாலை சுதந்திர மாவத்தையில் இடம்பெறும். அங்கு இரண்டாயிரத்து 500 பேருக்கு காணி உறுதிகள் வழங்கப்படும்.

காலி மாவட்ட நிகழ்ச்சித் திட்டம் பத்தேகம பொது விளையாட்டு மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறும். அங்கு நான்காயிரம் காணி உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (2-9)



## வரட்சி நிவாரண உதவிகளை பெற்றுத் தருமாறு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கருநாட்டுக் கேணி பகுதியில் நிலவுகின்ற வரட்சி காரணமாக பாதிக்கப்பட்ட தங்களுக்கு வரட்சி நிவாரண உதவிகளை பெற்றுத்தருமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

கருநாட்டுக்கேணிப் பகுதியில் விவசாயச் செய்கை கள் பாதிக்கப்பட்டுள்ள தாக வும் இதனால் தமது வாழ் வாதாரத்தொழில்கள் எதனையும் செய்யமுடியாத நிலை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ள பிரதேச மக்கள் தமக்கான வரட்சி நிவாரண உதவிகளைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

## பென்டகன் அறிக்கை காங்கிரசிடம் முன்வைப்பு

(கொழும்பு)

அமெரிக்க காங்கிரசிடம், பென்டகன் முன்வைத்த வருடாந்த அறிக்கையில் அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் பாதுகாப்புத் திணைக்களத்தின் தலைமையகமான பென்டகன், தமது வருடாந்த அறிக்கையை கடந்த வாரம் காங்கிரசிடம் முன்வைத்தது.

அதில், சீனா, இராணுவப் பலத்தை கட்டியெழுப்புவது தொடர்பில் விசேட அத்தியாயம் ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளதுடன், உலகின் இராணுவ பலம் மிக்கதாக மாறுவதற்கு சீனா முயற்சிப்பதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஆபிரிக்காவின் ஜிபூட்டி இராச்சியத்தில் இராணுவ முகாம் ஒன்றை அமைத்தல், பாகிஸ்தானுடன் மூலோபாய ஒத்துழைப்பைக் கட்டி எழுப்புதல் என்பன அவ்வாறான நடவடிக்கைகளாகும் என பென்டகன் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் நீண்டகால நட்பு நாடான பாகிஸ்தான், சீனாவின் பக்கம் செல்கின்றமை பென்டகனின் கவனத்திற்கு சென்றுள்ள விடயமாகும்.

அத்துடன், ஆபிரிக்க ஜிபூட்டி இராச்சியத்தில் சீன இராணுவ முகாம் ஒன்று நிறுவப்பட்டு சில மாதங்களின் பின்னர், இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா கைப்பற்றியுள்ளதாக பென்டகனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-9)



வடமாகாண சபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவின் குறித்தொதுக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து வவுனியாவிலுள்ள இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயம், சிதம்பரபுரத்திலுள்ள இமானுவேல் ஐக்கிய திருச்சபை ஆகிய இரு கிறிஸ்தவ ஆலயங்களுக்கு பிளாஸ்ரிக் கதிரைகளை ஆலய பங்குத் தந்தைகளிடம் அண்மையில் வவுனியா பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்ட போது....

## வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் அபிவிருத்தி வேலைகளுக்குத் தடை

### நாளை கண்டனப் பேரணி



(வவுனியா)

நெடுங்கேணி வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் தொல்பொருள் திணைக்களத்தினால் சில அபிவிருத்தி வேலைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஒலுமடு கிராமசேவை பிரிவில் அமைந்துள்ள வெடுக்குநாறி மலை உச்சியில் அமைந்துள்ள ஆதிசிவன் ஆலயத்திற்கு ஏறுவதற்கு புதிய படிப்பாதை ஒன்றை அமைப்பதற்கு ஆலயத்தின் நிர்வாகம் ஏற்பாடு செய்த வேளையில் வவுனியா தொல்பொருள் திணைக்களம் அங்கு சென்று ஆணை அதுதானித்த நிலையில் நெடுங்கேணி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸாரினால் ஆலய நிர்வாகத்தினருக்கு புதிதாக எந்த வேலைகளும் நடைபெறக்கூடாது எனவும் பொலிஸார் உத்தரவு பிறப்பித்ததோடு ஆலயத்தில் சிறிய பூஜைகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கியுள்ளனர்.

அந்த வகையில் தொல்பொருள் திணைக்களத்தினால் இந்து ஆலயங்களுக்கு தடை விதிப்பதை கண்டித்து நாளை 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்கு முன்பாக கண்டன பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது. அனைத்து பொது மக்களையும் மற்றும் அரசியல் தலைவர்களையும் கட்சி பேதமின்றி அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## மன்னார் கற்கிடந்த குளம் கிராமத்தில் இரட்டை மாட்டுவண்டி சவாரிப்போட்டி

மன்னார் கற்கிடந்த குளம் கிராம மக்கள் மற்றும் புனித ஆசைப்பர் விளையாட்டுக் கழகம் இணைந்து அமரத்துவம் அடைந்த மூன்று வீரர்களின் நினைவாக ஏற்பாடு செய்யப்பட்ட இரட்டை மாட்டு வண்டி சவாரிப்போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கற்கிடந்த குளம் கிராம மைதானத்தில் இடம் பெற்றது.

குறித்த இரட்டை மாட்டு வண்டி சவாரிப் போட்டியின் போது வடக்கு மாகாணத்தில் இருந்து 32 சோடி காளைகள் போட்டியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

இதன் போது வெற்றி பெற்றவர்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மாட்டு வண்டி சவாரிப்போட்டியை ஊக்கு விக்கும் வகையிலும் அமரத்துவம் அடைந்த மூன்று வீரர்களையும் நினைவு கூரும் வகையிலும் குறித்த இரட்டை மாட்டு வண்டி சவாரிப்போட்டி இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2)

## முரண்பாடுகள் ஏற்படாமல் இருக்க நாயாற்றில் பொலிஸ் பாதுகாப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாற்று பகுதியில் கடந்த 13 ஆம் திகதி தமிழ் மீனவர்களின் வாடி எரிக்கப்பட்டுள்ளமையை தொடர்ந்து அந்த பகுதியில் மீன்பிடி தொழில் நடவடிக்கையினை மேற்கொண்ட தெற்கைச் சேர்ந்த தொழிலாளி ஒருவர் தலைமையின் கீழ் தொழில் செய்துவந்த முப்பதிற்கு மேற்பட்ட படகுகளும் தொழிலாளர்களும் பொலிஸாரின் பாதுகாப்புடன் வெளியேறியுள்ளார்கள்.

நாயாற்று பகுதியில் 400 இற்கும் மேற்பட்ட தெற்கினை சேர்ந்த தொழிலாளர்கள் தொழில் செய்து வருகின்றார்கள்.

இவ்வாறான நிலையில் நாயாற்று பகுதியில் கலவரம் ஏற்படாத வகையில் தொடர்ச்சியாக இரவு பகலாக பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இரண்டு பகுதியைச் சேர்ந்தவர்களும் இந்த பிரதேசத்தில் வாழ்ந்து வருவதால் முரண்பாடுகள் ஏற்படாத வகையில் பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-315)

## புலிகள் குறித்த கருத்து...

உரையாற்றிய விஜயகலா மகேஸ்வரன், இராஜாங்க அமைச்சர் பதவியை இழந்தார். அவருக்கு எதிரான நடவடிக்கை குறித்து விசாரணைகளும் நடத்தப்பட்டன.

இந்தநிலையில், கொழும்பு ஆங்கில ஊடகமான சிலோன் டுடேக்கு கருத்து வெளியிட்டுள்ள விஜயகலா மகேஸ்வரன்,

நான் எதனைக் கூறினேனோ அதே நிலைப்பாட்டில்தான் இருக்கிறேன். நான் கூறிய கருத்தை விலக்கிக் கொண்டு எனது கௌரவத்தையும் மரியாதையையும் இழக்கமாட்டேன்.

விசாரணை அறிக்கை குறித்து நான் ஆர்வம் கொண்டிருக்க்வில்லை. ஆனால் ஊடகங்கள் அதில் ஆர்வம் காட்டுகின்றன.

எனக்கு எதிராக எந்த நடவடிக்கை எடுத்தாலும் அதனை வரவேற்பேன். அதற்கு அச்சப்படமாட்டேன். என் மீது நம்பிக்கை கொண்ட மக்களுக்காக தொடர்ந்து பணியாற்றுவேன்.

நான் தமிழ் மண்ணில் பிறந்தேன். தெற்கிலுள்ள மக்கள் எங்களுடன் வாழ்ந்திருந்தால், அவர்களும் நான் கூறிய உணர்வுகளையே வெளிப்படுத்தியிருப்பார்கள்.

இன்னும் பல முக்கிய அரசியல்வாதிகள் விசாரணைக்காக வரிசையில் இருக்கிறார்கள். என்மீதான விசாரணையும் அத்தகைய ஒன்றுதான். அதுபற்றி நான் கவலைப்படவில்லை.

விடுதலைப் புலிகளின் காலத்தில் தமிழ் மக்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் இப்போது எப்படி வாழ்கிறார்கள் என்பதைத் தான் நான் வெளிப்படுத்தினேன்.

அப்போது வன்புணர்வு, சிறார் வன்புணர்வு, பாலியல் துன்புறுத்தல்கள், போதைப் பொருள்கள், கொலைகள், கொள்ளைகள் பற்றி நாம் கேள்விப்பட்டதில்லை.

ஆனால் இப்போது அதற்குள் தள்ளப்பட்டிருக்கிறோம். நான் இதனை வெளிப்படுத்தியது மற்றவர்களுக்கு கவலையை ஏற்படுத்தியிருந்தால் அது என்னுடைய தவறு அல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார். (மு-1)

## இந்திய வீட்டு...

நிலவி வரும் நிலையில், இது தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பாக அதன் ஊடக பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனிடம் வினாவியபோது,

இது தொடர்பாக சுமந்திரன் தெரிவித்திருப்பதாவது,

சீன நிறுவனமும் 40 ஆயிரம் வீடுகளை அமைப்பதாக தனது திட்ட முன்மொழிவை கொடுத்துள்ளது. ஆனால் அது கல் வீடல்ல. கொங்கீறிட் போன்ற ஒன்றால் அமைக்கப்படும் வீடாகும். ஆனால் இந்தியா அதே பணத்திற்கு கல் வீட்டுத் திட்டத்தை அமைப்பதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளது.

எமது மக்களுக்கு கல் வீடே விருப்பம். எனவே, இந்தியாவுடன் பேசி அவ் வீட்டுத் திட்டத்தை செய்யுமாறு அரசாங்கத்திற்கு நாம் தெரிவித்துள்ளோம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது கல் வீட்டுத் திட்டத்தை தான் விரும்புகின்றது. அதனை தான் எமது மக்கள் விரும்புகின்றார்கள். எனவே கல் வீட்டுத் திட்டத்தை இந்தியாவோ சீனாவோ இல்லை ரஷ்யாவோ, யார் கல் வீட்டினை கட்டினாலும் நாம் ஏற்றுக் கொள்வோம். எமது மக்களுக்கு தேவையான விருப்பமான கல் வீட்டுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தான் கூட்டமைப்பின் நிலைப்பாடு.

இந்நிலையில் தற்போது மக்கள் விரும்புகின்ற கல் வீட்டுத் திட்டத்தினை இந்தியாவே முன்வைத்துள்ளது என தெரிவித்துள்ளார். (மு-1)

## அரசாங்கத்தின்...

மூலம் மட்டுமே சிங்கப்பூர் உடனான உடன்படிக்கையை இரத்துச் செய்ய முடியும்.

கடந்த மூன்றாண்டுகள் மிகவும் தோல்வியான ஆண்டுகள். இந்த மூன்று ஆண்டுகளில் நாட்டில் சகல இடங்களிலும் ஆர்ப்பாட்டங்களும், பணிப்புறக்கணிப்புகளுமே நடந்தன என்றார் அவர். (மு-1)

## காரைநகரில் மோதலை...

ருளியின் சாரதிக்கு தாக்கியுள்ளனர்.

இந்தநிலையில் உந்துருளியில் வந்தவரின் உறவினர் ஒருவர் இடையில் வந்து மோதலை நிறுத்த முயற்சித்துள்ளார்.

எனினும் அவரும் மோதலினால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார்.

இவர்களை தாக்கிய குழுவினர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து காயங்களுக்கு உள்ளான இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் உறவினர் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-1)

## புலிகளுக்கு எதிராக...

வழங்கியதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் இந்திய பிரதமர் வாஜ்பாயின் மறைவையொட்டி, கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு நேற்று காலை விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அங்கு வைக்கப்பட்டிருக்கும் இரங்கல் குறிப்பிடும் ஏட்டில் தனது இரங்கலை பதிவு செய்தார்.

இதன் பின்னர் கருத்து வெளியிடும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறியுள்ளார். இலங்கைக்கு கஷ்டமான காலங்களில், அவர் எப்போதும் எமக்காக பேசினார்.

குறிப்பாக இலங்கையுடனான நட்புறவை பாதுகாத்து கொள்ள வேண்டும் என அவர் கூறினார். எதிர்க்கட்சித் தலைவர்கள் என்ற வகையிலும் நாங்கள் இருவரும் சந்திக்க சந்தர்ப்பம் கிடைத்தது.

அவர் பிரதமராக பதவிக்கு வந்த பின்னரும் எமது தொடர்புகள் தொடர்ந்தன. பிரதமர் வாஜ்பாய் தனது தொலைபேசி இலக்கத்தையும் எனக்கு வழங்கியிருந்தார். அவ்வப்போது நாங்கள் அரசியல் பற்றி பேசினோம்.

இதற்கு முன்னர் நான் பிரதமராக பதவி வகித்த நேரத்தில் விடுதலைப் புலிகள் பலமாக இருந்தனர். அப்போது யாழ்ப்பாணத்தில் நாங்கள் பாரியளவில் பின்னடைவை சந்தித்திருந்தோம். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தது.

அப்படியான பின்னணியில் இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்த அவர் உதவினார்.

அந்த ஒத்துழைப்பு எமக்கு கிடைக்காது போயிருந்தால், அடுத்த கட்ட நடவடிக்கைகளை எம்மால் எடுக்க முடியாமல் போயிருக்கும். கடற்புலிகளின் வருகையை தடுத்து நிறுத்த வாஜ்பாயின் உதவி எமக்கு கிடைத்தது.

வாஜ்பாய் இலங்கை தொடர்பில் மிகவும் அக்கறை கொண்டு செயற்பட்ட தலைவர் என்பதை கூற வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (மு)

## ஆசிரிய மாணவி...

வர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

விசுவமடு மேற்கை சேர்ந்த, அழுத்கம கல்வியியற்கல்லூரி 2 ஆம் வருட மாணவி சிவலிங்கம் லிந்தியா (வயது 23) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 14ஆம் திகதி ஆசிரிய மாணவர்களுடன் யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா வந்துள்ளார். 15ஆம் திகதி காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார். அன்றைய தினம் முழுவதும் காய்ச்சல் தொடர்ச்சியாக இருந்ததால் 16ஆம் திகதி பரந்தனில் உள்ள அவரது வீட்டில் விட்டுவிட்டு ஏனையவர்கள் கல்லூரிக்கு சென்றுள்ளனர்.

அப்போது கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது. மேலதிக சிகிச்சைக்காக அன்று மாலை யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்று முன்தினம் மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.- (மு-9)

## சட்ட நடவடிக்கை...

மன்றம் விஜயகலா மகேஸ்வரன் விடயத்தில் ஏதேனும் நடவடிக்கையினை மேற்கொள்ள தீர்மானித்திருப்பினும் அதனை நாடாளுமன்ற நிலையியல் கட்டளை சட்டத்தின் கீழ் மேற்கொள்ளுமாறும் சட்டமா அதிபர் திணைக்களம் சபாநாயகருக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் உருவாக்கப்பட வேண்டும் என விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த கருத்து தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்கு மூலம் உள்ளிட்ட அறிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் அண்மையில் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தனர்.

இது தொடர்பில் 59 பேரிடம் வாக்கு மூலங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை தடுக்கும் பிரிவு நீதிமன்றத்தில் அறிவித்திருந்தது.

அத்துடன், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆறு பேரிடமும், அரசாங்க அதிகாரிகள் 14 பேரிடமும் மற்றும் 30 ஊடகவியலாளர்களிடமும் வாக்கு மூலங்கள் பெறப்பட்டன.

இதனை ஆராய்ந்த நீதிமன்றம் குறித்த வழக்கை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு)

## நாயாற்றில் எரிக்கப்பட்டுள்ள...

களுக்கு யாழ் வர்தக சங்கத்தினரால் உலர் உணவு பொருட்கள் ஒருதொகுதி து.ரவிகரன் ஊடாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அவர் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது மீனவ மக்கள் ஒன்றும் யோசிக்கத்தேவையில்லை. மாகாணசபை உறுப்பினர் ஆகிய நான் மக்களுடன் இருக்கின்றேன். மீனவர்களின் அழிவு சம்பந்தப்பட்டவர்களுக்கு போய் சேர்வதற்கான ஒழுங்கு முறை இருக்கின்றது. இந்த அழிவிற்கான நட்ட ஈடுகள் கிடைப்பதற்கான முயற்சிகளில் நான் தொடர்ந்தும் ஈடுபடுவேன். நாயாறு மக்களின் ஒற்றுமை உறுதி தன்மை இன்று மக்கள் மத்தியில் பரவலாக பேசப்படுகின்றது.

உழைத்து சாப்பிடும் மக்கள் நாங்கள் ஆனால இந்த சம்பவத்தில் ஏற்பட்ட இழப்பீடு எங்களுக்கு பெற்றுத்தரவேண்டும் என்றும் து.ரவிகரன் அவர்கள் தெரிவித்துள்ளார். (மு-281)

## கொழும்பில் எம்மவர்...

யாழ்ப்பாணம் ஆத்திசூடி வீதியில் அமைந்துள்ள கலைமகள் சனசமூக நிலையத்தில் 65ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் இலகு கடன்களை அறிமுகப்படுத்தி வருகின்றார்கள். ஆனால் கடன் வாங்கி வாழும் முறையை எமது மக்கள் பலர் வரவேற்பதில்லை. அதனால் அவர்கள் சிந்தனைகள் வித்தியாசமாக அமைந்திருப்பதைக் காணலாம். கிராமிய ரீதியாக ஒவ்வொரு கிராம மக்களும் தங்கள் தங்கள் ஆடம்பர வாழ்க்கை முறைமைகளைத் தவிர்த்து எளிமையான வாழ்க்கை முறைக்கு திரும்புவதன் மூலமும் உற்பத்தியை பெருக்க உழைப்பதன் மூலமும்சுகமானதும் சுதந்திரமானதுமான ஒரு வாழ்க்கை முறைமையை முன்னெடுக்கலாம் என்று அவர்கள் நம்புகின்றார்கள். இந்த வழி ஆரம்பத்தில் சற்றுக் கசப்பாகக் கூட அமையக்கூடும். ஆனால் தூரநோக்கின் அடிப்படையில் இது எமக்கு பல வெற்றிகளை அள்ளித்தருவன என்று நம்பலாம்.

ஸ்ரீமாவோ ஆட்சிக் காலத்தில் இருந்த போது மேற்கொள்ளப்பட்ட விவசாயப் புரட்சி யாழ்.மாவட்ட மக்கள் பலரைவிசுவமடு போன்ற பகுதிகளில் கடுமையான விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட உந்தித்தள்ளியது. அக் காலப்பகுதியிலேயே வடபகுதியின் பல்லாயிரக்கணக்கான மண் வீடுகள் கல்வீடுகளாக உருமாறின. அன்று எமது விவசாயிகள் மிளகாய்ப் பயிர்ச்செய்கையில் காட்டிய ஆர்வமும் ஊக்கமும் முழு இலங்கை மக்களையும் திரும்பிப் பார்க்க வைத்தது.

வெளிநாடுகளில் வசிக்கின்ற எமது உறவுகள் இங்கு வருகைதருகின்ற போது தமக்கு மிக வசதியான நாட்களைத் தெரிவு செய்து கொண்டே இங்கு வருகைதருவார்கள். அதேநேரம் எமது பிள்ளைகள் அக்காலப் பகுதியில்தான் அவர்களது க.பொ.த உயர் தரப் பரீட்சைக்கான இறுதி ஆயத்த முயற்சிகளிலோ அல்லது பரீட்சைகளிலோ தோற்றிக் கொண்டிருப்பார்கள்.

வருகின்ற உறவினர்களுக்கு அதைப் பற்றியெல்லாம் கவலை இல்லை. அவர்கள் மூன்று கிழமை மட்டில் இங்கு வந்து தங்கியிருந்து அரட்டை அடித்து உல்லாசமாக பொழுதைப் போக்கிவிட்டு திரும்புகின்ற போது அவர்களை ஆதரித்த நன்றிக் கடனுக்காக அந்த வீட்டுப் பையனுக்கு மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு மூன்று லட்சம் ரூபாய் பணத்தைக் கொடுத்துவிட்டுச் செல்வார்கள். அப்பணத்தை வேண்டி மோட்டார் சைக்கிள் வாங்கிவிட்டு பின்னர் அதற்குப் பெற்றோல் நிரப்புவதற்கே பணமின்றி சிரமப் பட்டுப் கொண்டு திரிவார்கள். நான் இங்கு எதனையும் மிகைப்படுத்திக் கூற வில்லை. நான் இங்கு அறிந்து கொண்டுள்ள யதார்த்தத்தை மட்டுமே எடுத்துக் கூறுகின்றேன். மூன்று லட்சம் ரூபா மோட்டார் சைக்கிள் வாங்கினால் அதற்குப் பெற்றோல் அடிக்கப் பணம் இல்லை. ரூ50,000 கைத்தொலை பேசி வாங்குகின்றார்கள். ஆனால் தொலைபேசியில் பேசுவதற்கு காசு இல்லை. இது தான் இன்றைய இளைஞர்களின் நிலை. இந்த இழிநிலைகள் மாற்றப்பட வேண்டும். இளைஞர்களை சக்தி மிக்கவர்களாக, கல்வியில் மேம்பட்டவர்களாக, உழைப்பாளிகளாக, நாட்டின் வருங்காலத் தலைவர்களாக மாற்றுவதற்கு முயல வேண்டும். பொதுவாக எந்தவொரு பொருளும் இலவசமாக எமக்குத் தேவையில்லை என்ற சிந்தனை மேலோங்கச் செய்ய வேண்டும். ஆனால் இலவசமாகக் கிடைத்தால் அது வருங்கால மேம்பாட்டுக்கு உதவ வேண்டுமே ஒளிய நுகர் பொருட்களை வாங்கிபணத்தை விரயம் செய்ய இடமளித்தலாகாது.

ஆகவேதான் மற்றவர்களின் உதவியை எதிர்பார்த்திருப்பது ஈற்றில் எம்மை சோம்பேறிகளாக்கும் அல்லது சோரம் போனவர்களாக்கும். இன்று நாம் வஞ்சிக்கப்பட்டிருக்கும் நிலைக்குக் காரணம் நாங்களே. நாங்கள் உதவிகள் பெறும் போது எமக்குதவுபவர்கள் எம்மிடம் எதனை எதிர்பார்க்கின்றார்கள் என்று ஆராய வேண்டும். அரசியல் ரீதியாகப் பார்த்தோமானால் நாங்கள் எங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களில் எதைக் கூறியிருப்பினும் அவற்றை நாம் விட்டுக் கொடுக்க வேண்டும் என்றே இவ்வாறு உதவி புரிபவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். கொழும்பில் எம்மவர் விட்டுக்கொடுக்கும் பெருந்தன்மையின் சூட்சுமம் பற்றி இப்பொழுது நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்றார். (மு)

## மைதானத்திற்கான அடிக்கல் நாட்டு விழா



2018ஆம் ஆண்டிற்கான காரைநகர் பிரதேச பிரிவிற்குட்பட்ட சிரமசக்தி வேலைத் திட்டத்தின் கீழ் தோப்புக்காடு இளைஞர் கழக மைதான புனரமைப்பு செயற்றிட்டத்திற்கான அடிக்கல நாட்டு விழா கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்றது. இதில் பிரதேச சபை உறுப்பினர், இளைஞர் சேவை உத்தியோகத்தர், கிராமசேவகர், காரைநகர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் விளையாட்டு கழக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (மு-78)


நீரோகா
திகதி 2018/08/19
சீட்டிழுப்பு இலக்கம் 435
லக்கினம்: மீனம் | வெற்றி இலக்கங்கள்: 36 37 49 63 | 15
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.08.19
சீட்டிழுப்பு இலக்கம் 1856
ஆங்கில எழுத்து: V | வெல்லப்பட்ட இலக்கங்கள்: 13 69 72 73
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2018-08-19
சீட்டிழுப்பு இலக்கம் 38
ஆங்கில எழுத்து: O | வெற்றி இலக்கங்கள்: 01 28 33 73
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2018/08/19
சீட்டிழுப்பு இலக்கம் 3727
ஆங்கில எழுத்து: X | வெல்லப்பட்ட இலக்கங்கள்: 3 4 5 0 7 6
தேசிய லொத்தர் சபை

ண்டு கட்சிகளும் அரசாங்கத்தில் இருப்பது இதுவே முதல் முறையாகும்.

அதுமட்டுமன்றி சகல அரசியல் கட்சிகளும் இதில் பங்கேற்றுள்ள நிலையில், இந்த சந்தர்ப்பத்தை ஒருபோதும் தவறவிடக் கூடாது என சுமந்திரன் எம்.பி மேலும் கூறினார்.(மு)

## சகலருக்கும்...

பைக் கொண்டிருந்த போதிலும், ஒரு சமூக ஒப்பந்தத்தைக் கூட கொண்டிருக்க வில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தெற்கைச் சேர்ந்த 6 முதலமைச்சர்களால் பரிந்துரைக்கப்பட்ட அதிகார பரவலாக்க திட்டமே முன்வைக்கப்பட்டுள்ளது.

அதில் 7 ஆவது முதலமைச்சர், ஆளுநர் பதவியை இல்லாதொழிப்பது தொடர்பில் கூறியிருந்தார். எனினும் அதனை நாங்கள் புதிய அரசியலமைப்பில் உள்ளடக்கவில்லை.

எனவே முன்மொழியப்பட்ட சமூக ஒப்பந்தத்தின் பிரதான நோக்கம், பிரிக்கப்படாத ஒரே நாட்டினுள் இலங்கையில் வசிக்கும் சகலருக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதே ஆகும்.

இந்தநாட்டில் கூட்டாட்சியை முதலில் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்க அறிமுகப்படுத்தினார். இந்நிலையில் அவ்வாறு அமையப் பெற்ற பிரதான இர

# மரண அறிவித்தல்

தோற்றம் 12 02 1942



மறைவு 19 08 2018

## திருமதி இராசரத்தினம் செல்லக்கண்டு

யாழ்.வடமராட்சி துன்னாலை, இந்திரம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் செல்லக்கண்டு அவர்கள் நேற்று (19.08.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் விநாயகமூர்த்தி - சவுந்தரம் தம்பதிகளின் பாசமிகு மகளும், அமரர் செல்லையா இராசரத்தினம் அவர்களின் அன்புத் துணைவியாரும், சோதிமணி, காலஞ்சென்றவர்களான பொன்னையா, சம்பந்தபிள்ளை மற்றும் சறோஜினிதேவி, வசந்தநாயகி, சாந்தநாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அமரர் கணபதிப்பிள்ளை, அமரர் வசந்தமல்லிகா, சறோஜினிதேவி, அமரர் அருளானந்தம், காண்டீபன், சிவானந்தம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற செல்வரத்தினம், தர்மரத்தினம் (ஜேர்மனி), செல்வரஞ்சிதம், புஸ்பரஞ்சிதம் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயராணி (ஜேர்மனி), சற்குணராஜா (பிரதிக்கல்விப் பணிப்பாளர், மாகாணக்கல்வித் திணைக்களம்), சிறீஸ்கந்தராஜா ஆகியோரின் மாமியாரும், கௌரீசன், தர்சிகா, தனுசிக்கா, சர்மிளா, சரண்யா, சஜீவ், சாஜீஸ் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2018) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தியான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இந்திரம்மன் கோவிலடி,
துன்னாலை, கரவெட்டி. (சி-3559)

தகவல் : குடும்பத்தினர்
0777734458, 0775406266

10 வருட கல்வி - தொழில் - விசா சேவையில் உங்கள் நம்பிக்கையின் சிகரம் தரும்
நியூசிலாந்து மலேசியா வேலைவாய்ப்புக்கள்
தொழிற்சாலை பணியாளர் (மலேசியா), அலுமினியம் ஃபிற்றர், வாகன பெயின்ரர், கட்டட பணியாளர், படகு கட்டுமான பணியாளர், தேனீ வளர்ப்போர், தோட்டப் பணியாளர், தச்சுவேலையாட்கள், மின்னிணைப்பாளர், காப்பெற் விரிப்பாளர், மின்னிணைப்பாளர், தையல் பணியாளர், பேக்கறி பணியாளர், பிற்சா தயாரிப்பாளர், சமையல் பணியாளர், குழாய் பொருத்துநர், மோட்டார் சைக்கிள் மற்றும் வாகன மெக்கானிக், ஆரம்ப பாடசாலை மற்றும் விசேட தேவையுடையோருக்கான ஆசிரியர்
உட்பட 50க்கு மேற்பட்ட வேலைவாய்ப்புக்கள்
விளக்கக் கருத்தரங்கும் நேர்முகத் தேர்வும்
22-08-2018 புதன்கிழமை பிற்பகல் 2 மணி
கல்விச் சான்றிதழ்கள், தொழில் அனுபவ கடிதங்கள், கடவுச் சீட்டு என்பவற்றுடன் நேரில் வரவும்
விபரங்களுக்கு 0777 324 004
10வது ஆண்டில் கால்பதிக்கும் SIKARAM ACADEMY Business - Hospitality - English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
இல. 221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்
021 - 222 00 11
(சி-3563)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg
DELIVERY IN 3-5 DAYS
மானிப்பாய் 0768226240 V2 TRAVELS
யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி
நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 01.09.18 சனி 8 மணி.
181, பிரதான வீதி, நெல்லியடி 021 320 2973 ஆரம்பம் 03.09.18 மாலை 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
(C-3545)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
(5327)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(சி-3488)

இறை ஆசியுடனும்...! வாடிக்கையாளரின் பேராதரவுடனும்...!
வெற்றிகரமாக 9-வது ஆண்டின் காலடியில்...
புதுப்பொலிவுடன் நல்லூரில்...
SRI MARUTHI PRINTERS ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ்
021 454 5044
நவீனரக திருமண அழைப்பிதழ்களின் காட்சியறை
சகல விதமான டியிற்றல் வகையான துல்லியமான அச்சுப்பதிப்புக்கள்
நவீனரகமான வடிவமைப்புக்கள்
அன்பளிப்பு, பரிசுப்பொருட்களுக்கான அச்சுப்பதிப்புகள்
சகல விதமான அச்சகப் பதிப்புக்களையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவும்
இல.555, நாவலர் வீதி, (கைலாச பிள்ளையார் கோவில் அருகில்) நல்லூர்.
தொடர்புகளுக்கு: 077 791 7680
(5415)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.